# ஆரோக்கியமான உபதேசம்

# Sound Doctrine

J.C. சோட்

E.Z.S. ராஜநாயகம் / B. பென்னி மார்ட்டீன்

Published by

**Tamil World Evangelism**

278, Dharapuram Road, Kangayam -638 701.

Tamilnadu, India.

Phone : 04257 - 230030, cell : 98427 30382.

e-mail : rajarichal@yahoo.co.in

# Sound Doctrine


Author : J.C. CHOATE



Copy Right Reserved © 2019



First Printing : October 2019

Copies : 2000

Language : Tamil

Translation : E.Z.S. Rajanayagam/
B. Benny Martin

Proof - Reading Assistance : M. Samidurai

பிரதிகளுக்கு
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
278, தாராபுரம் ரோடு
காங்கயம் - 638 701,
இந்தியா.

# அர்ப்பணம்

இந்நூலை, கடந்த 1968 -ம் ஆண்டு முதல் இந்திய தேசத்தின் நற்செய்திப் பணியில் எங்களோடு இணைந்தும், இசைந்தும் பணியாற்றி வரும் அன்புச் சகோதரர்கள் சன்னி டேவிட், ப்ரான்சிஸ் டேவிட், ஜோசுவா கூத்தம், P.R. சுவாமி, S. ராஜநாயகம், P.K. வர்கீஸ், B. அர்ச்சுணன் மற்றும் P.C. பிலமோன் ராஜா போன்றோருக்கு அர்ப்பணிக்கிறேன்.

நற்செய்திப் பணியின் உடன் வேலையாட்களாக தேவனோடும், எங்களோடும் இணைந்து தொலைக்காட்சி, வானொலி, இலக்கியங்கள் மூலமாகவும் மற்றும் நற்செய்திக் கூட்டங்கள், தனிப்பட்ட வேதபாட வகுப்புகள் வாயிலாகவும் ஆரோக்கியமான உபதேசத்தை எடுத்துச் சென்ற இவர்களுக்கு நாங்கள் நன்றி சொல்லுகிறோம். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட புதிய வானத்திலும், புதிய பூமியிலும் மகிமையானதொரு சந்திப்பை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளும்படியாய் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக!

பெட்டி பார்ட்டன் சோட்
செப்டம்பர் 1,2017.

# பதிப்பாசிரியர் உரை

எருசலேம் மாநகரில், பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு அப்போஸ்தலனின் மகாபிரசங்கத்தின் செய்திக்குத் தங்களைக் கீழ்ப்படுத்தின அந்த மூவாயிரம் பேரின் பக்தி நிலை குறித்துத் தேவன் இப்படியாக வெளிப்படுத்தியுள்ளார். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று (அப்.2:42). ஆம், ஆதிக்கிறிஸ்தவர்கள் "உபதேசத்தில்" உறுதிகாட்டித் தங்கள் பக்தி வாழ்வை நடத்தியிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

ஆனால், இன்றைய கிறித்தவமோ உபதேசத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் அவசியமில்லை என்று எண்ணுகிறது. பொத்தாம் பொதுவான ஒரு கிறித்தவ வாழ்வே பரலோகத்தைச் சுதந்தரிப்பதற்குப் போதுமானது என்று தப்புக் கணக்குப் போடுகிறது. இப்படிப்பட்ட எண்ணத்தால் பாதிக்கப்பட்டு, மெய்க் கிறிஸ்தவ வாழ்வைப் போலியாக நடத்த முற்பட்டவர்களுக்கு முதல் நூற்றாண்டின் இறுதியில் கொடுக்கப்பட்ட தேவ எச்சரிப்பைப் பாருங்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ, பிதாவையும், குமாரனையும், உடையவன் என்று (II யோவான் 9)

அப்படியானால், உபதேசத்தில் குறைபாடுள்ள ஒரு பக்தி வாழ்வில் தேவனும், குமாரனும் இல்லாமல் போய்விடுகிறார்கள். புரிகிறதா? பிதாவும், குமாரனும் இல்லாத ஒரு பக்தி வாழ்வு நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லும் என்று நம்புகிறீர்களா? சொல்லுங்கள்.

கிறித்தவத்தில் காணப்படும் உபதேசக் குறைபாடுகள் களையப்பட்டு, பிதாவிலும், குமாரனிலும் அன்பு கூரும் ஒவ்வொரு வரும் பரலோக பாக்கியம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற பெரு நோக்கில், "ஆரோக்கியமான உபதேசம்" என்னும் இந்நூல் வெளியிடப்படுகிறது.

கவனமாகப் படித்துத் தெளிவடைந்து, மெய் கிறித்தவ நெறியில் மேம்பட்டு, இம்மையிலும், மறுமையிலும் தேவ ஆசீர்வாதத்துக்கு உகந்தவர்களாக வாழ உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

நன்றி

அக்டோபர் 7. 2019
காங்கயம் – 638701

கிறிஸ்துவின்
இராஜ்ஜிய உபதேசப் பணியில்

E.Z.S. ராஜநாயகம்

# முன்னுரை

ஆவிக்குரிய வாழ்வில் ஆரோக்கியமான காரியங்கள் பற்றி அப்போஸ்தலன் பவுலடியார் தீமோத்தேயு போன்றவர்களிடம் திரும்பத் திரும்பப் பேசுகிறார். அவைகளில் ஒன்று ஆரோக்கியமான உபதேசம். ஆரோக்கியமான உபதேசம் என்றால் என்ன? இது ஆரோக்கியமான போதனை அல்லது வேத வசனங்களின்படியான போதனை. கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் மட்டுமே அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து, அவருக்கு உண்மையாயிருக்கவும், அவரைப்பற்றி பிறருக்கு அறிவிக்கவும் எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள் என்பது இயல்பான ஒன்று.

இதுதான் இப்புத்தகத்தில் பதியப்பட்டிருக்கும் கருத்து. வேதாகமம் தாங்கி இருக்கும் உண்மையான, ஆரோக்கியமான உபதேசத்தை எடுத்து ரைப்பதே இந்நூலின் முயற்சி. தேவன் இதைத்தான் நீங்கள் செய்யும்படி விரும்புகிறார் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும்படியான ஒரு முயற்சியே இந்நூல். இது உண்மையை உறுதி செய்கிறது. தீமையைக் கண்டிக்கிறது. இதன் மூலம் தேவனுடைய வழியைத் தூக்கிப் பிடித்து மனித உபதேசத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

வேதாகமத்தின் துணையோடு இந்நூலை நீங்கள் வாசித்துப் படிக்கும்படியாக உங்களுக்கு அழைப்பு விடுக்கிறாம். கர்த்தருடைய வார்த்தைகளோடு ஏதாவது ஒரு உபதேசம் முரண்படுமானால் அது ஆரோக்கியமற்றதென்று நாம் ஒதுக்கித் தள்ள வேண்டும். இந்நூலில், கர்த்தருடைய உபதேசம் என்னவென்று எடுத்துரைக்கவோ, அதற்குக் கீழ்ப் படிய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தவோ நாங்கள் தவறவில்லை.

J.C. சோட்

ஜூன் 26, 2007

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தேவனுடைய பிரமாணம் | 1 |
| 2. | மன்னிப்பு | 9 |
| 3. | இன்று நமக்குத் தேவையான அன்பு | 14 |
| 4. | தேவனுடைய கிருபை | 17 |
| 5. | ஒருவருடைய ஜெபத்தின் மூலம் ..... | 21 |
| 6. | உங்கள் கேள்வித்திறன் எப்படி? | 26 |
| 7. | கர்த்தருடைய ஜெபம் | 29 |
| 8. | பாவ மன்னிப்பு | 33 |
| 9. | புதிய பரிசேயர்களும், சதுசேயர்களும் | 35 |
| 10. | தேவ வார்த்தைகளோடு நீங்கள் வாதிட முடியாது | 42 |
| 11. | எந்த சபை சரியானது? | 45 |
| 12. | வேதாகம ஞானஸ்நானம் | 48 |
| 13. | ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஆராதனை | 51 |
| 14. | கிறிஸ்தவத்தின் செல்வாக்கு | 54 |
| 15. | சத்தியத்தை நேசித்தல் | 57 |
| 16. | ஒருவர் சபை அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட ..... | 62 |
| 17. | வீட்டு சபை | 65 |
| 18. | பட்சபாதமுள்ளவரல்ல | 69 |
| 19. | தேவனுடைய வார்த்தையின் வல்லமை | 72 |
| 20. | பரிணாமக் கொள்கை | 75 |
| 21. | பிரசங்கத்தின் வல்லமை எங்கே இருக்கிறது? | 78 |
| 22. | நீங்கள் கிறிஸ்துவின் சபையின் ..... | 81 |
| 23. | வேதாகமம் ஓர் அறிமுகம் | 85 |
| 24. | புதிய ஏற்பாட்டு ஒற்றுமை | 90 |
| 25. | வாரத்தின் முதல்நாள் | 95 |
| 26. | விசுவாசத்தினாலே இரட்சிப்பு | 99 |
| 27. | மதத்தின் பெயராலே ஜனங்கள் செய்யும் ..... | 103 |
| 28. | பிசாசுகளைத் துரத்துதல் | 107 |
| 29. | குற்றங்களை அறிக்கையிடுதல் | 116 |
| 30. | கிறிஸ்தவம் ஓர் அந்நிய மார்க்கமா? | 120 |
| 31. | நற்செய்தியின் வல்லமை | 124 |
| 32. | அற்புதங்கள் எங்கே? | 128 |
| 33. | கிறிஸ்தவர்களாக இல்லாத கொஞ்சம் பேர் | 137 |
| 34. | சபை சரித்திரம், சுருக்கமாக | 140 |
| 35. | மகத்தான நியாயத்தீர்ப்பின் நாள் | 145 |
| 36. | வேதாகமம் நரகம் பற்றி பேசுகிறது | 148 |
| 37. | வேதாகமம் பரலோகம் பற்றி பேசுகிறது | 152 |
| 38. | இயேசு யார்? | 156 |

பாடம் - 1

# தேவனுடைய பிரமாணம்

## The Law of God

பிரமாணம் அல்லது சட்டம் என்பது, ஓர் ஆளுகை அதிகாரம் மற்றும் ஒரு எல்லைக்குட்பட்ட பழக்க வழக்கங்களினால் ஏற்படுத்தப்படும் நடத்தை விதியாகும். இத்தகைய விதிகளின் ஒட்டுமொத்த அமைப்பும், இவ்விதிகளை அமுல்படுத்தக் கொண்டுவரப்படும் கட்டுப்பாடுகளும் பிரமாணம் அல்லது சட்டம் எனப்படும். வேதாகமத்தில் பெரும்பாலும் பிரமாணம் என்பது மோசேயின் பிரமாணத்தையே குறிக்கிறது (யோவான் 1 :17). புதிய பிரமாணமாக இருந்தாலும் அல்லது பழைய பிரமாணமாக இருந்தாலும் எல்லாமே தேவனிடத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது. அதுமாத்திரமல்ல, துணைச் சட்டங்களும் தேவனைத் தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது. இவ்வுலகிலுள்ள கிராமங்கள், பட்டணங்கள் மற்றும் தேசங்களில் கடைப்பிடிக்கப்படும் சட்டங்கள் என்று எல்லாமே தேவசட்டத்தை அடிப்படையாகக் கொண்டவைகள் தான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

ஆதியிலிருந்தே மனிதன் சட்டங்களால் ஆளப்பட வேண்டும் என்று எண்ணி மனிதனுக்கான சட்டங்களை இயற்றுவது தேவனுக்கு அவசியமாயிற்று. எனவே, தேவன் மனிதனுக்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி அவைகளின்படி அவன் செய்யாவிட்டால் அல்லது செய்யத் தவறினால், கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்தார். காலப்போக்கில், மனித இனம் வளர வளர தேவனுடைய பிரமாணங்கள் அல்லது சட்டங்கள் அதிகரித்தன. மனிதன் தன் சக மனிதர்களோடு ஒழுக்க ரீதியான உறவைத் தொடரவும் தேவச் சட்டங்கள் அவசியமாயிற்று.

### முற்பிதாக்களின் பிரமாணம்

பழைய ஏற்பாட்டில் இரண்டு பிரதான பிரமாணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முதல் பிரமாணம் முற்பிதாக்களின் காலப்பிரமாணம் என்று அழைக்கப்பட்டது. பிதாக்களாகிய தகப்பன்மார்கள் சம்பந்தப்பட்ட குடும்பத்திற்குத் தலைவர்களாக

இருந்தனர். அப்படி முற்பிதாக்களாய் இருந்தவர்களிடத்தில் தேவன் பேசினார். அவர்கள் அந்த வார்த்தைகளைக் குடும்ப அங்கத்தினர்களிடம் பகிர்ந்து கொள்வது வழக்கமாக இருந்தது. ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் நன்கு அறியப்பட்ட முற்பிதாக்களாக இருந்தார்கள். இந்த முற்பிதாக்களின் பிரமாணம் ஆதாமில் தொடங்கி மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படும் வரை சுமார் 2500 ஆண்டு காலம் நீடித்தது. எபிரெய ஆசிரியர் *பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின* தேவன் என்று சொல்லும் போது இப்பிரமாணம் பற்றியே பேசுகிறார் (எபிரெயர் 1:1).

**மோசேயின் பிரமாணம்**

பழைய ஏற்பாட்டில் பேசப்பட்டிருக்கும் அடுத்த பிரமாணம் மோசேயின் பிரமாணம். இப்பிரமாணம் யாத்திராகமம் இருபதாம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இது தேவன் மோசேயின் மூலம் பேசினதால் உண்டான பிரமாணமாகும். தேவன் மோசேயிடம் பத்துக்கட்டளைகள் உட்பட மனிதனுடைய ஒழுக்க ரீதியான, சரீரப்பிரகாரமான, ஆவிக்குரிய வளர்ச்சிக்கான கட்டளைகளைக் கொடுத்தார். இது எழுத்தால் எழுதப்பட்ட பிரமாணமாயிருந்தது. இதில் முதல் பத்துப் பிரமாணங்கள் கற்பலகைகளிலும், அது சம்பந்தமான மற்ற பிரமாணங்கள் அனைத்தும் புத்தக வடிவத்திலும் கொடுக்கப் பட்டது. அவைகளை ஜனங்கள் தங்கள் இருதயமாகிய பலகையிலும் எழுத வேண்டியது அவசியமாயிருந்தது. மேலும், மோசேயின் பிரமாணம், கிரியைகளை உள்ளடக்கிய பிரமாணமாக இருந்தது. ஜனங்கள் அப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதபோது, சரீரப்பிரகாரமான தண்டனை உடனே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்பிரமாணம் மோசேயின் காலம் தொடங்கி, கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்தெழுதல் வரை நடைமுறையில் இருந்தது. அதாவது, மோசேயின் பிரமாணம் சுமார் 1500 வருடங்கள் நீடித்திருந்தது.

அன்பின் அப்போஸ்தலன் இப்பிரமாணத்தைப் பற்றிச் சொல்லும் போது, *எப்படியெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாய் உண்டாயின* (யோவான் 1:17) என்று குறிப்பிடுகிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து,

*நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஓர் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார்* (மத்தேயு 5:17, 18). கிறிஸ்து சொன்னபடியே இது நிறைவேற்றிற்று. *மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார்* (லூக்கா 24:44). மேலும், I கொரி.3:3; கொலோ.2:14; கலா.5:4 போன்ற

கிறிஸ்துவின் பிரமாணம்

தேவனுடைய பிரமாணத்தில் நாம் மற்றுமொரு பிரமாணம் பற்றி வாசிக்கிறோம் இது தேவனுடைய புத்தகமாகிய வேதாகமத்தில் காணப்படும் நிலையான மற்றும் நிறைவான பிரமாணமாகும். இதுதான் *கிறிஸ்துவின் பிரமாணம்* அல்லது *கட்டளையாக* இருக்கிறது. இப்பிரமாணம் அல்லது கட்டளை யானது கிறிஸ்துவின் மூலமாகவும் அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள் மூலமாகவும் நமக்குக் கொடுக்கப்பட்டது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் நமக்கு இப்பிர மாணத்தை கிறிஸ்துவிடமிருந்து பெற்றுத்தந்திருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் பிரமாணம், கிறிஸ்துவின் மரணத்தி லிருந்து நடைமுறையயில் உள்ளது. இப்பிரமாணம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நம்மைக் கட்டுப்படுத்துகிறதாக இருக்கிறது. மேலும், இப்பிரமாணம் இவ்வுலகிலுள்ள எல்லா மக்களுக்காகவும் கொடுக்கப்பட்டது. *நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்* (மாற்கு 16:15) என்றார் இயேசு. எபிரெய ஆசிரியரும், *இந்தக்கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்* என்று எபிரெயர் 1:2 - ல் தெளிவுபடுத்தினார். மேலும், அந்த மறுரூபமலைகாட்சியில் *இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச்*

*செவிகொடுங்கள்* என்று தேவன் சொன்னார் (மத்தேயு 17:5). இன்னுமாக, யோவான் 1:17 -ல், அப்போஸ்தலனாகிய யோவான் *நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின,* என்று சொல்லுகிறார். *யாக்கோபு 1:25-ல் யாக்கோபு கிறிஸ்துவின் பிரமாணத்தைச் சுயதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணம் என்றழைக்கிறார்.*

அருமையானவர்களே, நாம் இப்போது முற்பிதாக்களின் பிரமாணத்தின் கீழாக வாழவில்லை. ஏனென்றால், அப்பிரமாணம், மனிதன் தோன்றியது முதல், சுமார் 2500 ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நாம் அக்காலகட்டத்தில் வாழாதபடியால் அது நமக்குக் கொடுக்கப்படவில்லை, நாம் பின்பற்றத்தக்கதாக நம்முடைய காலகட்டத்திற்கு அது திணிக்கப் படவுமில்லை. அதுபோலவே, மோசேயின் பிரமாணமும் கிறிஸ்துவின் காலம் வரை வாழ்ந்த இஸ்ரவேலர்களைத் தான் கட்டுப்படுத்தியது. ஆகவே, நாம் அக்காலகட்டத்தில் வாழாத படியால் அப்பிரமாணம் நமக்குப் பொருந்தவே பொருந்தாது. மேலும், நாம் மோசேயின் காலத்திற்கு திரும்பிச் செல்லவும் முடியாது. எனவே, இன்று மோசேயின் பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்தவும் செய்யாது, நாம் அதைக் கடைப்பிடிக்கும்படி தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதுமில்லை.

ஆகவே, நாம் வாழ்கின்ற இக்காலக்கட்டத்தில், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் பிர மாணமே நம்மைக் கட்டுப்படுத்துவதாக இருக்கிறது. இப் பிரமாணம் கிறிஸ்துவின் மரணத்தின்போது அமுலுக்கு வந்தது. இப்பிரமாணம் கிறிஸ்துவின் வருகை வரை நம்மைக் கட்டுப் படுத்தும். கிறிஸ்துவின் மரணத்திற்கும், அவருடைய இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் நாம் வாழ்கிறபடியால், கிறிஸ்துவின் பிரமாணம் இன்று உயிரோடிருக்கும் எல்லோரை யுமே கட்டுப்படுத்துகிறது. தேவன் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்துகொள்ள புதிய ஏற்பாட்டைக் கவனமாகப் படித்து, அதன்படி வாழத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும். இப்பிரமாணம் ஆவிக்குரியதாக இருந்தாலும் கூட, நாம் இதற்கு முழுமையாகக் கீழ்ப்படியும்போது, சரீரப்பிரமாகவும், ஒழுக்க ரீதியாகவும் நாம் பரிசுத்தமாய் வாழ இப்பிரமாணம் உதவியாயிருக்கிறது.

இப்படிப்பட்ட வாழ்க்கை தேவனிடத்திலும், சக மனிதர்களிடத்திலும் நாம் பெற்றுக்கொள்ளும் ஐக்கியத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தேவனுடைய எல்லாச் சட்டங்களுமே மனிதனைக் கட்டுப்படுத்துவதாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் எந்தக் காலகட்டத்தில் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அவர்களைத் தான் அது கட்டுப்படுத்தியது. தேவனுடைய சட்டம் மனித இனத்தின் பாதுகாப்பிற்காகவும், இரட்சிப்புக்காகவும் தான் கொடுக்கப்பட்டது. இதினிமித்தம், தேவனுடைய சட்டத்திற்குத் தங்களைத் தாழ்த்தினவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதை மீறினவர்களோ, அதற்கான விலையைக் கொடுத்தார்கள். இன்னும் சில மனிதர்கள் தேவனுடைய பிரமாணங்களை மாற்றி அமைப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அப்படிச் செய்வதினால் அவர்கள் தேவனையே நிராகரித்து விடுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால், தேவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்த நாம் அவருடைய பிரமாணங்களில் எந்தத் திருத்தத்தையும் செய்யக்கூடாது என்பதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஏனென்றால், இதைப்பற்றி ஏராளமான எச்சரிப்புகள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் ஓர் எச்சரிப்பாக, வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19- ல் நாம் பார்க்கும் போது, தேவனுடைய வார்த்தைகளோடே எதையும் கூட்டக்கூடாது, இதிலிருந்து நாம் எதையும் எடுத்துப் போடவும் கூடாது என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

### தேசச் சட்டங்கள்

நாம் இன்னும் கவனிக்க வேண்டிய சட்டங்கள் உண்டு. அவை தேசச் சட்டங்களாக இருக்கின்றன. இந்தத் தேசச் சட்டங்களை மேலோட்டமாகப் பார்த்தால், இவைகள் மனிதர்களால் இயற்றப்பட்டது போலவும் இந்தச் சட்டங்கள் எல்லாம், ஜனங்களை ஆளுகை செய்ய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது போலவும் தான் தெரியும். ஆனால், அவைகளில் பெரும்பாலானவை தேவனுடைய சட்டத்திலிருந்து தான் எடுக்கப்பட்டிக்கிறது. உதாரணமாக, மனிதன் எப்போதுமே கொலை, கொள்ளை, பொய் சாட்சி, விபசாரம் போன்ற காரியங்களில் ஈடுபடக்கூடாது என்று தேவன் எச்சரித்திருக்கிறார். மனிதச் சட்டங்கள் என்ன சொல்லுகின்றது? அவைகளும் இதையே தான் சொல்லுகின்றன. ஏனென்றால், இவைகளெல்லாம் சட்டங்களாக இயற்றப்பட்டிருக்கிற அடிப்படை உண்மைகளாகும். மனிதன்

ஒழுக்க நெறிகளோடு வாழ வேண்டுமென்றால் அவன் தன் வாழ்வில் இவைகளைத் தவறாது செயல்படுத்த வேண்டும். மத ஆதிக்கத்தால் ஜனங்களைக் கட்டுப்படுத்துகிற நாடுகளில் கூட, வழக்கத்திலிருப்பது ஒழுக்கரீதியிலான சட்டங்கள் தான். நான் சொல்லுகிற காரியம் ஒருவேளை மறுக்கப்படலாம். ஆனாலும், இதுதான் உண்மையாக இருக்கிறது.

தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலில் படைத்து, நித்திய ஒழுக்க ரீதியிலான சத்தியங்களை அவனுடைய மனசாட்சியிலே பதித்தார். அவைகள் தான் சட்ட வடிவத்தில் பல நாகரீகங்களினூடே ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறது. அச்சட்டங்கள் தான் ஒரு தலைமுறையிலிருந்து, இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அவ்வகையில் பார்த்தால், தேவன் தம்முடைய மனச்சாட்சி சட்டங்கள் மூலமாக ஒட்டுமொத்த உலகையும் ஆளுகை செய்கிறார்.

ஒருவர் தேசச் சட்டத்திற்கு எப்படியாக நடக்க வேண்டும்? ஒருவர் தேவனுடைய ஆவிக்குரிய சட்டங்களை எப்படி மதித்துக் கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறாரோ, அதே போலத்தான், தேசச்சட்டங்களையும் மதித்துக் கீழ்ப்படியும்படி எதிர்பார்க்கப்படுகிறார். இதுகுறித்து அப்போஸ் தலனாகிய பவுல், ரோமர் 13:1-7 வசனப் பகுதியில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். *எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கின்ற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும், அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல துர்க்கிரியைகளுக்கே பயங்கரமா யிருக்கிறார்கள் ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமைசெய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால் நீங்கள் கோபாக்கினை யினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய*

*வேண்டும். இதற்காகவே, நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக் காரர்களாயிருக்கிறார்களே.*

*ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.* அப்போஸ்தலனாகிய பேதுருவும் 1பேதுரு 2:13-17 வசனப் பகுதியில் இவ்விதம் குறிப்பிடுகிறார். *நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ் சரி கீழ்ப்படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயதீனத்தைக் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள். மறுபடியும் பவுல், துரைத் தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும் சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்*

ஒரு கிறிஸ்தவன் தான் வாழும் தேசச் சட்டங்களை மதிக்க வேண்டுமா? அவன் தேசச்சட்டங்களை எப்படியாகப் பாவிக்க வேண்டும்? கிறிஸ்தவர்கள் தாங்கள் எந்த தேசத்தின் சட்டங்களை மதித்து அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்? கிறிஸ்தவர்கள் இக்காரியத்தில் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். எப்படியெனில், சாலைகளில் வாகனத்தை ஓட்டும் போது, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேகத்திற்கு மேலே செல்லக்கூடாது. மேலும், நாற்கர சாலைகளில் சிவப்பு விளக்கின் ஒளி வரும்போது, மற்றவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் சென்றாலும் கூட, கிறிஸ்தவர்களாகிய நாம் நின்றுதான் செல்ல வேண்டும். இன்னுமாக, கிறிஸ்தவர்கள், வரியை சரியாகச்

செலுத்தவும், தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இருக்கும் எல்லா தேசச்சட்டத்துக்கும் கீழ்ப்படியவும் வேண்டும். சட்டம் வாழ்க்கைக்கு அவசியமானதாயிருக்கிறபடியால் அதைக் கிறிஸ்தவர்கள் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும். அவர்கள் சமுதாயத்தில், யாருக்கும் எந்தத் தொந்தரவையும் கொடுக்கக் கூடாது. அதேவேளையில், நாம் கிறிஸ்தவராயிருப்பதால் துன்பப் படுத்தப்பட்டு சிறைச்சாலைக்குப் போனாலொழிய, மற்றெந்தக் காரியத்துக்காகவும் சிறைக்குப் போகக்கூடாது. மேலும், எந்தக் கேடான சூழ்நிலை வந்தாலும் ஒருபோதும் கிறிஸ்துவை மறுதலிக்கக்கூடாது. ஒருவேளை, அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற் பட்டால் நம் இரட்சகருக்காக மரிக்கவும் நாம் துணிய வேண்டும்.

தேவச்சட்டம் நம் நலனுக்காகவும், தேவைகளுக்காகவும் இயற்றப்பட்டிருக்கிறது. தேசத்திலே சட்டங்களே இல்லை யென்றால் என்ன நடக்கும்? நாமெல்லாரும் பயப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். நம் வாழ்க்கை ஆபத்தில் இருக்கும். எனவே, நாம் தேசச்சட்டங்களுக்காகவும், அவைகளை நடை முறைப்படுத்த முயற்சி எடுப்பவர்களுக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தி ஆட்சியாளர்களுக்காகவும் நாம் ஜெபித்து, நம்மால் இயன்றவரை தேசத்தின் சட்டத்தை மதித்து நடந்து, எல்லா விதத்திலும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். இவைகளில் தான் தேவன் பிரியமாயிருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய தெய்வீகச் சட்டம், நம்முடைய மற்றும் உலகத்தின் நலனுக்கானதாக உள்ளது. ஆகவே, நாம் தீமையை விட்டு விலகி, மனந்திரும்பி கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அடுத்ததாக, கிறிஸ்தவர்களான நாம், தூய்மையான, பரிசுத்தமான, தேவபக்தி யுள்ள வாழ்க்கை வாழ வேண்டும். ஆனால், தேசத்திலுள்ள எல்லா நல்ல குடிகளுமே தேவனுக்குக் கீழ்ப்படியாததினால் பாவங்களி லிருந்து இரட்சிக்கப்படவில்லை. மாறாக, தேவனுக்குக் கீழ்ப் படிந்த எல்லாருமே தேசத்தின் சிறந்த குடிமக்கள் என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக்கொள்ள முடியும்.

தேவனுடைய சட்டங்களைக் குறித்தும், தேசச் சட்டங்களைக் குறித்தும் உங்கள் மனநிலை எப்படியிருக்கிறது? நீங்கள் அவை களுக்குக் கீழ்ப்படிகிறீர்களா? நீங்கள் கரத்தருடைய இராஜ்ஜியத் திலும், நீங்கள் வாழும் நாட்டிலும் நல்ல பிரஜைகளாக இருக்கிறீர்களா? அவைகள் இரண்டும் ஒன்றோடொன்று கைக் கோர்த்துத்தான் செல்லுகின்றன.

பாடம் - 2

# மன்னிப்பு

## Forgiveness

**மொழி**களிலே சிறந்த வார்த்தை *மன்னிப்பு*. நம் வாழ்வில் இதைவிட வேறொன்றும் நமக்குத் தேவையில்லை. மன்னிப்பில்லாமல் நாம் எப்படி வாழ முடியும்?

மன்னிப்பு என்பது பாவத்தின் காரணமாகத்தான் தேவைப் படுகிறது. பாவம் என்பது நியாயப்பிரமாணத்தை மீறுகிற செயலாக இருக்கிறது. (1யோவான்3:4). இருந்தபோதிலும், பலர் தாங்கள் பாவம் செய்கிறோம் என்பதை அறியாதிருக்கிறார்கள். ஏனென்றால், பாவம் வஞ்சனையுள்ளதாயிருக்கிறது (எபிரெயர் 3:13). இது யாருக்கும் தெரியாமலேயே ஒருவருடைய வாழ்க்கைக்குள் புகுந்து விடுகிறது. மேலும், இது ஒருவர் தான் செய்யும் பாவத்தைக் குறித்துச் சற்றும் வருத்தப்படாத அளவுக்கு இருதயத்தைக் கடினமாக்கி விடுகிறது. அப்பாவம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுகிறது. ஒரு பொய் இன்னொரு பொய்க்கு வழி வகுக்கிறது என்னும் பழஞ்சொல் உண்மையாயிருக்கிறது. அதாவது, ஒரு பாவம் மற்றொரு பாவத்திற்கு வழி வகுக்கிறது. இறுதியில், பாவம் ஒருவரை அழிவில் கொண்டு போய் விடுகிறது. இது ஒரு மனிதனுக்கு மத்திரம் அல்ல, இது எல்லா மனிதருக்கும் உண்மையாயிருக்கிறது. எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமை யற்றவர்களாகிறார்கள். இறுதியாக, பாவம் மரணத்தையும் கொண்டு வருகிறது (ரோமர் 6:23).

இப்படிப்பட்ட பாவத்தை மேற்கொள்வதற்கு ஒரேயொரு வழி தான் இருக்கிறது. இயேசுகிறிஸ்து மூலமாகத்தான் அது சாத்தியமாகிறது. ஏனென்றால், அந்த ஒரேயொரு வழியாக இயேசு கிறிஸ்து மாத்திரமே இருக்கிறார் (யோவான் 14:6). இந்தப் பாவத்தை வெற்றி கொள்ளும்படியாகவே கிறிஸ்து இவ்வுலகத்திலே மரித்தார் (ரோமர் 5:8). இது உண்மையா யிருக்கிறபடியால், பாவ மன்னிப்பிற்கான நிபந்தனைகளை விதிக்க கிறிஸ்துவுக்கு மாத்திரமே சகல அதிகாரமும் உள்ளது. மனிதன் பாவியாயிருக்கிறபடியால், நான் அதைச்செய்வேன், நான் இதைச் செய்வேன், நான் இதைச்செய்யமாட்டேன் என்று சொல்லும் பேச்சுக்கே.

இடமில்லை. மனிதனுடைய ஒரே நம்பிக்கை, மன்னிப்பின் நிபந்தனைகளுக்குத் தன்னை ஒப்புவிப்பது, மன்னிப்பைப் பெற்று, பெற்ற அந்த மன்னிப்பிற்காக நன்றி செலுத்துவது தான்.

**மன்னிப்புக்கான நிபந்தனைகள்**

பாவ மன்னிப்புக்கான நிபந்தனைகள் வேதாகமத்தில் மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. கீழ்ப்படிதல் எப்படி கிரியை செய்கிறது என்பதைக் காட்டுவதற்கு குறிப்பிட்ட கட்டளைகளும் உதாரணங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கீழ்க்காணும் கட்டளைகளைக் கவனியுங்கள்:

* *கிறிஸ்துவுக்கு செவிகொடுத்து அவரை விசுவாசிக்க வேண்டும் [மத்தேயு 17:5].*
* *பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் [லூக்கா 13:3].*
* *கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கை பண்ண வேண்டும் [மத்தேயு 10:32].*
* *இரட்சிப்படையும்படி ஞானஸ்நானம் பெற வேண்டும் [மாற்கு 16:16].*

இதன் ஆதாரங்களுக்கு உங்கள் வேதாகமத்தில் அப்போஸ்தலர் நடபடிகள் 2,8,9 மற்றும் 16-ம் அதிகாரத்தைக் கவனித்து வாசியுங்கள். இதை நீங்கள் செய்யும்போது மனிதனுடைய வார்த்தைகளுக்கும், தேவனுடைய வார்த்தைகளுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள முடியும். இயேசு கிறிஸ்து பாவத்திலிருந்து மீட்கும் இரட்சகராயிருக்கிறார். அவர் ஒரு மனிதரோ அல்லது பாதிரியாரோ அல்ல. உங்களுக்குப் பாவ மன்னிப்பு வேண்டுமென்றால், கிறிஸ்து நீங்கள் செய்யும்படி என்ன சொல்லியிருக்கிறாரோ அதின்படி செய்ய வேண்டும். இல்லையெனில், இழந்து போவீர்கள் (மத்தேயு 7:21-23; யோவான்12:48).

**மன்னிப்பின் அழகு வெளிப்படும் வழிகள்**

கர்த்தருக்கு நாம் கீழ்ப்படியும்போது, நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு அப்பாவங்கள் வெகுதூரத்திற்கு அனுப்பி விடப் படுகிறது. லேவியராகமம் 16-ம் அதிகாரத்தில் ஆரோன் இரண்டு வெள்ளாட்டுக் கடாக்களைத் தெரிந்துகொண்டான். இதில் ஒன்றை இஸ்ரவேலின் பாவங்களுக்காக பலியாகச் செலுத்தினான். இன்னொன்றை வனாந்திரத்தில் விட்டுவிட்டான். இந்த ஆடு *போக்காடு* என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால், இஸ்ரவேலின்

பாவங்கள் முழுவதும் இதின் மேல் சுமத்தப்பட்டு வனாந்திரத்திற்கு அனுப்பப்படுகிறது. இதின் மூலம் ஜனங்கள் முழுமையாகச் சுத்த மாகிறார்கள். நாமும் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, நம்முடைய பாவங்களும் நம்மிடமிருந்து அகற்றப்பட்டு அது வெகு தூரத்திற்குத் தூக்கியெறியப்படுகிறது. அதினிமித்தம் நாம் முற்றிலுமாக விடுபடுகிறோம். இது ஓர் அழகான ஒன்றாக இருக்கிறதல்லவா? உங்கள் பாவங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட நீங்கள் விரும்பமாட்டீர்களா?

இயேசு கிறிஸ்து நம்மிடமிருந்து பாவத்தை எடுத்துப் போட்டபடியால் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன. இதுகுறித்து அப்போஸ்தலனாகிய பேதுருவும், *நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைக்கும்படிக்கு அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்* என்று சொல்லுகிறார். நான் என் வாழ்க்கையில் ஆண்களும், பெண்களும் சிறுபிள்ளைகளும் பாரமான சுமைகளைச் சுமந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். ஒருவேளை, நான் அப்பாரத்தைச் சுமக்கிறதாக இருந்தால், வழியில் யாராவது ஒருவர் முன்வந்து நான் உங்கள் பாரத்தைச் சுமக்க விரும்புகிறேன் என்று சொன்னால் அது எவ்வளவு அருமையானதாக இருக்கும். உண்மையில் பாவபாரம் நம்மை அமிழ்த்துகிறதாக இருக்கிறது. அப்படி அமிழ்த்தும்போது, அது நமக்கு அதிக வேதனையையும், மன வலியையும் தருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ள சிலர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாரத்தை எடுத்துப் போடுவார் என்பதை அறியாமலும், யாரிடம் செல்வது என்று தெரியாமலும் வழியற்றுப் போய் நம்பிக்கையிழந்து தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து நம் பாரங்களைச் சுமக்க ஆயத்தமாயிருக்கிறார். என்பது எத்தனை ஆச்சரியமானதாக இருக்கிறது. *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்* என்று அவர் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? (மத்தேயு 11:28-30).

பாவங்கள் மன்னிக்கப்படுகிறதினால் நம் கடன் தீர்க்கப்படுகிறது

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாதிரி ஜெபத்தில், எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத்தேயு 6:12) என்று

போதித்தார். அடுத்ததாக, மத்தேயு 18:27-32 வசனப்பகுதியில், கடன்பட்டிருந்த வேலைக்காரன் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததினால் எஜமானுடைய இரக்கத்திற்காகக் கெஞ்சிய போது, அந்தக் கடனை எஜமான் மன்னித்துவிட்டான் என்று பார்க்கிறோம். அதே நேரத்தில் மன்னிப்புப் பெற்ற அந்த வேலைக் காரன் புறப்பட்டுப் போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப் பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக் காரனாகிய ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்றான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு மிகவும் துக்கப்பட்டு ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து, பொல்லாத ஊழியக்காரனே நீ என்னை வேண்டிக் கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினது போல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்டகடனை யெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர் களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான் (மத்தேயு 18:27-32). அதுபோலவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மீது விழுந்த எல்லாக் கடன் களையும் தீர்த்து நாம் விடுதலை பெற வழி ஏற்படுத்தினார். இது எவ்வளவு அருமையானது என்று எண்ணிப் பாருங்கள்! காரியங்கள் இப்படியிருக்கிறபடியால் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களிடத்தில் நாம் இரக்கம் காட்டி அவர்களை மன்னிக்க வேண்டும்.

**நம் கிரியைகளினாலே அல்ல தேவனுடைய கிருபையினாலேதான் மன்னிப்புக் கிடைக்கிறது.**

இதன் பொருள், நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள நமக்குத் திராணி இல்லை என்பதாகும். நம்முடைய இரட்சிப்பை நாமே சம்பாதித்துக் கொள்ள நம்மால் எந்தக் கிரியையும் செய்ய முடியாது. கர்த்தர் நமக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நாம் செய்து முடித்த பிறகும் கூட, நாம் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபை அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். *கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல [எபேசியர் 2:8,9]. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும், பாவியும் எங்கே நிற்பான்?* (1பேதுரு 4:18)

நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தகுதியில்லாமலும், நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளுவதற்கு ஏதாவது செய்யத் திராணியில்லாமலும் இருந்த நிலையில் கூட, தம் முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நம்மை இரட்சித்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவனுடைய மகாப்பெரிய கிருபையினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். அதினிமித்தம் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையும் நமக்கு உண்டாயிருக்கிறது.

மன்னிக்கப்படுவது என்பதன் பொருள்

நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம், நாம் கழுவப்பட்டிருக்கிறோம். அதாவது, நாம் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம் என்பதா யிருக்கிறது. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக, நாம் பாவங்களுக்கு மரித்து, கிறிஸ்துவுக்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுந்திருக்கிறோம் (ரோமர் 6:3-6). சவுலுக்கு, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று பாவங்கள் போகக் கழுவப்படு என்று சொல்லப்பட்டது (அப்.22:16). நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவும், அவருடைய ராஜ்யமாகிய சபையில் நாம் பிரவேசிக்க மறுபடியும் பிறக்க வேண்டும், அதினிமித்தம் புதுசிருஷ்டிகளாக மாற முடியுமென்று சொல்லுகிறார் (யோவான் 3:3-5) எனவே, நம் பாவங்கள் மன்னிக்கப்படும்போது, பழையவைகள் எல்லாம் ஒழிந்து போவதோடு எல்லாம் புதிதாகிறது (II கொரி.5:17).

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதா? சிலர், நாங்கள் நல்லவர்கள் ஆகவே, எங்களுக்குப் பாவமன்னிப்பு அவசிய மில்லை என்கின்றனர். ஆனால், இது முற்றிலும் தவறான சிந்தை யாகும். இன்னும் சிலர் தங்கள் பாவங்களைத் தேவன் ஒருபோதும் மன்னிக்கவே மாட்டார். ஏனென்றால், தங்களது பாவம் அவ்வளவு கொடிதானது என்று நினைக்கிறார்கள். இதுவும் ஓர் தவறான எண்ணமாகும். உங்களுக்குப் பாவ மன்னிப்பு வேண்டுமானால் அதை நிச்சயம் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு அது ஒன்றுமில்லாமல் எடுத்துப் போடப்படும். இது கிறிஸ்துவுக்கு நீங்கள் கீழ்ப்படிவதினால் ஓர் எளிமையான காரியமாக இருக்கிறது. எப்படியெனில், அவர் நம்மிடமிருந்து கொஞ்சமாகத்தான் கேட்கிறார். ஆனால், அவர் கொடுக்கும்போது அதிகமாகத் தருகிறார். ஆகவே, அவரிடம் வந்து மன்னிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இது நிச்சயமாகவே உங்கள் பக்தி வாழ்வில் ஒரு புதிய உச்சத்தைத் தொட வழிவகுக்கும்.

பாடம் - 3

# இன்று நமக்குத் தேவையான அன்பு

## The Love That We Need Today

அன்பைப் பற்றி இன்றைய நாட்களில் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். நாம் சகோதரர்களிடத்தில் அன்புகூர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம் சகோதரர்களை எதிர்ப்பதற்குப் பதிலாக அவர்களிடத்தில் அன்பு கூர வேண்டும். இது உண்மையாயிருக்க, இதில் வேடிக்கை என்னவென்றால், அன்பைப் பற்றி உபதேசிக்கிறவர்கள், அநேக சமயங்களில் தங்களோடு ஒத்துப்போகாதவர்களிடம் கலகத்திலும், சண்டையிலும் ஈடுபடுகிறார்கள். அன்பைப் பற்றி வேதாகமம் ஏராளமான, தாராளமான காரியங்களைச் சொல்லியிருந்தாலும் கூட, இன்றைய நாட்களில், முன்னெப்போதும் இல்லாததைவிட அன்பு மக்களிடத்தில் தணிந்திருப்பதை நம்மால் காணமுடிகிறது.

அன்பைக் குறித்துக் அடிக்கடி போதிப்பவர்களில் பலர், அன்பு என்றாலே அது சரீரப்பிகாரமான அல்லது லௌகீக அன்பு என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், அவர்களுடைய மனது உலக சிற்றின்பக் காரியங்களால் நிறைந்திருக்கிறது. மேலும், இவர்கள் லௌகீக அன்புதான் இன்றைய நாட்களில் உலகத்தில் உள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வாக இருக்கிறது என்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல. மாம்சீக அன்பு அல்லது லௌகீக அன்பு பிரச்சனைகளுக்குத் தீர்வாயிருப்பதைவிட, அது அதை இன்னும் பெரிதாக்கக்கூடியதாக இருக்கிறது. இது குறித்து அப்போஸ்தலன் யோவான் கூற்றைக் கவனிப்போம். *உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்* (I யோவான் 2:15-17).

## அன்பு என்பதற்கு உலகத்தின் விளக்கமும் தேவனுடைய விளக்கமும்

அன்பு என்றால் என்ன? அன்பு என்பது, மற்றவர்களிடத்தில் நாம் காட்டும் பாசமாகவும், நட்பாகவும் அது மற்றவர்களிடத்தில் நமக்கு ஏற்படும் ஈர்ப்பாகவும் இருக்கிறது. பொதுவான சூழ்நிலைகளில் இது சரீரப்பிரகாரமான அன்பாகவும் இருக்கிறது. ஆனால், நாம் இப்போது சகோதர அன்பைப் பற்றித்தான் அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வித அன்பைத்தான் நாம் ஒருவரிலொருவர் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய எல்லாச் செயல்பாடுகளுக்கும், அன்புதான் அடிப்படையாக இருக்கவேண்டும். இந்த அன்பைப் பற்றிய சிறந்த விளக்கத்திற்கு I கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை வாசியுங்கள். அதிலே தான் அன்பு என்றால் என்ன? அது என்ன செய்யும்? என்ன செய்யாது? என்பது பற்றி எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. *அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்; சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்* (Iகொரி.13:4-8).

இன்றைய உலகில் அன்பு அதிக அவசியமாயிருக்கிறது. இந்த அன்பு மாயமற்றதாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். இது கணவன், மனைவி மற்றும் குடும்ப வட்டத்தோடு நின்றுவிடக் கூடாது. மாறாக, அது நம் நண்பர்கள், அயலகத்தார், சத்துருக்கள், தேசம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மிகவும் அருமையாக நம் சத்தருக்களைச் சிநேகிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நித்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள் [மத்தேயு 5:44] என்று.*

அன்பானது நம் சகோதரர்களிடத்தில் நடந்து கொள்ளும் விதத்தில் பொறுமையோடும், புரிந்து கொள்ளுதலோடும், மன்னிக்கும் தன்மையோடும் நடந்துகொள்ள உதவுகிறது. இருந்த போதிலும், அன்பானது சத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளவோ அல்லது நம்மைச் சுற்றிலும் நடக்கிற பாவங்களைக் கண்டு, கண்களை மூடிக் கொண்டிருக்கும்படி ஏவி விடக்கூடாது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பிறருக்கு உதவுதல் என்று வரும்போது அவர்கள்நம்மிடத்தில் வரட்டும் என்று காத்திருக்காமல் நாமாகவே அவர்களிடம் சென்று அவர்களுக்கு உதவி செய்ய அன்பு நம்மை உற்சாகப்படுத்துகிறது. இன்றும் இவ்விதமான அன்புதான் அவசியப்படுகிறது. அதாவது, பேசப்படுகிற அன்பு அல்ல, செயல்படுத்துகிற அன்பு. இந்த அன்புதான் உலகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டுவரும். மேலும், இது நடைமுறை யிலிருக்கும் சட்டங்களை விட இறுதியில் அதிக நன்மை பயக்கும். அன்பு என்பது பெலவீனத்தின் அடையாளமாக இராமல், அது பெலத்தின் அடையாளமாக இருக்கிறது.

நாம் பார்த்துக்கொண்டிருக்கிற அன்பு தேவனாலும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினாலும் உண்டானது என்பதை பரிசுத்த ஆவியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வேதாகமத்தில் நாம் கற்றுக்கொள்கிறோம். அதன் விளைவாக நாம் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நம் வாழ்வில் அவருடைய சித்தத்தைச் செய்துகொண்டு வருகிறோம். நாம் அவரிடத்தில் கொண்டிருக்கும் அன்பு, நம் அயலகத்தாரையும், இவ்வுலகிலுள்ள எல்லோரையும் நேசிக்கத் தூண்டுகிறதாக இருக்கிறது (மத்தேயு 22:36-39). ஆகவே, நாம் தேவனிடத்தில் அன்பு கூருகிறபடியால், நாமும் ஒருவரிலொருவர் அன்பாக இருக்கிறோம்.

## பாடம் - 4

# தேவனுடைய கிருபை

## The Grace of God

தேவனுடைய கிருபையால் நாம் இரடசிக்கப்படுகிறோமென்று மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரால் அடிக்கடி சொல்லக் கேட்கிறோம். கிறிஸ்துவின் சபையாராகிய நாம் இரட்சிப்பு சம்பந்தமாகக் கீழ்ப்படிவதன் முக்கியத்துவம் பற்றி மட்டும் தான் போதிக்கிறோம், தேவனுடைய கிருபையில் விசுவாசம் வைப்பதில்லை என்கிற தவறான எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பி விட்டிருக்கிறார்கள். ஆனால், இது உண்மையல்ல. உண்மையைச் சொல்லப்போனால், நாங்கள் இரண்டையும் விசுவாசிக்கிறோம். எங்கள் நம்பிக்கைகளைக் குறித்து உங்களுக்கும் விளக்க விரும்புகிறோம்.

**கிருபை என்பது இரக்கம், தயை, அன்பு, கருணை போன்ற செயல்கள்.**

இழந்துபோன உலகிற்கு இரடசிப்பைத் தருவதற்குத்தான் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16). இந்த இடத்தில்தான் கிருபை அவசியமாகிறது. தேவன் இரட்சிப்பை நல்கினார். அப்படி நல்கின இரட்சிப்பின் ஈவை, தேவன் நிபந்தனைக்குட்படுத்திவிட்டார். மனிதன் இரட்சிக்கப்பட வேண்டுமானால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவன் எப்போதுமே இதேவிதமாகத்தான் செயல்பட்டு வருகிறார். மனிதன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருப்பதால் இது கிருபையின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுமா? நிச்சயமாக இல்லை. ஏனென்றால், தேவனுடைய கிருபையில்லாமல் மனிதனால் தன் இரட்சிப்பை சம்பாதிக்கவே முடியாது.

மேற்சொல்லப்பட்ட உண்மையை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் ஒரு வசனப்பகுதியை நாம் இப்போது பார்ப்போம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு என்று பவுல் சொல்லுகிறார் (எபேசியர் 2:8,9). இவ்வசனப் பகுதியை வாசிக்கும் அநேகர் கிருபைதான் இரட்சிக்கிறது, இதில் கிரியைக்கு

எந்தப் பங்கும் இல்லை என்று நினைக்கிறார்கள். ஆனால், இவ்வசனப்பகுதியை நாம் சற்று உற்று நோக்கும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் இரட்சிப்பைத் தருகிறார். ஆனாலும், மனிதனுடைய பங்காக அவன் அதை விசுவாசிக்க வேண்டும். இங்கே, தேவனுடைய பங்குதான் கிருபை, தயை, இரக்கம் போன்றவைகளெல்லாம். அதாவது, தேவன் தம்முடைய பங்காக இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார். அதற்கு மனிதன் தன்னுடைய பங்காக என்ன செய்திருக்கிறான்? தேவன் மனிதனுக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கியிருக்கிறார் என்பதற்காக மட்டும் மனிதன் இரட்சிக்கப்படுவதில்லை. மாறாக, மனிதனால், கிருபையை நிராகரிக்கவும் முடியும், அதை ஏற்றுக் கொள்ளவும் முடியும். இதை மனிதனால் எப்படிச் செய்ய முடியும்? விசுவாசத்தின் மூலமாகத்தான் மனிதன் அதைச் செய்ய முடியும்.

அப்படியானால், விசுவாசத்தில் உள்ளடங்கியிருப்பது என்ன? கீழ்ப்படிதல். ஒருவர் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்யும் அளவுக்குப் போதுமான விசுவாசம் இருந்தால், அந்த நபர் தேவனால் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிருபை மற்றும் இரக்கத்தினால் இரட்சிக்கப்படுவார். ஒரு மனிதன் பாவங்கள் போகக் கழுவப்பட வேண்டுமானால், கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று வேத வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன (மாற்கு 16:16; அப்.2:38). *ஆகையால், இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு* (அப்.22:16) என்று கர்த்தரின் மனிதன் பவுலுக்கு எடுத்துரைத்தான்.

### மனிதன் கிரியைகளினாலே மாத்திரம் இரட்சிக்கப்படுவதில்லை

இங்கே அப்போஸ்தலன் பவுல் எதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்? அவர், ஒரு மனிதன் கிறிஸ்தவராக, கீழ்ப்படிய வேண்டிய பிரமாணங்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரா? அப்படியானால், அது விசுவாசம், மனந்திரும்புதல், கிறிஸ்துவை அறிக்கை செய்தல் போன்ற காரியங்களை எடுத்துப்போட்டு விடும். அவர், கிரியைகள் அல்லது கீழ்ப்படிதலைப் பற்றிப் பேசினால் ஒருவர் இரட்சிக்கப்பட அவருடைய பங்காக எதையும் செய்ய வேண்டியதில்லை. மாறாக, தேவன் எல்லோரையும் வெறுமனே இரட்சித்து விடுகிறார் என்றாகிவிடும். ஆனால்,

இவ்வேதபகுதியை நீங்கள் உற்றுக் கவனித்தால், அப்போஸ் தலனாகிய பவுல், மோசேயினுடைய பிரமாணத்தின் கிரியைகள் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார். நியாயப்பிரமாணத்தின் கீழ் எல்லாம் கிரியைகளைச் சார்ந்ததாகத்தான் இருந்தது. அப்போஸ்தலனாகிய யோவான், *எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின* என்று எழுதினார் (யோவான் 1:17). ஆகவே, நாம் இன்று நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்கப்படாமல், தேவனுடைய கிருபையால், இயேசு கிறிஸ்து மூலமாக, அவர் வெளிப்படுத்தி யிருக்கும் பாவமன்னிப்புக்கான நிபந்தனைகளுக்கு நம்மை உட்படுத்தும்போது இரட்சிக்கப்படுகிறோம். இது குறித்து, எபேசியர் 2:10- ல் பவுல், *ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும் படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்* என்று சொல்லுகிறார்.

*நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்* என்று பவுல் சொல்லுகிறார் (தீத்து 3:4-7). இந்த வசனங்கள் எபேசியர் 2:8,9-ம் வசனங்கள் எவைகளைச் சொல்லுகிறதோ அவைகளையே சொல்லுகின்றன. அதாவது, தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரன் மூலமாக மனித இனம் இரட்சிக்கப்படும்படியாகத் தம்முடைய இரக்கத்தைப் பொழிந்தருளினார். நாம் நம்முடைய நீதியினிமித்தம் இரட்சிக்கப்படாமல், தேவனுடைய கட்டளை களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் இரட்சிக்கப்படுகிறோம். மேலும், நாம் தேவன் தம்முடைய இரக்கத்தினாலேயும், மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சிக்கப்படுகிறோம் என்றுள்ளதைக் கவனிக்க வேண்டும். இவ்வசனப்பகுதியில் மறுஜென்ம முழுக்கு

என்பது ஞானஸ்நானத்தையும், ஒருவர் அதற்குத் தன்னை ஒப்புக்கொடுத்து புதிய சிருஷ்டியாய் மாறும் மாற்றத்தையும் குறிக்கிறது. *பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார் [அப்.2:38]. ஆன படியினாலே, கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும் முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்* (அப்.3:19,20).

கடைசியாக, நாம் பார்க்கும்போது, ஒருவர் இரட்சிக்கப்படுகிறாரென்றால் அவர் தேவனுடைய கிருபையால் தான் இரட்சிக்கப்படுகிறார். இப்படிச் சொல்லுவதால், ஒருவர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமலேயே இரட்சிக்கப்படமுடியுமன்று அர்த்தமாகாது. மாறாக, ஒருவர் கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் சொல்லியிருக்கிறவைகளைத் தவறாமல் செய்து அவர் அளிக்கும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எப்படியெனில், ஒருவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி (லூக்கா 13: 3), கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு (மத்தேயு 10:32), இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள ஞானஸ்நானம் பெற வேண்டும் (மாற்கு 16:16). ஒரு மனிதன் இரட்சிக்கப்பட இவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்து உபதேசித்துள்ளார். இப்படிப்பட்ட பிரமாணத்திற்கு மனிதன் கீழ்ப் படியும்போது, தேவன் தம்முடைய கிருபையினால் மனிதனை இரட்சிக்கிறார். ஒரு தனி மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்வதுமில்லை, இரட்சித்துக் கொள்ளவும் முடியாது.

ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தன் வாழ்நாள் முழுவதும் இரட்சகருக்குச் சேவை செய்து அவரைப் பிரியப்படுத்தி, அவருக்கு உண்மையாய் வாழ்ந்தால் கூட, அந்நபருடைய நித்திய இரட்சிப்புக்கு தேவனுடைய கிருபை அவசியமாக இருக்கிறது. ஆகவே, மனிதன் தன்னுடைய இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ள தன் வாழ்நாள், பாவங்களுக்கான கிரையத்தைச் செலுத்தவே முடியாது. தேவன் சொல்லியிருக்கிற எல்லாவற்றையும் செய்துமுடித்த பிறகும் கூட மனிதன் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபையையே சார்ந்திருக்கிறான். முடிவாக, தேவகிருபையே ஒரு மனிதனை இரட்சிப்புக்குள்ளாக வழி நடத்துகிறது. +

## பாடம் - 5

## ஒருவருடைய ஜெபத்தின் மூலம் இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியுமா?

## Can One Pray Through To Salvation?

சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு பெண்ணிடம் வேத பாடத்தைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென அப்பெண், தான் மற்றொரு பெண்ணிற்காக ஜெபித்த தாகவும், அதன் விளைவாக, அந்நேரத்திலேயே அவர் யாருக்காக ஜெபித்தாரோ அப்பெண் இரட்சிக்கப்பட்டதாகவும் சொன்னார். அப்பெண் அந்த சம்பவத்தை என்னிடம் சொல்லும்போது, ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியும் என்று சொன்னார். இதைக்குறித்து நான் அப்பெண்ணிடம் சில கேள்விகள் கேட்டேன். அதிலும் குறிப்பாக, புதிய ஏற்பாட்டில் ஒருவருடைய இரட்சிப்பிற்காக மற்றொருவர் ஜெபித்ததற்கான உதாரணம் உண்டா? என்று கேட்டேன். அப்பொழுது அப் பெண்ணின் துரிதமான பதில், இது சம்பந்தமாக, எல்லா சபைகளிலும் இவ்விதமாகத்தான் போதிக்கப்படுகிறது என்பதாயிருந்தது.

அதன்பிறகு, நான் அப்பெண்ணிடம் *விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* (மாற்கு 16:16) என்று இயேசு கிறிஸ்து சொன்னவைகளை எடுத்துரைத்தேன். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே அப்பெண் இயேசு சொன்னவைகளைக் குறித்து எனக்குக் கவலையில்லை என்று சத்தமிட்டாள். பின்பு, அவள் இப்படிப் பேசியமைக்காக வெட்கப்பட்டு, தான் கோபம் அடைந்ததாகச் சொல்லி, மன்னிப்புக்கோர முயற்சித்தாள். ஒருவேளை, அவள் மனதார மன்னிப்புக் கேட்டிருக்கலாம். ஆனால், இச்சம்பவம் இத்தகைய உபதேசத்தைப் போதிக்கிறவர்களுடைய நிலையை அருமையாகவும், சுருக்கமாகவும் காண்பிக்கிறது. அதாவது, இயேசு கிறிஸ்து சொன்னவைகளைக் குறித்து இவர்களுக்கு கவலையில்லை. அப்படி இவர்கள் கவலைப்பட்டிருந்தால், ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியுமென்று வேதாகமம் போதிக்காத காரியங்களைப் போதித்திருக்கமாட்டார்கள்.

ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவர் செய்ய வேண்டியதெல்லாம், அவர் எந்த இடத்தில் இருந்தாலும், எந்நிலையில் இருந்தாலும், தன் சிரம் தாழ்த்தி கர்த்தரிடம் தன் பாவங்களை மன்னியும் என்று மன்றாடினால் மன்னிக்கப்படும் என்று போதிக்கிறார்கள். இது மாதிரியான உபதேசம் உலககெங்கும் பிரபலமாகி வருகிறது. இது மேலோட்டமாகப் பார்த்தால் நன்றாகத்தான் இருக்கிறது. ஆயிரக்கணக்கானோர் இது தான் உண்மையென்றும் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். இதில் இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் நம் கர்த்தர் இந்த உபதேசத்தைப் போதிக்கவில்லை என்பது. இவ்விதமாக யாரும் இரட்சிக்கபட்டதாக புதிய ஏற்பாட்டில் எந்தவிதமான உதாரணமும் இல்லை. சொல்லப் போனால், *ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக இன்னொருவர் இரட்சிக்கப்பட முடியும்* என்று புதிய ஏற்பாட்டில் நாம் எங்குமே காண முடியாது.

இரண்டவாதாக, ஜெபம் ஒருபோதும் சபைக்கு வெளியே யிருக்கும் ஒரு பாவிக்கு கட்டளையாகக் கொடுக்கப்படுவதில்லை. மாறாக, ஜெபம் என்பது ஒரு கிறிஸ்துவனுக்கு, அதாவது தேவனுடைய பிள்ளைக்குக் கிடைக்கும் சிலாக்கியமாகும். ஒருவர் பாவியாக இருக்கும்போது, அவர் தேவனுடைய பிள்ளையாக இல்லாமல் அவர் பிசாசின் பிள்ளையாக இருக்கிறார். நம் கர்த்தர், ஒருவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராக வேண்டுமென்றால், அந்நபர் தேவன் குறிப்பிட்டுச் சொல்லும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறார். அப்படி ஒருவர் கிறிஸ்தவராக, சபையில் அங்கத்தினராக மாறிய பிறகு நிலைமை அப்படியே மாறுகிறது. எப்படியெனில், இப்போது தான் இந்நபர் தேவனோடு உடன்படிக்கை உறவில் இணைகிறார். ஆனாலும், அவர் எப்போது விரும்பினாலும் தேவனை நோக்கி ஜெபிக்கும் உன்னத நிலைக்கு உயர்த்தப்படுகிறார். அது மாத்திரமல்ல, தேவனுடைய பிள்ளையாக மாறின இந்நபர் பாவம் செய்தால் அவர் தேவனிடத்தில் மறுபடியும் திரும்புவதற்கு ஜெபம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் தான் இந்நபர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், தன் தவறுகளை அறிக்கை யிடவும், தன் பாவங்கள் மன்னிக்கப்பட தேவனிடத்தில் ஜெபிக்கும்படியாகவும் கட்டளையிடப்படுகிறார். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய சம்பவத்தைச் சிந்தித்துப்பாருங்கள்.

*அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து; நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத் தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க் குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப் படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக் கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்: நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்* (அப்.8:18-24). *நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது* (யாக்கோபு 5:16 ). *நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா*

சபைக்கு அந்நியமாக இருக்கும் ஒரு பாவி இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், அவன் சில கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று நம் கர்த்தர் கட்டளையிடுகிறார். நீங்கள், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற மனமாற்ற சம்பவங்களைக் கவனித்துப் பார்த்தால், ஒருவரும் ஒரு போதும் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்ட ஜெபியுங்கள் என்று கேட்கவில்லை. மாறாக, மரணம், அடக்கம், உயித்தெழுதல் போன்றவை எடுத்துரைக்கப்பட்டு அதன்பின்பு தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கும்படியாகவும், பாவங்களிலிருந்து மனந்திரும்பும்படியாகவும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடும்படியாகவும், பின்பு இரட்சிக்கப்பட தண்ணீர் ஞானஸ்நானம் பெறும்படியாகவும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. தயவுசெய்து உங்கள் ஆத்தும நலனுக்காக

அப்.2 மற்றும் 3-ம் அதிகாரங்களை வாசிக்கவும். பிறகு,. அப் போஸ்தலர் 8,16 மற்றும் 22-ம் அதிகாரங்களையும், மாற்கு 16: 15, 16; ரோமர் 6:3,4, கலாத்தியர் 3:26,27 வசனங்களையும் படித்துப் பார்க்கவும். மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகளில், எங்காவது ஒருவருடைய ஜெபத்தின் மூலமாக மற்றவர்கள் இரட்சிக்கப்பட முடியுமென அல்லது ஒருவர் வெறுமனே கிறிஸ்துவை விசுவாசிப் பதனாலேயே கர்த்தர் அவரை இரட்சிப்பார் என்றோ கிறிஸ்து வாவது, அப்போஸ்தலர்களாவது சுவிசேஷப் பிரசங்கியார்களாவது கட்டளையிட்டதுண்டா? அல்லது ஆலோசனை சொன்ன துண்டா? நிச்சயமாக இல்லை. இக்காரியத்தில் அனைவரும் ஒரேவிதமான உபதேசத்தைப் போதித்தார்கள். ஆகவே, விசு வாசம், மனந்திரும்புதல், அறிக்கை மற்றும் ஞானஸ்நானம் போன்ற கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் யாரும் இரட்சிக்கப் படவில்லை.

இப்படியாக ஜனங்கள் இரட்சிக்கப்பட கர்த்தர் இவை களைக் கட்டளையிட்டிருக்கும்போது இப்போது நாம் இரட்சிக்கப் பட மேற்சொல்லப்பட்டவைகளை விடக் குறைவாகச் செய்தால் நாம் எப்படி இரட்சிக்கப்பட முடியும்? அன்றைக்கு ஒருவர் பாவிக ளின் ஜெபத்தை திரும்பத் திரும்பச் செய்வதன் மூலமாகவோ அல்லது ஒருவர் இரட்சிக்கப்பட மற்றொருவர் ஜெபிப்பதின் மூல மாகவோ இரட்சிக்கப்பட முடியாதது போல இந்நாட்களிலும் நாம் இவ்விதமாக இரட்சிக்கப்பட முடியாது. இவ்வகை உபதேசம் மனிதனுடைய உபதேசம் தானே தவிர, கர்த்தருடைய உபதேசம் அல்ல.

மனிதனால் உண்டாக்கப்பட்ட இத்தகைய உபதேசம் எதி னால் போதிக்கப்படுகிறது? ஒருவர் வேதவாக்கியங்களைப் பின் பற்ற மனதில்லாமல், தன் விருப்பப்படி போதிக்கத் தொடங்கிய தின் விளைவு தான் இவைகள்.

இன்றைக்கு இத்தகைய உபதேசத்தைக் கேட்பவர்கள் எப் படி வஞ்சிக்கப்படுகிறார்கள்? நான் சொல்லுவதை நம்பினால் நம்புங்கள். பெரும்பாலான மக்கள் வேதாகமம் என்ன சொல்லு கிறது அல்லது எதைப் போதிக்கிறது என்பதைக் கேட்பதில்லை. அதற்குப் பதிலாக, மனிதர்களின் உபதேசத்திற்குச் செவி சாய்த்து அதன் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கிறார்கள். ஒரு பிரசங்கி யார், ஜனங்கள் இவ்விதமாக இரட்சிக்கப்பட முடியுமென்று வேத வசனங்களுக்கு மாறாக போதித்தால் கூட அவர்கள் அதை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்கிறார்கள்.

இன்றைக்கு நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? ஒரு வேளை, நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டதாக நினைக்கலாம். ஆனால், உண்மையில் நீங்கள் இழந்துபோன நிலையில்தான் இருக்கிறீர்கள். காரணம், மற்றொருவருடைய ஜெபத்தின் மூலமாக நீங்கள் ஒருபோதும் இரட்சிக்கப்படவே முடியாது. இத்தகைய காரியங்கள் வேதாகமத்தில் போதிக்கப்படவில்லை. நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், கர்த்தருடைய போதனையைக் கற்று அதை ஏற்றுக்கொண்டு அதற்கு உண்மையாக, முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டும்.

அதாவது, நீங்களே வேதத்தை வாசித்துப் பாருங்கள். அதில், நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்று தெளிவுபெற்ற பிறகு, கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள். அப்படி நீங்கள் செய்ய வேண்டுமானால், கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும். இதுதான் உங்கள் இரட்சிப்புக்கு நீங்கள் எடுக்கும் சரியான பாதையாக இருக்கும். ஏனென்றால், இதுதான் கர்த்தருடைய வழி. நீங்கள் உங்களை இரட்சிக்க வல்லமையுள்ள இந்த மெய்யான சத்தியத்திற்குக் கீழ்ப்படியவேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறாம். நீங்களும் இதற்காக ஜெபிக்கலாம். நீங்கள் விரும்பினால், இப்படிச் செய்யும்போது நீங்கள் கிறிஸ்துவுக்குச் சொந்தமான அவருடைய சபையில் அதாவது ஆவிக்குரிய குடும்பத்தில் அங்கத்தினராக மாறுகிறீர்கள். மேலும், ஜெபத்தின் வாயிலாக அவருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதற்கான உரிமையையும் உங்களுக்குத் தந்து, தேவனுடைய பிள்ளையாகவும் உங்களை மாற்றுகிறார். தேவசமூகத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் கர்த்தருடைய மெய்யான உபதேசத்துக்கு உண்மையாகக் கீழ்ப்படிய வேண்டும். அது உங்கள் கையில்தான் இருக்கிறது. +

பாடம் - 6

# உங்கள் கேள்வித்திறன் எப்படி?

## How is Your Hearing?

ஒருவருடைய சரீரப்பிரகாரமான கேள்வித்திறனைப் பற்றியது இக்கேள்வி என்று இத்தலைப்பைப் பார்த்து நீங்கள் முடிவுக்கு வரலாம். ஆனால், அப்படி நீங்கள் நினைத்திருந்தால் உங்கள் எண்ணம் தவறானது. நான் இங்கே கேள்விப்படுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக இக்கேள்வியைக் கேட்கிறேன். சரியான காரியங்களைக் கேள்விப்படுவது எவ்வளவு அவசியமானது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? இதைக் குறித்து நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் எதைக் கேட்கிறீர்களோ, அது உங்கள் விசுவாசத்தைத் தீர்மானிக்கிறதாக இருக்கிறது. ஆகையால், நீங்கள் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டுமென்றால், சத்தியத்தைக் கேட்கவேண்டும். அதே வேளையில் நீங்கள் பொய்யானவைகளைக் கேட்பீர்களென்றால், பெரும்பாலும் அதைத்தான் விசுவாசிப்பீர்கள். இது மிகவும் சுலபமானதாகும்.

நம் வாழ்க்கையில் நாம் எதைக் காண்கிறோமா, எதைக் கேட்கிறோமோ எதைப் புரிந்து கொள்ளுகிறோமோ எதை ஏற்றுக் கொள்ளுகிறோமோ அவைகளாகவே பெரும்பாலும் இருக்கிறோம். நாம் உண்மையென்று எதை ஏற்றுக்கொள்ளுகிறோமோ அதன் உண்மைத் தன்மையை சரியாக விசாரிக்கவில்லையென்றால் ஒரு பொய்யை எப்படி விசுவாசிக்கிறோமோ அதேபோல் தான் உண்மையையும் விசுவாசிக்கிறவர்களாக இருப்போம்.

மதத்தின் பெயரால் ஏன் இத்தனை முரண்பாடான உபதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏன், அநேக ஜனங்கள் எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று நினைகிறார்கள்? கிறிஸ்துவின் நாமத்தை விட்டு விட்டு சபைகளுக்கு ஏன் மதசம்பந்தமான பெயர்கள் வைக்கப்படுகிறது? ஏன் இத்தனை பிரிவுகள் காணப்படுகிறது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றுதான். பெரும்பான்மையான மக்களுக்கு இவைகள் சத்தியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களும் சத்தியத்தின் உண்மைத் தன்மையை ஆராயாமல், அதை அப்படியே ஏற்றுக்

கொண்டிருக்கிறார்கள். வேறு விதமாகச் சொன்னால் அவர்கள் எதை விசுவாசிக்கிறார்களோ அதிலே அப்படியே இருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்விதமாகப் போதிக்கப்பட்டபடியால் அவர்கள் அதை விசுவாசிக்கிறார்கள்.

நாம் மதசம்பந்தமான காரியங்களில் சரியாக இருக்க வேண்டுமென்றால், நாம் தீமையானவைகளையல்ல, சரியானவைகளையே கேட்பதற்கு உறுதியெடுக்க வேண்டும். நாம் மனிதன் மீது நம்பிக்கை வைப்பதைவிட, தேவன் மீது அதிக நம்பிக்கை வைக்க வேண்டும். ஏனென்றால், தேவன் நமக்கு என்ன சொல்லுகிறார் என்பதை உறுதி செய்ய வேதாகமத்தை அனுதினமும் வாசித்து, அதை அப்படியே விசுவாசித்து அதன்படி செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதினால் மாத்திரமே உண்மையான விசுவாசம் உண்டாகும் (ரோமர் 10:17). இதினிமித்தம் கிறிஸ்துவின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதின் மூலமாக இரட்சிப்பு உண்டாகிறது (எபி.5:8,9; மாற்கு 16:16).

சத்தியம் ஒன்றுதான் அந்தச் சத்தியம்தான் நம்மை விடுதலையாக்குகிறது (யோவான் 17:17;8:38). மேலும், சத்தியத்தினிடத்தில் வரும் எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டால் ஒரே மாதிரியான சத்தியத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியுங்கள். இதினிமித்தம் மதசம்பந்தமான காரியங்களெல்லாம் ஒரே விதமாகத் தான் இருக்கும். இதில் வேறுபாடானவர்கள் தவறானவைகளை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தபடியால் அவர்கள் வெவ்வேறு விதமாக இருக்கிறார்கள்.

நாம் எந்த அளவு சத்தியத்தைப் பேசுகிறோமோ அந்த அளவு உலகம் அதை விசுவாசிக்கும். ஒரு தனி நபராக நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களுக்கு எவைகள் போதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து ஆழமாகச் சிந்தித்திருக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளைக் கூர்ந்து கவனிக்கிறீர்களா? நீங்கள் எவைகளைக் கேட்கிறீர்களோ அவைகளை ஜாக்கிரதையாகக் கவனித்து அதை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து ஒப்பிட்டுப்பார்த்து, கேள்வி கேட்டு நீங்கள் விசுவாசிக்கும் காரியத்தை இது உண்மைதான், உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை என்பதை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், நாம் கேட்கும் உண்மை சத்தியத்தை துருவித் துருவி சோதித்துப் பார்த்தாலும் அந்த

சோதனைகளில் எல்லாம் உண்மை சத்தியமானது நிலைத்து நிற்கும். ஆகையால், நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்களோ அதை ஆராய்ந்து பாருங்கள். அதை வேதவசனங்களோடு ஒப்பிட்டுப்பாருங்கள். ஏனென்றால், நீங்கள் இதற்கு முன்பு தவறான சத்தியத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், அதை விட்டு விட்டு உண்மைச் சத்தியத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். கடந்த காலத்தில் தவறு செய்திருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்வது கடினமானதுதான். ஆனாலும், நீங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும்போது தான் இரட்சிக்கப்பட முடியும். எனவே, நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

## பாடம் - 7

# கர்த்தருடைய ஜெபம்

## The Lord`s Prayer

இயேசு கிறிஸ்து ஜெபத்தைக் குறித்து மத்தேயு 6:5-15 வசனங்களில் பல்வேறு பாடங்களைக் கற்றுத் தந்திருக்கிறார். அங்கே சூழல் என்னவென்றால், மலைப்பாங்கான பகுதி, திரளான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, சீஷர்களும் கூடி இருந்தார்கள். மலைப்பிரசங்கத்தின் ஊடே நம் ஆண்டவர் ஜெபத்திற்கான உதாரணத்தைக் கொடுத்தார். இது கர்த்தருடைய ஜெபம் என்று பொதுவாக அழைக்கப்படுகிறபடியால் இதற்கு சிறப்பு கவனம் கொடுக்க நாம் விரும்புகிறோம்.

முதலாவது, கிறிஸ்து சீஷர்களுக்கு எப்படி ஜெபிக்கக் கூடாது என்று கற்றுக்கொடுத்தார். *அன்றியும் நீ ஜெபம் பண்ணும் போது, மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம். மனுஷர் காணும் படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று அவர் சொன்னார்* (மத்தேயு 6:5). இங்கே மாயக்காரர் என்பது நடிப்பவர்களை, பாசங்கு செய்பவர்களைக் குறிக்கிறது. வேறு விதமாகச் சொன்னால், அவர்கள் உண்மை இல்லாதவர்கள், அவர்கள் மனிதர்களால் பார்க்கப்பட வேண்டுமென்று விரும்பு கிறார்கள், தங்களுடையவைகளை அவர்கள் வெளிக்காட்ட விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று இயேசுகிறிஸ்து சொல்கிறார். இத்தகைய மனிதர்களை நம் வாழ்க்கையில் பலமுறை பார்த்திருக்கிறோம். அவர்கள் பூங்காக்களிலும், பொது இடங்களிலும் நின்றுகொண்டு ஜெபம்பண்ணவும், பக்தி ரீதியான காரியங்களில் ஈடுபடவும் விரும்புகிறார்கள். அப்படி செய்யக்கூடாதென்று கிறிஸ்து திட்ட வட்டமாகச் சொல்லிவிட்டார். மனுஷர் காணும்படியாகவோ, கேட்கும்படியாகவோ நாம் ஜெபிக்கக்கூடாதென்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

மத்தேயு 6:6 ல், நம் கர்த்தர் நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று சொல்கிறார். *நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்*

*கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உங்கள் பிதா வெளியரங்கமாய் பலனளிப்பார்.* இங்கே கிறிஸ்து நம் ஜெபம் தேவனால் கேட்கப்பட வேண்டுமென்றால் தனிமையான ஓர் இடத்தைத் தெரிந்து கொண்டு, அங்கே போய் நாம் ஜெபிக்க வேண்டுமென்று சொல்கிறார். அப்படி நாம் செய்யும்போது அந்தரங்கத்திலிருக்கிற பிதா வெளியரங்கமாகப் பலனளிப்பார். நம் பிதா ஆவியாயிருக் கிறார், அவர் காணக்கூடாதவராயிருக்கிறார், அவர் எல்லோரும் காணும் விதத்தில் அல்லது அறிந்துகொள்ளும் விதத்தில் பலனளிப்பார் என்று கிறிஸ்து சொல்கிறார். தொடர்ந்து கிறிஸ்து பேசும் போது இவ்விதமாக எச்சரிக்கிறார். *அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது அஞ்ஞானிகளைப்போல வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள் கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்* (மத்.6:7,8). இவ்வசனப்பகுதியில் அஞ்ஞானிகளைப்போல் ஜெபிக்க வேண்டாமென்று தம்முடைய சீஷர்களை எச்சரித்தார். ஆயினும், இவ்விதமாக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக்கொடுத்தார்.

இன்று பல சபைகள் இந்த ஜெபத்தை தங்கள் ஆராதனை வேளைகளிலும், கூட்டங்களிலும் பயன்படுத்துவதை நாம் அறிந்திருக்கிறாம். இந்த ஜெபத்தை அவர்கள் ஒரு பாரம்பரியமாக செய்து வருகிறார்கள். திரும்பத் திரும்ப இந்த ஜெபத்தை செய்கிறார்கள். மேலும், இந்த ஜெபத்தில் ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்க வேண்டுமென்று கிறிஸ்துவால் சீஷர்களுக்கு கற்றுகொடுக்கப்பட்டது. அந்நேரத்தில் ராஜ்யம் வரவில்லை. ஆனால், சிறிது காலத்திற்குப் பிறகு ராஜ்யம் கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டது. அதிலிருந்து ராஜ்யம் இருந்து வருகிறது. எனவே, இப்போது நாம் ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கக் கூடாது. மாறாக, அதன் விரிவாக்கத்திற்காக, வளர்ச்சிக்காக ஜெபிக்க வேண்டும். ஒரு ஜெபத்தில் என்னென்ன காரியங்கள் இடம்பெற வேண்டுமென்று சொல்லி தம்முடைய சீஷர்களுக்கு இயேசு கிறிஸ்து ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தது சுவாரஸ்ய மாயிருக்கிறது. கிறிஸ்து கற்றுக்கொடுத்த மாதிரி ஜெபத்தில் இடம் பெற்றிருந்த இரண்டு அல்லது மூன்று காரியங்களைத் தவிர மற்ற காரியங்கள் இன்றும் கூட நம் அன்றாட ஜெபங்களில் இடம் பெற வேண்டும்.

அவர் அவர்களுக்கு எங்கள் பிதாவே என்று ஜெபிக்கும்படியாகக் கற்றுக்கொடுத்தார். எனவே, இந்த ஜெபம் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவாகிய தேவனுக்கு ஏறெடுக்கப்பட வேண்டும். உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்பது தேவனுக்கு செலுத்தும் மரியாதையைக் குறிக்கிறது.

அவர் ராஜ்யத்திற்காக ஜெபிக்கும்படியாகக் கற்றுக் கொடுத்தார். அந்நேரத்தில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் அதற்காக ஜெபித்தது சரியான ஒன்றாகத் தான் இருந்தது.

அவர் தேவனுடைய சித்தம் பரலோகத்திலே செய்யப் படுவதுபோல் பூமியிலும் செய்யப்படுவதாக என்று போதித்தார். தங்கள் விருப்பப்படி காரியங்கள் நடக்கவேண்டுமென்று விரும்பாமல், தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டுமென்று அவர் போதித்தார்.

அவர் அவர்களுடைய அனுதின தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக் கொடுத்தார். இதில் ஆகாரம் மற்றும் வாழ்க்கையின் தேவைகளும் உள்ளடக்கம். மேலும், சரீரப்பிரகாரமான தேவைகளுக்காக தேவனைச் சார்ந்திருக்க வேண்டுமென்று நமக்கு உணர்த்துகிறது.

அவர் அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபிக்கும்படி கற்றுக் கொடுத்தார். இதில் பாவமன்னிப்புக்காக ஜெபிப்பதும் உள்ளடக்கம். ஆனால், அவர்கள் தங்களுக்கு விரோதமாக மற்றவர்கள் செய்த தப்பிதங்களை மன்னிக்கிறவர் களாக இருக்க வேண்டும்.

அவர் வழிநடத்துதலுக்காக ஜெபிக்க வேண்டுமென்று கற்றுக்கொடுத்தார். இதற்குள் சோதனையிலிருந்து இரட்சிக்கும் படியான ஜெபமும் உள்ளடக்கம்.

இயேசு, வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் தேவனுடையவைகள் என்றும் கற்றுக்கொடுத்தார்.

இது சிறிய ஜெபமாக இருந்தாலும் கூட அர்த்தமுள்ள ஜெபமாயிருக்கிறது. இது நம்முடைய ஜெபமாக இருக்க முடியாதென்றால் நாம் எதற்காகத்தான் ஜெபிக்க வேண்டும்? இது நல்ல கேள்வியாயிருக்கிறது. இன்று ஒரு நல்ல ஜெபம், மாதிரி

ஜெபம் அல்லது கர்த்தர் கற்றுக்கொடுத்த ஜெபத்திலுள்ள கருத்துக்களை உள்ளடக்கியதாகத் தான் இருக்கும். ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், ராஜ்யம் வருவதாக என்று ஜெபிப்பதற்குப் பதிலாக, ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக ஜெபிக்க வேண்டும். கடைசியாக, ஜெபத்தை இயேசுவின் நாமத்தில் நிறைவு செய்ய வேண்டும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஜெபத்தை நிறைவு செய்யும்போது இவ்விதமாகச் சொல்கிறார். *மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார், மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால் உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.* இங்கே கிறிஸ்து என்ன சொல்கிறார்? சக மனிதர்கள் நமக்கு விரோதமாகச் செய்யும் தப்பிதங்களை நாம் அவர்களுக்கு மன்னிக்கவில்லையென்றால், நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்கவேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்? நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமென்றால், நமக்கு விரோதமாகத் தப்பிதங்களை செய்தவர்களிடத்தில் நாம் மன்னிக்கும் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாயிருப்போம். அதற்குப் பிறகு தான் நாம் தேவனிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்க முடியும்.

## பாடம் - 8

# பாவ மன்னிப்பு

## Forgiveness of Sins

மனிதன் பாவியாயிருக்கிறான் என்று வேதாகமம் சொல்லுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில், அவன் தேவனற்ற, நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்படுகிறான். மனிதன் இந்நிலை யிலேயே மரிக்க வேண்டுமா? ஒருவேளை அப்படி மரித்தால் அவன் நித்திய நித்தியமாக இழந்துபோவான். இது ஒரு பயங் கரமான நிலை. இருந்தபோதிலும் இதுதான் உண்மையா யிருக்கிறது.

மனிதன் பாவியாயிருக்கிறபடியால், அவன் தன் பாவத்தைக் குறித்து உணர்வுள்ளவனாயிருந்து, அப்பாவத்தி லிருந்து நிவர்த்தி பெற்று, பாவமன்னிப்பைப் பெற, பல்வேறு வழிகளைத் தொடர்ந்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறான். இது உலகளாவிய பிரச்சனையாயிருக்கிறது. ஆனால், ஜனங்கள் பல்வேறு விதங்களில் இதற்குத் தீர்வு காண முயற்சிக்கிறார்கள். சிலர் தங்கள் பாவங்களிலிருந்து நிவர்த்தி பெற மிருக பலிகளைச் செலுத்துகிறார்கள், தங்கள் சரீரங்களை வருத்திக் கொள்கிறார்கள். இன்னும் சிலர், பாவ மன்னிப்பைப் பெற நற்கிரியைகளில் ஈடு படுகிறார்கள் அல்லது உலகத்திலிருந்து தங்களைத் தனிமைப் படுத்திக்கொண்டு தங்கள் ஆத்துமாக்களுக்கு சமாதானத்தைத் தேட முயற்சிக்கிறார்கள். ஆனால், இந்த நம்பிக்கைகள், நடைமுறைகள் தவறானவைகளாக இருக்கிறபடியால் அவைகள் ஒருபோதும் மனிதனுடைய பாவங்களைப் போக்க முடியாது.

இருந்தபோதிலும், தேவன் நாமெல்லோரும் இரட்சிக்கும் படி தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளும் அளவுக்குத் தம்முடைய அன்பைப் பொழிந்தருளினார் (யோவான் 3:16,17; ரோமர் 5:8). இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரிக்க மனமு வந்து வந்தார். அவர் மனித இனத்துக்காக இதைச் செய்ய விரும்பினபடியால், மனிதன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க அவருக்கு மாத்திரமே அதிகாரம் உண்டு. அந்தத் தீர்மானங்கள் என்ன? வசனங்களைக் கவனியுங்கள்.

- *ஒருவர் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும் [யோவான் 8:24]*

- *ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் [லூக்கா 13:3].*

- *ஒருவர் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் [மத்.10:32,33].*

- *ஒருவர் பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் என்னும் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் [மாற்கு 16:16 அப்.2:38].*

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகளில் தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது, நமக்கு பாவ மன்னிப்பு கிடைக்கிறது. கர்த்தர் நம்மை இரட்சிக்கிறார். ஆகவே, நாம் நம் கடந்த கால பாவங்களிலிருந்து என்றென்றும் மன்னிக்கப் படுகிறோம்.

பாவம் அழிவை ஏற்படுத்தக் கூடியது. அது நம்மைப் பாடாய்ப்படுத்தி முடிவில்லாத மனவலியைக் கொண்டு வந்து, இறுதியில் நமக்குப் பெருத்த சோகத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், இரட்சிப்பால் நம் பாவங்கள் மன்னிக்கப்படும், முற்றிலுமாக அகற்றப்படும், என்றென்றும் எடுத்துப் போடப்படும் என்பது எவ்வளவு அருமையான ஆறுதலாக இருக்கிறது. நமக்கு ஓர் இரட்சகர் இருக்கிறார், அவருடைய பெயர் இயேசு கிறிஸ்து. நாம் அவரை விசுவாசத்தோடு நோக்கிப்பார்த்து அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்முடைய இரட்சகராக இருக்கிறார்.

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்பது உங்கள் பதிலானால், உங்களை இரட்சிக்க வல்ல இயேசு கிறிஸ்துவினிடத்தில் நீங்கள் திரும்பவில்லையென்றால் இழந்து போன நிலையில் தான் தொடர்ந்து இருப்பீர்கள். மாறாக, கீழ்ப்படிதல் மூலமாக நீங்கள் அவரிடத்தில் திரும்பும்போது, அவர் உங்களை இரட்சித்து அவருக்குச் சொந்தமாக மாற்றி விடுவார். அதன்பிறகு, கடந்தகாலப் பாவங்கள் கழுவப்பட்டது என்கிற நிம்மதியோடும், மன சமாதானத்தோடும் அந்தப் பரமக் கானானை அடையும் வரை தொடர்ந்து தேவனைப் பின்பற்ற முடியும்.

## பாடம் - 9

# புதிய பரிசேயர்களும், சதுசேயர்களும்

## The New Pharisees and Sadducees

**ஆ**ண்டவராகிய இயேசு கிறிஸ்து, மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து மரித்தார். கிறிஸ்து நான் நியாயப் பிரமாணத்தை அழிக்க வரவில்லை, அதை நிறைவேற்றவே வந்தேன் என்று சொன்னார் (மத்.5:17,18). ஆகவே, அவர் நியாயப்பிரமாணத்தை மற்றெந்த மனிதனையும் விட பூரணமாகக் கைக்கொண்டார். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமியிலே வாழ்ந்த நாட்களில் மோசேயின் பிரமாணத்தைப் பின் பற்றினவர்கள் பல்வேறுபட்ட பிரிவுகளாகப் பிரிந்திருந்தார்கள். அவர்களுள் மிகப்பிரபலமான பிரிவுகளாக சதுசேயர்களும், பரிசேயர்களும் இருந்தார்கள். பரிசேயர்கள் பழமை வாதிகளாக இருந்தார்கள். மேலும், அவர்கள் உயிர்த்தெழுதல் மற்றும் தேவதூதர்களில் நம்பிக்கை வைத்தார்கள். சதுசேயர்கள் புதுமை வாதிகளாக அதாவது தாராளக் கொள்கைக்காரர்களாக இருந்தார்கள். பரிசேயர்கள் நம்பினதை இவர்கள் மறுத்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து இவ்விரு பிரிவினரையும் சார்ந்தவரல்ல.

இந்தப் பரிசேயர்களும், சதுசேயர்களும் நியாயப் பிரமாணத்தைப் பாரம்பரியமாகவும், பழக்க வழக்கங்களாகவும் மாற்றி அதைக் கெடுத்துவிட்டார்கள். அவர்கள் தேவனுடைய உபதேசங்களையும் மனுஷருடைய உபதேசங்களையும் ஒன்றாக இணைத்து தேவ சித்தத்தை அவமாக்கினார்கள். அதன் விளைவாக, கிறிஸ்து அவர்களோடு ஒத்துப்போகமுடியவில்லை. அவர்களை ஆதரிக்கவும் இல்லை. அதற்குப் பதிலாக அவர் அவர்கள் செய்த மற்றும் போதித்த காரியங்களுக்காகக் அவர்களைக் கடுமையாகக் கடிந்துகொண்டார்.

இப்போது நாம் இந்தப் பரிசேயர்கள், சதுசேயர்களோடு கிறிஸ்துவுக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அவர் அவர்களைக் கடிந்துகொண்டதையும் பார்க்கலாம். *அவர் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில் பரிசேயன் ஒருவன் தன்னுடனே கூட அவர் பகற் போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான். அவர் போய்ப் பந்தியிருந்தார். அவர் போஜனம்பண்ணுகிறதற்கு முன்*

*கைகழுவாமலிருப்பதைப் பரிசேயன் கண்டு, ஆச்சரியப்பட்டான். கர்த்தர் அவனை நோக்கி பரிசேயராகிய நீங்கள் போஜன பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உள்ளமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக் கிறது. மதிகேடரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையோ? உங்களுக்கு உண்டானவைகளில் பிச்சை கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும். பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம், மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டு விடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே. பரிசேயரே உங்களுக்கு ஐயோ, ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, மறைந்திருக்கிற பிரேதக்குழிகளைப் போலிருக்கிறீர்கள், அவைகள் மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார்* (லூக்கா 11:37-44).

மேலும், மத்தேயு 23-ம் அதிகாரத்திலும் 13-ம் வசனம் தொடங்கி பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களைக் கடுமையாகச் சாடுகிறார். *மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினியை அடைவீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத் தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்* (மத்தேயு 23:13-15).

தொடர்ந்து இயேசு, அவர்களை இவ்விதமாகவும் கடிந்து கொண்டார். *குருடரான வழிகாட்டிகளே, கொசுயில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜன பான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத் திலோ அவைகள் கொள்ளையினாலும், அசுத்தத்தினாலும் நிறைந் திருக்கிறது. குருடரான பரிசேயனே! போஜன பான பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி அவைகளின் உட் புறத்தை முதலாவது சுத்தமாக்கு. மாயக்காரராகிய வேதபாரகரரே! பரிசேயரே!*

*உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்லறைகளைக் கட்டி நீதிமான்களின் சமாதிகளைச் சிங்காரித்து; எங்கள் பிதாக்களின் நாட்களில் இருந்தோமானால், அவர்களோடே நாங்கள் தீர்க்கதரிசிகளின் இரத்தப்பழிக்கு உடன்பட்டிருக்கமாட்டோம் என்கிறீர்கள். ஆகையால், தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்களுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள். நீங்களும் உங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புங்கள். சர்ப்பங்களே, விரியன் பாம்பு குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்* (மத்தேயு 23:24-33).

இந்தக் காரணங்களினால், இயேசு கிறிஸ்து தம்முடைய *சீஷர்களைப் பார்த்து: வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்* (மத்தேயு 5:20) என்றார்.

மேலும், பரிசேயர், சதுசேயர் என்பவர்கள் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லாதிருந்தபடியால், அவர்கள் ஒருவரையொருவர் சில காரியங்களில் எதிர்த்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவை எதிர்ப்பதென்று வரும்போது அவர்கள் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். எப்படியெனில், *பரிசேயரும், சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படி அவரிடத்தில் வந்து: வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்று கேட்டார்கள் [மத்தேயு 16:1], உடனே பரிசேயர் புறப்பட்டுப் போய், அவரைக் கொலை செய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடே கூட ஆலோசனை பண்ணினார்கள் [மாற்கு 6:3]. மேலும், அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று பரிசேயர் கேள்விப்பட்டு, அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர்களில்*

*நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதிக்கும்படி போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான்* (மத்தேயு 22:34-36).

கடைசியாக, அவர்களுடைய விடாமுயற்சியினாலும், கர்த்தருடைய சீஷர்களில் ஒருவனுடைய புத்தி பிசகினாலும் இயேசு கிறிஸ்துவை சிறைபிடித்து விசாரணைக்காக பிரதான ஆசாரியனுக்கு முன்பாகக் கொண்டு வந்த காரியத்தில் வெற்றியும் பெற்று (மத்தேயு 26:56), *விடியற்காலமானபோது, சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும், இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக் கட்டி, கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்* (மத்தேயு 27:1,2). அதன் பின்பு, கிறிஸ்து பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தவறாக விசாரிக்கப்பட்டு அதினிமித்தம் சிலுவையிலறையப்பட்டு அடக்கம் பண்ணப் பட்டார்.

ஆனால், அந்த மரணம் ஆண்டவரை சிறைபிடிக்க முடியாமல் அவருக்கு முன் மண்டியிட்டு மடிந்துபோனது. காரணம், அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். அவர், உயிர்த்தெழுந்த பிறகு பிரதான ஆசாரியர்களும், யூதமதத் தலைவர்களும் கல்லறையைக் காவல் காத்த காவலாளிகளுக்கு வெகுமதி என்னும் கையூட்டு கொடுத்து, *நாங்கள் நித்திரை பண்ணுகையில் இயேசுவின் சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவரைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லச் சொன்னார்கள்* (மத்தேயு 28:12,13). இப்படிப்பட்ட மத அமைப்பு களெல்லாம் இயேசு கிறிஸ்துவை எதிர்ப்பதென்று வரும்போது எப்படி சேர்ந்துகொண்டார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

இச்சம்பவங்களை எல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கும் போது சொல்லொண்ணாத் துயரமடைந்து இன்றைக்கெல்லாம் அப்படி நடக்கவே கூடாது என்று நினைக்கிறோம். மாறாக, இன்றும் அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. எப்படியெனில், இன்று புதிதாக தற்கால பரிசேயர்களும், சதுசேயர்களும் முளைத்திருத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரம் மறுபடியும் அவர்களால் உபத்திரவப்படுகிறது. அதினிமித்தம் அவர் மீண்டும் சிலுவையிலறையப்படுகிறார். யார் இந்த தற்கால பரிசேயர்களும், சதுசேயர்களும்? நம்மைச் சுற்றிலுமுள்ள மார்க்கப்பிரிவினைச்

சபைகளும், அதன் தலைவர்களும் தான் தற்காலப் பரிசேயர்களும், சதுசேயர்களும். இவர்கள் கிறிஸ்துவின் போதனைகளுக்குப் பதிலாக தனி மனித போதனைகளைத் திணித்து, அதற்குப் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவத்தை மாசுபடுத்தி, அதை வளரவிடாமல் தடுத்து, அதன் கண்ணியத்தைக் கெடுத்து விட்டார்கள். இப்படிச் செய்து கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அக்காரியத்தை வேடிக்கையாக்குவதை வாடிக்கையாக்கி விட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் போதிப்பதே போதனை என்ற தனித்துவப் பாதையில் பயணிக்கிறார்கள். சில சமயங்களில் இவர்களுக்குள்ளேயே எதிர்ப்புகளும் கிளம்புகின்றன. ஆனால், கர்த்தருடைய சபை அவருடைய வழி போதனை, உபதேசம் என்று வரும்போது, அவர்கள் அனைவரும் துரிதமாக ஒன்றிணைந்து உண்மை சத்தியத்தை எதிர்க்கும் தற்காலப் பரிசேயர்களாக, சதுசேயர்களாக மாறிவிடுகிறார்கள்.

மார்க்கப்பிரிவினைச் சபைகள் கிறிஸ்துவின் சபை பற்றி எவ்வளவாய் அறிந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டிலும், அதைக் குறித்து எந்தளவுக்கு எரிச்சலடைகிறார்கள் என்பதை அறிந்தால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். அவர்கள் எல்லாச் சபைகளும் ஒன்றுதான் என்று சொல்லி நீங்கள் எந்தச் சபையில் அங்கம் வகித்தாலும் பரவாயில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் கிறிஸ்துவின் சபை என்றும் வரும்போது மாத்திரம் எரிச்சலடைகிறார்கள். ஏனெனில், இப்படிப்பட்டவர்களெல்லாரும், கிறிஸ்துவின் சபையை ஒரு விகற்பமாகவே பார்க்கிறபடியால், அவர்கள் தொடர்ந்து இச்சபையின் காரியங்களைக் குறித்து தங்கள் ஜனங்களை எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பாக, ஒரு வாலிபனிடம் கிறிஸ்துவின் சபையாரோடு ஐக்கியம் கொள்ளுவதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்று எச்சரிக்கப்பட்டது. ஆனால், அந்த வாலிபனோ ஏன் ஐக்கியம் கொள்ளக்கூடாது என்று எச்சரித்தவர்களிடம் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில் என்னைத் திகைப்புக் குள்ளாக்கியது. காரணம், கிறிஸ்துவின் சபையார், தங்களைப் பிரத்யோகமாகக் காட்டிக்கொள்பவர்களென்றும், அவர்கள் தங்களை மற்றவர்களிடமிருந்து பிரித்துக்காட்டி, தங்கள் சபை மட்டும் தான் பரலோகம் செல்லும் என்றும், பரலோகம் போவதற்குத் தாங்கள் தான் சரியானவர்கள் என்றும் சொல்லிக்

கொள்வார்கள் என்றும் சொன்னார்களாம். ஆம், இது உண்மைதான். வேதமும் அப்படியே சாட்சி பகருகிறது. ஆனால், அதை ஏற்க இவர்கள் மனம் ஏனோ பதறுகிறது.

நான் சமீபத்தில் அச்சகத்தில் பணிபுரிபவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என்னிடம் அந்த அச்சகத்தின் உரிமையாளர் நான் அச்சடிக்கக் கொடுத்திருக்கும் கைப்பிரதியில் அவர் ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கள் இடம் பெற்றி ருப்பதாகவும், அதனால் அவர் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் சொன்னார். நான் எழுதிய கைப்பிரதியில் ஏற்றுக்கொள்ள முடியாதவைகள் என்று கூறப்பட்டதற்கு எதிராக வேதாகமத்திலிருந்து ஒரு வசனப் பகுதியைக் காட்டினேன். ஆனால், வேதாகமத்திலிருந்து ஒரு ஆதாரத்தைக் கூட அவர்களால் காட்ட முடியவில்லை.

எல்லா மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரும் பல்வேறு காரியங்களில் வேறுபட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாரும் ஒன்றிணைந்து, கிறிஸ்துவின் சபை என்று வரும் போது அதை எதிர்க்கிறார்கள். ஏன் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்? வேதாகமத்தில் இடம்பெறாத காரியங்களை நாம் போதிக்கிறோமா? வேதவசனத்துக்குப் புறம்பான பெயரை நாம் தரித்திருக்கிறோமா? கிறிஸ்துவின் சபையை விட மேலான சபை ஒன்று இவ்வுலகில் இருக்க முடியுமா? கிறிஸ்துவின் சபையார் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுவதில் என்ன தவறு இருக்கிறது?

மனிதர்கள் சொல்வதை, மதப்போதகர்கள் சொல்வதை மறந்து விடுங்கள். கிறிஸ்துவின் சபை பற்றிய உண்மைகளை அலசி ஆராய்ந்து பாருங்கள்? எங்களைச் சந்தித்து எங்களோடு வேத வாக்கியங்களைப் படிக்குமாறு உங்களை அன்போடு அழைக்கிறோம். வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சபை நாங்களா என்று ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் செய்யும்படியாக நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம் அது தான். நீங்கள் அப்படிச் செய்தால் தேவன் அதிலே மகிமைப்படுவார். நாங்களும் உங்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்வோம். ஏனென்றால், நாங்கள் எல்லா நேர்மையோடும் சரியாக இருந்து கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம். இதினிமித்தம், நாங்கள் உண்மையானவர்கள், தேவனுடைய வார்த்தையை மாத்திரம் போதிப்பவர்கள்

வேதாகமத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சபையார் நாங்கள் தான் என்று நீங்கள் கண்டறிந்தால், அந்த மகிமையான கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கும்படி ஆண்டவர் நாமத்தில் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். ஆனாலும், முடிவு உங்கள் கையில்தான் இருக்கிறது.

*இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு, இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்* (அப்.22:16;2:47). ✝

பாடம் - 10

# தேவ வார்த்தைகளோடு நீங்கள் வாதிட முடியாது

## You Can`t Arque With God`s Word

இன்றைய நாட்களில் வாழும் மக்களில் சிலர் தங்கள் நம்பிக்கை, நடைமுறை சூழ்நிலை போன்றவைகளுக்குப் பொருந்தும் விதமாக, தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை மட்டும் விரும்புகிறார்கள். இந்தச் செயல்பாடானது, தேவனுடைய வார்த்தையின் ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டு மற்றவைகளை நிராகரிக்க வழிவகுக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தையோடு வாக்குவாதம் செய்யவும் அதற்கு விளக்கமளிக்கவும் முயற்சிக்கிறார்கள். இச்செயல் பரிசுத்த எழுத்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதாகும்.

வேதவாக்கியங்களில் உள்ள முழுச்சத்தியமும் நமக்குத் தேவையாயிருக்கிறது. வேத வாக்கியங்களில் நமக்கான தேவனுடைய சித்தம் என்ன என்பதை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். நாம் குறைவான சத்தியத்திற்கல்ல, முழுமையான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, அதை மற்றவர் களுக்குப் போதிக்கவேண்டும். தேவனுடைய வார்த்தையின் ஏதோ ஒரு பகுதியை இது எனக்கானதல்ல என்று அதைக் கண்டுகொள்ளாமல் அதை நிராகரித்தால் அது எவ்விதத்திலும் ஏற்புடையது அல்ல. அதாவது, பாதி உண்மை போதுமானதல்ல.

அதேவேளையில், இரட்சிக்கப்பட ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம், விசுவாசிப்பது மட்டும்தான் என்று போதிக் கிறவர்களும் இருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக, யோவான் 3:16; 3:36; 5:2; அப் 16:31 போன்ற வசனங்களைப் பயன்படுத்து கிறார்கள். இது சம்மந்தமாக, மற்ற வசனங்கள் என்ன போதிக் கின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, இதை மட்டும் தான் தேவன் எதிர்பார்க்கிறார் என்னும் விவாதம் செய்யலாம். ஆனால், விசுவாசம் அவசியமா என்னும் விவாதம் தேவையில்லை. இந்த வேத வாக்கியங்கள் எல்லாம் ஒருவர் இரட்சிக்கப்பட விசுவாசிக்க வேண்டும் என்றுதான் போதிக்கின்றன. அதே சமயம், ஆத்தும இரட்சிப்பு என்று வரும்போது இந்த வசனப்பகுதிகளை மாத்திரம் நாம் ஆதாரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. விசுவாசத்தினாலே மாத்திரம் என்னும் உபதேசத்திற்கு ஆதரவாக, இவ்வசனப்

பகுதிகளைப் பயன்படுத்துவார்கள். அநேகமாக அவர்கள் விசுவாசத்தின் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் அதற்கென ஒரு எல்லை வகுத்திருக்கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, ஒருவர் மனந்திரும்ப வில்லை என்றால் அப்படியே கெட்டுப்போவார்கள் என்று சொல்லுகிறார் (லூக்கா 13:3). இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதமாக அப்போஸ்தலன் பவுல், எங்குமுள்ள மனிதர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார் என்றார் (அப்.17:30). இப்படி மனந்திரும்புதலுக்கான அவசியத்தை வலியுறுத்திப் போதிக்கும் வசனங்கள் ஏராளமாக உள்ளன. இதினிமித்தம், ஒருவர் தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்புவது தான் மிக முக்கியமாகச் செய்யப்பட வேண்டிய காரியம் என்ற முடிவுக்கு வர வேண்டும். மனந்திரும்புதலைப் பொறுத்தளவில் விவாதத்திற்கும், வாக்குவாதத்திற்கும் வேலையே இல்லை.

வேதாகமத்தில் பல வசனங்கள் ஞானஸ்நானத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றன (அப்.22:16; ரோமர் 6:3). இதன் பொருள் ஞானஸ்நானம் மாத்திரம் தான் ஒருவரை இரட்சிக்கிறதா? அப்படியானால் விசுவாசம் அவசியமில்லையா? மனந்திரும்புதல் தேவையில்லையா? போன்ற கேள்விகளெல்லாம் கேட்கப்பட்டு விவாதிக்கப்பட்டாலும் ஒருவர் தேவனுடைய சித்தத்தின்படி மேற்சொல்லப்பட்ட ஒட்டுமொத்த சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறதாக இருந்தால் ஞானஸ்நானத்தின் அவசியம் பற்றி எந்தச் சந்தேகமும் ஏற்படாது. அப்போஸ்தலனாகிய பேதுரு பெந்தகொஸ்தே நாளிலே ஜனங்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும், பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னார் (அப்.2:38). இங்கே விசுவாசத்தைப் பற்றிக் கேட்கப்பட்ட கேள்வி அவர்கள் ஏற்கனவே விசுவாசித்தார்கள் என்பதைத் தான் காட்டுகிறது. நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இங்கே விவாதம், வாக்கு வாதம் செய்வதற்கு ஒன்றுமே இல்லை. நாம் செய்ய வேண்டிய தெல்லாம் சுவிசேஷத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளுவதுதான்.

நாம் இரட்சிப்பின் திட்டம் என்னும் பாடத்தைப் படித்தாலும் சரி, அல்லது வேறு ஏதாவது பாடத்தைப் படித்தாலும் சரி, வேதாகமப் பாடத்தைப் படிக்கும்போது, அதில் ஒவ்வொரு

வசனத்திலுள்ள எல்லாச் சத்தியத்தையும் ஏற்றுக்கொள்ளும் மன நிலையில் நாம் அதை அணுக வேண்டும். இதினிமித்தம் நாம் ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள எல்லாக் கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உறுதியான நிலைப்பாடுதான் கிறிஸ்துவுக்குள் நம்மை வெற்றி சிறக்கப்பண்ணும்.

நிச்சயமாகவே, நம் கர்த்தர் எல்லா சத்தியத்தையும் எல்லா சுவிசேஷக் கட்டளைகளையும் ஒரே வசனப்பகுதியில் தரவில்லை. ஆகவே, நாம் ஒரு வேதாகமப் பாடத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள ஒன்றிரண்டு வசனங்களிலே நின்றுவிடாமல், தொடர்ந்து தேவனுடைய வார்த்தைகள் எல்லாவற்றையும் வாசித்து அதிலுள்ள சத்தியத்தை ஒருங்கிணைக்க வேண்டும். அப்படிச் செய்வதின் மூலமாகவே தேவன், நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பதைக் காணமுடியும். மேலும், எல்லா சத்தியத்தையும் நாம் விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் இரட்சிக்கப்பட முடியும். இதில், விவாதத்திற்கோ, வாக்குவாதத்திற்கோ வழியே இல்லை.

நாம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட ஒரு நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படியாக சத்தியத்தை நிராகரிக்கும் நிலைக்கு ஒரு போதும் தள்ளப்படக்கூடாது. நாம் அப்படியொரு நிலைக்குத் தள்ளப்பட்டால் நம் வாழ்வை நாம் வீணாக்கி, தேவனுடைய வார்த்தையில் ஒரு பகுதியை நிராகரித்து நித்திய நித்தியமாக நம் ஆத்துமாவை இழந்துபோவோம். அதினிமித்தம் மனிதன் பெருமைக்காகவும், பிடிவாதத்திற்காகவும் கொடுக்கும் விலை தான் என்ன?

ஆகவே, நாம் நம் ஆண்டவருடைய வார்த்தைகளை நினைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். *என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால், நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்* (யோவான் 12: 48-50).

தேவனுடைய சத்தியத்தை நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மாற்றாதபோது, நிச்சயமாக, எந்த ஒரு மனிதனும் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணியக்கூடாது. +

## பாடம் - 11

# எந்த சபை சரியானது?

# Which Church Is Right?

இவ்வுலகில் அநேக சபைகள் இருக்கின்றன. ஆனால், ஒரேயொரு சபையைத் தான் தேவன் அங்கீகரிப்பார் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர் (கொலோ.1:18). ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு (எபேசியர் 4:4-6) என்று வாசிக்கிறோம். இவ்வசனங்களின்படி ஒரே ஒரு சபை தான் சரியானதாக இருக்க முடியும். அப்படியானால், அந்த சபை எது?

**1. சபை இயேசுகிறிஸ்து கட்டினது**

மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையை கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18).

**2. சபை எருசலேமை ஆரம்பமாகக் கொண்டது**

அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினால் பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லூக்கா 24:47).

**3. சபை கி.பி. 33ல் ஸ்தாபிக்கப்பட்டது**

தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்.2:47).

**4. சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறது**

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள் கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:16). நீங்களே கிறிஸ்துவின் சரீரமாகவும் தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (1கொரி.12:27). எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லா

5. சபையில் கிறிஸ்து தலைவராக ஆளுகை செய்கிறார்

அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ. 1:17).

6. சபை இயேசுவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது

ஆகையால் உங்களைக்குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் (அப்.20:28).

7. சபை கிறிஸ்துவால் அன்புகூரப்படுகிறது

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து (எபேசியர் 5:25).

8. சபைக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார்

கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார் (எபேசியர் 5:23).

9. சபை கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டது

மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்: பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத்தேயு 16:18). போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட

10. சபை அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்

முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று (அப்.11:26).

11. சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சபை என்றழைக்கப்படுகிறது

எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாக சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றாலும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:22,23).

வற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபேசியர் 1:22,23).

### 12. சபை ஒரே சரீரம் என்றழைக்கப்படுகிறது

உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு (எபேசியர் 4:4).

### 13. சபை இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்

தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப்.2:47)

### 14. சபையை கிறிஸ்து மறுபடியும் கூட்டிச் செல்வார்

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும், தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார் (எபேசியர் 5:27).

புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும் இந்தச் சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி தேவனை ஆராதித்து, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போலவே வாழும் ஜனங்களை உள்ளடக்கிய ஓர் மகிமையான கூட்டமாகும். மார்க்கப் பிரிவினை சபையாரின் முரண்பாடான உபதேசங்கள் பலவிதமான பெயர்கள், ஆராதனை முறைகள், இரட்சிப்பின் வழிகள் போன்றவற்றை மறைப்பதற்கு பரந்து விரிந்த பெரிய குடை எதுவுமே இல்லை. எல்லா சபைகளும் ஒன்றுதான், நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு எந்தச் சபையிலும் அங்கத்தினராகலாம் என்று பிசாசு உங்களை வஞ்சிக்க இடங்கொடாதிருங்கள். உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பை சபைதான் தீர்மானிக்கிறது என்று தேவன் சொல்லுகிறார். ஆகவே, நீங்கள் புதிய ஏற்பாடு காட்டும் கிறிஸ்துவின் சபையில் அங்கமாகி உங்கள் ஆத்துமாவை இரட்சித்துக் கொள்ளுங்கள்.

## பாடம் - 12

# வேதாகம ஞானஸ்நானம்

# Bible Baptism

ஞானஸ்நானம் பற்றிய உண்மைகளைச் சொல்லும் அதிகாரப்பூர்வமான ஒரே புத்தகம் வேதாகமம்தான். ஆகவே, இப் பாடத்தைப் பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள தேவ ஆவி யினால் ஏவப்பட்ட புத்தகத்திற்குத்தான் நாம் செல்ல வேண்டும். ஆகையால், கீழ்காணும் உண்மைகளைக் கவனியுங்கள்.

**1. ஒரே ஒரு ஞானஸ்நானம்தான் உண்டு**

ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ் நானமும் என்றுள்ளது (எபேசியர் 4:5). இந்த உண்மை கி.பி. 64-ல் எழுதப்பட்டது. இதற்கு முன்னால் வேறுசில ஞானஸ் நானங்கள் இருந்திருக்கின்றன. ஆனால், இக்காலகட்டத்தில் அதாவது கி.பி 64- ல் ஒரே ஒரு ஞானஸ்நானந்தான் இருந்தது.

**2. இது அடக்கம் செய்யப்படுவதாயிருக்கிறது**

ஞானஸ்நானத்தில் அவரோடே கூட அடக்கம் பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவேரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12). கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமை யினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு. அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3,4). Baptizo என்னும் கிரேக்க வார்த்தையின் பொருள், அடக்கம் பண்ணப்படுதல், மூழ்குதல் போன்றவைகளாகும். இது ஒரு போதும் தெளித்தலையோ அல்லது ஊற்றுதலையோ குறிக்காது.

**3. இது தண்ணீரில் அடக்கம்பண்ணப்படுவதாயிருக்கிறது.**

இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில்; தண்ணீருள்ள ஒரிடத்திற்கு வந்தார்கள், அப்பொழுது மந்திரி

இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறு கிறதற்குத் தடையென்ன என்றான் ( அப்போஸ்தலர் 8:36).

4. இது கிறிஸ்துவின் சுவிசேஷக் கட்டளையாயிருக்கிறது.

பின்பு அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் (மாற்கு 16:15,16). கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்பொழுது சில நாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக் கொண்டார்கள் (அப்.10:48).

5. இது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டும்.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து (மத்தேயு 28:19)

6. இது இரட்சிக்கிறது.

அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1பேதுரு 3:21).

7. இது பாவமன்னிப்புக்கானது

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்.2:38).

8. இது பாவங்களைக் கழுவுகிறது.

இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான் (அப்போஸ்தலர் 22:16).

9. இது ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச்செய்கிறது.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீகளா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:34). ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலாத்தியர் 3:26,27)

10. இது ஒருவரை கிறிஸ்துவுக்குள் இருக்கச்செய்கிறது.

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1கொரி. 12:13).

## பாடம் - 13

# ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஆராதனை

# Acceptable Worship

**வே**தாகமத்தை விசுவாசிக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் வேதாகமம் போதிக்கிறபடி தேவனை ஆராதித்தால், எல்லோரும் ஒரே விதமாகத்தான் ஆராதிப்பார்கள். வேதாகமம் *அறியாமையுள்ள* ஆராதனையையும் (அப்போஸ்தலர் 17:23) *வீணான* ஆராதனையையும் (மத்தேயு 15:9) பேசுவதோடு நின்று விடாமல் தேவனுடைய போதனையின்படி ஆவியோடும், உண்மையோடும் தேவனிடத்திற்கு ஏறெடுக்கப்படும் *மெய்யான* ஆராதனை பற்றியும் பேசுகிறது (யோவான் 4:2,24). கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் தேவனை ஆராதிக்கும்படி ஒன்று கூட வேண்டும். *வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில் பவுல் மறு நாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்* (அப். 20:7). இவை களெல்லாம் தேவனுடைய வர்த்தையில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் ஆராதனையின் பங்குகள்.

**1. கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் படிக்க ஒன்று கூடி வரவேண்டும்.**

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவை களால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணு கிறீர்களே. என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39). அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியி ருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கி லும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17:11). கிறிஸ்து இயே சுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை நீ சிறுவ யது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும் (II தீமோ.3:15)

**2. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கவேண்டும்**

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணு தலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42).

3. கிறிஸ்தவர்கள் ஆராதனையில் இசைக்கருவிகள் இல்லாமல் பாடவேண்டும்.

சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி (எபேசியர் 5:19). கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாகயிருப்பதாக; சங்கீதங் களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி (கொலோ. 3:16). புதிய ஏற்பாட்டில் சபையில் தேவனை துதித்துப்பாடுவது தொடர்பாக சில வசனங்கள், அவைகளில் உண்டு. ஆனால், ஒரு வசனம் கூட இசைக்கருவிகளுடன் தேவனை துதிப்பதை முன் உதாரணமாகக் காட்டுவதில்லை.

4. கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கேற்க வேண்டும்.

அவர்கள் போஜனம்பண்ணுகையில் , இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாய் இருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள்: இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமா யிருக்கிறது (மத்.26:26-28). வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து , நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் ( அப். 20:7).

5. கிறிஸ்தவர்கள் தங்கள் வருமானத்திலிருந்து காணிக்கை கொடுக்க வேண்டும்.

நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராத படிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (I கொரி. 16:12). அவனவன் விசனமாயுமல்ல கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமா யிருக்கிறார் (II கொரி.9:7). சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர்

புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கக்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் (எபிரெயர் 10:25).

எபிரெய எழுத்தாளர் எச்சரித்தபடியே, கர்த்தருடைய ஜனங்கள் சபை கூடிவருதலை ஒருபோதும் விட்டு விடக்கூடாது. மேற்சொல்லப்பட்ட ஆராதனைப் பங்குகளில் பங்கேற்க கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் அதாவது ஞாயிற்றுக்கிழமை சபை கூடிவரவேண்டும். இதில் ஒரு பங்கு கூட விடப்படவுங்கூடாது, ஒன்று கூட சேர்க்கப்படவுங் கூடாது. இவ்விதமாக மாத்திரமே தேவனை உண்மையாக ஆராதிக்க முடியும்.

+

## பாடம் - 14

# கிறிஸ்தவத்தின் செல்வாக்கு

# The Influence of Christianity

கிறிஸ்தவம் இவ்வுலகில் எவ்வளவு பெரிய செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறதென்று என்றாவது யோசித்ததுண்டா? இது ஜனங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிற காரியங்களுக்கும் பொருந்தும், விசுவாசியாத காரியங்களுக்கும் பொருந்தும். நம் நாட்டில் மிகக் குறைந்த சதவீத மக்களே கிறிஸ்தவத்தை தழுவியிருந்தாலும் கூட அது எல்லா தரப்பு மக்களிடத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது

நாட்டுச் சட்டங்களில் குறிப்பாக திருமணச் சட்டங்களில் காணப்படும் ஒழுக்க நெறிகள், கொடுக்கல் வாங்கல்களில் இருக்க வேண்டிய நேர்மை மற்றும் கொலை போன்ற பெருங்குற்றங்களுக்குத் தண்டனை போன்றவை களெல்லாம் வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு வகுக்கப்பட்டவைகள் தான். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை, கிறிஸ்துவுக்கு முன்பு, கிறிஸ்துவுக்கு பின்பு அதாவது கி.மு, கி.பி என்று தான் உலக வரலாறே பிரிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் மொழி, கலை மற்றும் இலக்கியத்தின் மீது கிறிஸ்தவம் எப்படிப்பட்ட செல்வாக்கை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை எல்லோரும் அறிவார்கள். இக்காரியங்களை பலர் அறியாமலிருக்கலாம், இருந்தபோதிலும் தான் இது உண்மை.

கிறிஸ்தவம் இல்லையென்றால் ஒட்டு மொத்த உலகமும் எப்படியிருந்திருக்கும்? கிறிஸ்தவம் இவ்வுலகத்தை விட்டு அழிக்கப்பட்டிருந்தால் நமக்கு என்ன நேரிட்டிருக்கும்? அது, நிச்சயமாக பயங்கரமாயிருந்திருக்கும்.

கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தபிறகு மனித வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஈராயிரம் வருடங்களுக்கு முன்பு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். கிறிஸ்து இவ்வுலத்திற்கு வந்தபோது அவரிடத்தில் படைபலம் இல்லாதிருந்தது. அவர் யுத்தத்தில் இரத்தம் சிந்தவில்லை. ஆனாலும், அவர் இவ்வுலகை வென்றார். கிறிஸ்து இவ்வுலகத்தை மாற்றியது போல் எந்த ஒரு மனிதனும் மாற்றவில்லை, மாற்றவும் முடியாது.

இன்று இருக்கும் கிறிஸ்தவம், கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்தார் என்பதற்கு மாத்திரமல்லாமல், அவர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதற்கும் சான்றாயிருக்கிறது. இவ்வுலகிலுள்ள எல்லா மக்களின் வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து ஏதோ ஒரு விதத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வுலக மக்கள் தொகையில் பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக ஏற்றுக்கொள்ளாத பட்சத்திலும், இவ்வளவு பெரிய தாக்கம் கிறிஸ்துவால் ஏற்பட்டிருக்கிறதென்றால், பெரும்பாலானோர் அவரை ஏற்றுக்கொண்டிருந்தால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்பதை சற்று கற்பனை செய்து பா'ருங்கள்.

உலகளாவிய அளவில் கிறிஸ்தவம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் பகையுணர்வு, பொறாமை போன்றவைகளுக்குப் பதிலாக அன்பும், அரவணைப்பும் பெருகி யுத்தங்கள் ஓய்ந்திருக்கும். பொய், களவு, கொலை போன்றவைகள் ஒழிக்கப்பட்டிருக்கும். ஒழுக்கக்கேடு மற்றும் எல்லாவகையான பாவங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் எல்லோரும் பூரணராகிவிடுவார்கள், பாவமற்ற வாழ்க்கை வாழ்வார்கள் என்று பொருள்படாது, ஆனால், நன்மையானவைகளை நோக்கி உலகம் பயணிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

மார்க்கப்பிரிவினை கிறிஸ்தவமே மனிதன் மீது ஒழுக்க ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும்போது எல்லா ஜனங்களும் தூய கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டால், அது உலகத்திற்கு என்னவெல்லாம் செய்ய முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள்! கிறிஸ்துவின் போதனைகள் உலகில் காணப்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் அருமருந்தாய் இருக்கிறபடியால் அதன் விளைவு ஒரு புதிய சமுதாயமாயிருக்கும். மனிதன் இதுகாறும் அறிந்திராத நன்மையான காரியங்களாயிருக்கும். கிறிஸ்துவின் உபதேசம் உலகிலுள்ள மக்களை ஒருங்கிணைக்கும். எல்லோரும் சகோதர, சகோதரிகளாயிருந்து. மற்றவர்களுடைய தேவைகளைக் குறித்து அக்கறையுடையவர்களாயிருப்போம். பசி, பஞ்சம், பட்டினி அறவே எல்லா தேசங்களிலிருந்தும் நீக்கப்பட்டிருக்கும். எல்லா மனிதர்களும் தங்கள் சக மனிதர்களுக்கு உதவி செய்யத்தக்கதாக வேலை செய்வார்கள். பகிர்வு அதிகமாக இருக்கும். அதினிமித்தம் எல்லோரும் நன்மை அடைவார்கள்.

பக்திப்பிரகாரமாக, எல்லாரும் ஒரே தேவனைத் தொழுது, ஒரே இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்த்து, வேதாகமத்தால் மாத்திரம் வழிநடத்தப்பட்டு ஒரே சபையின் அங்கத்தினர்களாயிருந்திருப்பார்கள். எல்லாச் சபைகளுக்கும் ஒரே நாமம் தரிக்கப்பட்டு எல்லோரும் ஒரே விதமான சுவிசேஷத்தைப் போதிப்பார்கள். ஆகையால், எல்லோரும் பாவமன்னிப்பை அனுபவிப்பார்கள். இதினிமித்தம் எல்லோருக்கும் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை உண்டாகும்.

நிச்சயமாகவே, ஒட்டுமொத்த உலகமும் கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் ஏற்றுக்கொண்டால் எப்படிப்பட்ட அனுகூலமான சூழ்நிலை இவ்வுலகில் காணப் படும் என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இது சாத்தியமாக இருந்தாலும்கூட, இது நடப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதன் பொருள் நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து , உங்கள் வாழ்க்கையில் அவரை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பொருள்படாது. நீங்கள் அவரிடத்திலிருந்து கற்றுக்கொண்டு அவரிடத்தில் வந்து, அவரை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தால் அவர் உங்களை இரட்சித்து, உங்கள் வாழ்வை ஆசீர்வதிப்பார். அதன் பின்பு ஒரு கிறிஸ்தவனாக நீங்கள் அவருக்காக வாழ்ந்து அவருக்கு சேவை செய்யும்போது, அவர் உங்களை ஆசீர்வதிப்பது மாத்திரமல்லாமல் அநேகரை ஆசீர்வதிக்க உங்கள் மூலமாகக் கிரியைகளையும் நடப்பிப்பார்.+

## பாடம் - 15

# சத்தியத்தை நேசித்தல்

# Love of The Truth

சத்தியத்தைப் போதிப்பது மிக எளிமையானது. தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்வதில் அவர்களுக்கு எந்த சிரமமும் இல்லை. அவர்களுக்கு சத்தியம் அறிவிக்கப்பட்ட வுடனேயே அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். சத்தியத்தி லிருந்து தப்பியோட அவர்கள் சாக்குபோக்குகள், வாக்கு வாதங்கள் போன்ற எந்த முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. சத்தியம் அவர்களுக்கு முன்பாக வைக்கப்படும்போது காரியங்கள் இப்படியா இருக்கிறது என்று சீர்தூக்கிப் பார்த்து அவர்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் ஏன் சத்தியத்தை மிக எளிதாக ஏற்றுக்கொள்கிறார்கள்? அவர்கள் நேர்மையற்றவர்களா? அவர்களுக்கு உள்ளார்ந்த நோக்கம் ஏதாவது இருக்கிறதா? தேவவாக்கியங்களை சரிவர அவர்கள் புரிந்து கொள்ளவில்லையா? இக்கேள்விக்கான பதில் அதற்கு நேர் எதிரானதாகும். நாம் சத்தியத்தை நேசிக்க நேர்ந்த மக்களைப்பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது இவ்வுலகில் பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கிற ஒருவரை சந்தித்து அவருக்குக் சத்தியத்தை அறிவித்து அவரை ஆதாயப்படுத்துவது எத்தனை சந்தோஷமான காரியமாயிருக்கிறது. எல்லோருக்கும் அந்த ஆசை ஏன் இருக்கக்கூடாது? எல்லோரும் சத்தியத்தை ஏன் நேசிக்கக்கூடாது? பொருளாதாரமாக இருந்தாலும் சரி, விஞ்ஞான மாக இருந்தாலும் சரி, மத சம்மந்தமாக இருந்தாலும் சரி இறுதியில் சத்தியம் தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். பொய், நேர்மையான முறையில் நம்பப்பட்டாலும் கூட அது உதவாது. மாறாக, விவேகமான ஒரு நபர், நேர்மையான ஒரு நபர் உண்மை யைத்தான் தேடுகிறவராயிருக்கிறார். நமக்கு வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தை என்னும் உண்மை அதாவது சத்தியம் இருக்கிறது. அதனிடத்தில் மரியாதையுடனும், அன்புடனும் வருகிறவர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வார்கள். அவர்கள் சத்தியத்தை நேசிக்கிற மற்றவர்களோடு சேர்ந்து கொள்வார்கள், ஏனென்றால், சத்தியம் ஒருபோதும் குழப்பத்தை ஏற்படுத்தாது, தவறாக வழி நடத்தாது, அதை ஏற்றுக்

கொள்கிறவர்களைத் தவறான திசையில் கொண்டு செல்லாது மாறாக, சத்தியம் அதை நேசிப்பவர்களை ஒன்றிணைத்து, அவர்கள் ஒருமித்த கருத்துடன் பணியாற்ற சூழ்நிலையை சாத்தியமாக்கும்.

எல்லோரும் உண்மை அல்லது சத்தியத்தை நேசிப்ப தில்லை என்பது துக்ககரமான ஒரு காரியமாகும். அதிலும் குறிப்பாக, மத சம்பந்தமான காரியங்களில் ஜனங்கள் உண்மை அல்லது சத்தியத்தை நேசியாமலிருப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது. அதனால் தான் ஜனங்கள் மனிதனால் உண்டாக்கப் பட்ட உபதேசங்கள் மற்றும் தவறான பாரம்பரியங்களுக்குப் பின் செல்கிறார்கள். அவர்கள் சற்று இதை யோசித்தால் இத்தகைய காரியங்கள் சரியானதாக இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்வார்கள். ஆனால், அவர்கள் இவ்விதத்தில் தான் போக வேண்டுமென்று தங்கள் மனதில் நியமித்துக்கொண்டு அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதில் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்.

இதே ஜனங்கள் வேதாகமத்தைப் படிப்பதற்கு நேரம் ஒதுக்க விருப்பமில்லதவர்களாகத்தான் இருக்கிறார்கள். சொல்லப்போனால், தேவனுடைய வார்த்தையோடு நேரடியாக முரண்படுகிற காரியங்களை அவர்கள் போதிக்கிறார்கள். அவர்கள் தங்கள் உணர்வுகளில் நம்பிக்கை வைத்து எல்லா சபைகளும் ஒன்றுதான் என்று தங்கள் செயல்பாடுகளை நியாயப்படுத்துகிறார்கள். அவர்கள் மனம் சத்தியத்திற்கு அடைக்கப்பட்டிருக்கிறபடியால் எளிமையான சத்தியத்தைக் காட்டி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்வதென்பது அசாத்திய மான ஒன்றாக மாறிவிடுகிறது. அவர்களுடைய பிரச்சனை என்னவென்று பார்க்கும்போது அவர்கள் சத்தியத்தை நேசிக்காமலிருப்பது தான். அவர்கள் இழந்துபோன நிலையில் இருப்பதால், அவர்களுடைய நித்திய அழிவை தடுக்க நம்மால் பெரிய அளவில் ஒன்றும் செய்ய முடியாது.

இந்த ஜனங்கள் எதை நம்புகிறார்களோ அதற்காக மிகுந்த பக்தி வைராக்கியத்துடன் வேலை செய்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை நேசிப்பதாக உங்களிடம் சொல்லலாம். ஆனால், அவர்கள் உண்மையில் சத்தியத்தை நேசிப்பதில்லை. இது எப்படி நமக்குத் தெரியும்? அவர்கள் வேதாகமத்தை திறந்த மனதோடு படிக்க மறுப்பதை வைத்தே நாம் புரிந்துகொள்ளலாம். சத்தியத்தை நேசித்து, அதற்குக் கீழ்ப்படிய முயற்சிக்கிறவர்கள்

மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அவர்கள் கேள்விகளைக் கண்டு பயப்படுவதில்லை, சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களோடு சேர்ந்து வேதவாக்கியங்களை படிப்பதற்கு அவர்கள் தயங்கு வதில்லை. ஆனால், சத்தியத்தை நேசிக்காதவர்கள் கேள்விக் கணைகளைக் கண்டு துவண்டுபோகிறார்கள். அவர்கள் கற்றுக் கொள்ளுகிறவைகள் ஏற்கனவே அவர்கள் ஏற்றுக்கொண்டவைகளுக்கு முரண்பாடாக இருக்கிறபடியால் அவர்கள் அதிகமாகப் பயப்படுகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு இவ்விதமாக எழுதினார். *அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால் ஒரு ஆவியினாலாவது வார்த்தையிலாவது, எங்களிடத்திலிருந்து வந்தாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது கிறிஸ்தவனுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகத் சொல்லப் பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்க்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து, தன்னைத்தானே தேவன் என்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். நான் உங்களிடத்தில் இருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படும் முன்னே வெளிப்படாது. நீக்கப்படும் போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தின்னாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாதத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய் சத்தியத்தின்*

*அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால், சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்* (II தெச.2:1-12).

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில் பவுல் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கவனித்தீர்களா? அநேகர் சத்தியத்தை நேசியாதபடியால் தவறானவைகளைப் பின்பற்று வார்களென்றும், சத்தியத்தின் மீதான அவர்களுடைய அன்பு குறைச்சலினால், அவர்கள் வஞ்சிக்கப்பட தேவன் அனுமதிப் பாரென்றும் பவுல் சொல்லியிருக்கிறார். அதற்கு அப்பால் அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார் என்றும் இங்கே பார்க்கிறோம்.

எதற்காக தேவன் இவைகளையெல்லாம் செய்வார்? ஏனென்றால், சத்தியத்தை நேசிக்காதவர்களை தேவன் இவ்விதமாகத் தான் நடத்த விரும்புவார். அவர்கள் சத்தியத்தை விரும்பவில்லை. அவர்களுக்கு அற்புத அடையாளங்கள், வல்லமை போன்றவைகளில் தான் விருப்பமிருக்கிறது. பொய்யான வல்லமைகள் போன்றவைகளுக்கெல்லாம் சாத்தான் தான் பொறுப்பு என்று தெரிந்தாலும் கூட அதைப் பற்றி பொருட்படுத்தாமல் அது அவர்களுக்குத் தேவை என்று விரும்புகிறார்கள். அவர்கள் செவித்தினவுள்ளவர்களென்று பார்க்கிறோம், அதாவது, எப்போதும் புதிய புதிய காரிங்களை கற்றுக்கொள்ள விருப்ப முள்ளவர்கள் என்பது இதன் பொருளாகும்.

பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள். *ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக் கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து*

ஏசாயாவும், *அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர் களுடைய கண்களை அவர் குருடாக்கி அவர்கள் இருதயத்தை*

*கடினமாக்கினார் என்றான். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்* (யோவான்12:40,43).

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதியில், முதல் நூற்றாண்டு ஜனங்களைப் பற்றி நாம் வாசிக்கிறோம். இன்று நிலைமை எப்படி இருக்கிறது? அதேவிதமான நிலைமைதான் நிலவுகிறது. இன்றைய நாட்களிலும் செவித்தினவுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தை நேசிக்காமல் புதிய காரியங்களைக் கற்றுக் கொள்ள தங்கள் செவிகளைத் திறக்கிறார்கள், இன்னும் பலர், தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புகிறார்கள்.

இன்றைய நாட்களிலும் காரியங்கள் அதேவிதமாகத்தான் இருக்கிறது. உங்களைச் சுற்றிலும் பாருங்கள்! இன்று நாம் எதைக் காண்கிறோம்? மத சம்பந்தமான காரியங்கள் என்று வரும்போது ஜனங்கள் எதற்குப் பின்னாலும் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்கள். மேலும், புதிதாக ஓர் உபதேசம் பரப்பப்படும் போது அது தேவனுடைய வார்த்தையின் போதனைகளுக்கு எவ்வளவு அந்நியமாக இருந்தாலும், திரளான ஜனங்கள் அதற்குப் பின்னால் செல்வதை நம்மால் பார்க்க முடிகிறது. ஏன் அப்படிச் செல்கிறார்கள்? ஏனென்றால், அவர்களுக்கு சத்தியத்தில் விருப்பமில்லை, அவர்கள் சத்தியத்தை நேசிப்பதில்லை.

தேவனுடைய வார்த்தையோடு விளையாடுவது மிகவும் அபாயகரமானது. மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றுவதும் அபாயகரமானது. நம்மிடத்தில் சத்தியம் காணப்படும்படியாகவே தேவன் தம்முடைய வார்த்தைகளைக் கொடுத்தார். அதை நாம் விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படியும்போது நாம் இரட்சிக்கப்படுவோம். தேவனுடைய வார்த்தையின் இடத்தை இவ்வுலகில் வேறு எதுவும் பிடிக்க முடியாது. தேவனுடைய வார்த்தைக்கு ஈடு இணை எதுவுமில்லை. பவுல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன் என்று கடுமையாக எச்சரித்திருக்கிறார் (கலாத்தியர் 1:7-9).

## பாடம் - 16

# ஒருவர் சபை அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட முடியுமா?

## Can One Be Saved Without Being A Member of The Church?

ஒருவர் சபை அங்கத்தினராகாமல் இரட்சிக்கப்பட முடியுமானால், பழைய ஏற்பாட்டில் வரப்போகிற ராஜ்யத்தைக் குறித்து ஏன் இத்தனை தீர்க்கதரிசனங்கள் இருக்கின்றன? புதிய ஏற்பாட்டில் அது சபையாக ஏன் அடையாளப்படுத்தப்படுகிறது? அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்ஜியத்தை எழும்பப் பண்ணுவார் (தானியேல் 2:44) என்று வாசிக்கிறோம்.

இன்னும், யோவான் ஸ்நானகன் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறதென்று ஏன் பிசங்கித்தார்? இங்கே ராஜ்யம் என்பது சபையைக் குறிக்கிறது (மத்தேயு 3:8).

இயேசு கிறிஸ்து எதற்காக... கலிலேயாவிலே வந்து தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்று ஏன் பிரசங்கிக்க வேண்டும்? (மாற்கு 1:14,15).

இயேசு கிறிஸ்து பேதுருவின் அறிக்கைக்கு ஏன் இப்படி பதிலளிக்க வேண்டும். *சீமோன் பேதுரு பிரதியுத்தமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி; யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்* (மத். 16:16-19).

கிறிஸ்து ஏன்சபையை கட்ட வேண்டும்? அதற்காக மரிக்க வேண்டும்? அதற்காக வருவேன் என்று ஏன் வாக்குத் தத்தம் பண்ண வேண்டும்? *கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையா யிருக்கிறான், அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். கரைதிறை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் [எபே.5:23,28]. ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத் தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழு வதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் [அப்.20:27]. நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற* இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன் (யோவான் 14:3).

கிறிஸ்து ஏன் அந்த சபைக்காக ஏன் மரிக்க வேண்டும்? அதன் தலைவராக இருக்க வேண்டும்? *அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் [கொலோ. 1:18]. தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்* (அப்.2:47).

வேதாகமம் ஏன் சபையை அதிகமாகப் பேச வேண்டும்? மத்தேயு. 16:18; 18:17 அப்போஸ்தலர் 2:27; 5:11;8:13; ரோமர் 16:15; Iகொரி. 1:2; 4:17; 10:32; IIகொரி. 1:1; கலாத்தியர் 1:13; எபேசியர் 1:22; பிலிப்பியர் 3:6; 4:15: Iதெச. 1:1; IIதெச 1:1; தீமோ. 3:5,15 5:16; பிலேமோன் 1:2; எபிரெயர் 12:23; யாக்கோபு 5:14;3 யோவான் 1:6,9,10; வெளி.2;1,8,12,18; 3:1,7,14, இந்தவசனப் பகுதிகள் சபையை *ராஜ்யம், சரீரம், மணவாட்டி,* குடும்பம் என்று அடையாளப்படுத்துகின்றன.

கர்த்தர் தம்முடைய பெயரை சபை தரித்துக்கொள்ள ஏன் அனுமதித்தார்? *இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை*

*நோக்கி முழங்கால்படியிட்டு [எபே.3:14,15]. உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும் தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக் கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்* (அப்.4:10-12). உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல் நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள் (யாக்.2:7). ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:16).

நாம் எதற்காக எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரு சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாக தாகந்தீர்க்கப்பட்டோம்? (I கொரி. 12:13).

தேவன் ஏன் கிறிஸ்துவை சபையில் எல்லாவற்றிற்கும் மேலாக வைக்க வேண்டும்? (எபேசியர் 1:22).

கிறிஸ்து தலையாகவும், சபை அவருடைய சரீரமாகவும் எதற்காக ஒப்புமை செய்யப்பட்டிருக்கிறது? தலை அதன் சரீரத்திற்கு எந்த வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததில்லையென்று சொல்லும் அளவுக்கு நம்மில் யாரும் மூடர்களில்லை. தேவன் அவ்வார்த்தையை வேதாகமத்தில் இடம்பெறச் செய்த போது இவ்வார்த்தையை நாம் தவறாகப் புரிந்துகொள்ளகூடாது என்று தான் தீர்மானித்தார். *கிறிஸ்துவின் சரீரமாகிய சபைதான் இவ்வுலகிலேயே மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது.*

## பாடம் - 17

# வீட்டு சபை

## A Home Church

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய சபை மீட்பராகிய கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டு, அழைக்கப் பட்டவர்களின் கூட்டமாயிருக்கிறது. இப்படி அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் கூட்டமானது எண்ணிக்கையில் குறைந்த அளவு இருந்தாலும், அதிக அளவு இருந்தாலும் தேவனை ஆராதிப்பதற்காக எங்கெல்லாம் கூடுகிறார்களோ, அங்கே அது கர்த்தருடைய சபை என்றழைக்கப்படுகிறது.

புதிய ஏற்பாடு முழுவதுமாகப் பார்க்கும்போது சபையானது அதற்கென்று சொந்தமான கட்டிடத்தில் கூடினதாகக் குறிப்பிடாமல் இருப்பது சுவாரஸ்யமான ஒரு காரியமாக இருக்கிறது. வேதாகமத்தில், பல வித்தியாசமான இடங்களில் சபையானது கூடியிருந்தாலும், அது யாராவது ஒருவர் வீட்டில் தான் கூடியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆம், ரோமாபுரியிலுள்ள சகோதரர்களுக்குப் பவுல் எழுதும்போது, ரோமர் 16:3-5 வசனங்களில், *கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள்* என்று வாசிக்கிறோம். அதேபோல், பவுல் பிலேமோனுக்கும் இவ்விதம் எழுதுகிறார். பிலேமோன் 1-3, *கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், எங்களுக்குப் பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும், பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புக்கும், உம்முடைய வீட்டிலே கூடி வருகிற சபைக்கும் எழுதுகிறதாவது. நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

பவுலும் மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் சபையானது அதன் சொந்தக் கட்டிடத்தில் கூடினதாக எங்குமே குறிப்பிடவில்லை ஏன்? ஏனென்றால், முதல் நூற்றாண்டில், சபையானது வளர்ச்சியின் ஆரம்பத்திலிருந்தபடியால், சபைக்கென்று இன்று நாம் கட்டிடத்தில் கூடுவது போல், கட்டிடங்கள் இல்லாமலிருந்தது. ஆம், இது எவ்வித சந்தேகமுமின்றி இன்றளவும் உண்மையாயிருக்கிறது. எப்படியெனில், ஆரம்ப நாட்களில் சபையானது ஆரம்ப நிலையிலும் அதன் அங்கத்தினர்கள் குறைந்த எண்ணிக்கையிலும், ஆங்காங்கே சிதறப்பட்டவர்களும், பாடுகளைச் சுமந்தவர்களுமாய் இருந்தார்கள். ஆகையால், ஒட்டுமொத்தமாக இவைகளையெல்லாம் பார்க்கும்போது அந்நாட்களில், கிறிஸ்தவர்கள் ஒரு பிரத்யேகமான கட்டிடத்தில் கூடியிருப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று தான் புலப்படுகிறது. ஆனால், சபையானது வாரந்தோறும் தவறாமல் வாரத்தின் முதல் நாளிலே கூடியிருப்பதை நாம் அறிகிறோம் (அப்.20:7; I கொரி 16:2). மேலும், அன்றைய கிறிஸ்தவர்களுக்கு சிலர் சபை கூடி வருவதை விட்டுவிடுவது போல் விட்டுவிடக் கூடாது என்று கட்டளையிடப்பட்டது (எபி.10:25). பவுல், கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் சபை கூடி வருதலைப் பற்றி பேசுகிறார். அவர்கள் எங்கே கூடினார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், பவுல் அவர்களிடம் புசிப்பதற்கு உங்களுக்கு வீடுகள் இல்லையா என்று கேட்கப்படு வதிலிருந்து அவர்கள் ஏதோ ஓர் இடத்தில் அப்பம் பிட்கும்படி, அதாவது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி கூடி வந்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத்

ஒருமுறை ஓர் ஓய்வுநாளில் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்துக்கு வெளியே இருந்த ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கே, வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து அங்கே கூடி வந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தார். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்பவளும் கேட்டுக் கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அப்பொழுது பவுல், அவளுக்கும், அவள் வீட்டாருக்கும் தேவனுடைய வார்த்தையைப் போதித்தபோது, அவர்களெல்லாரும் ஞானஸ்நானத்தின் வாயிலாக கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள் (அப்.16:12-15). அதன் பின்பு, அவர்கள் வழக்கம்போல் ஜெபம்பண்ணுகிற இடத்திற்குப்

போகையில் குறி சொல்லுகிற ஆவியையுடைய பெண்ணின் நிமித்தம் தங்கள் ஆதாயத்தைப் பெற்றுவந்த அவளுடைய எஜமான்கள், நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுவின் நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று பவுல் சொன்னதும், அந்நேரமே அந்த ஆவி புறப்பட்டுப்போயிற்று. பவுலின் இந்த வல்லமையுள்ள வார்த்தையால் தங்கள் பிழைப்பு அற்றுப்போயிற்றென்று கண்ட அவளுடைய எஜமான்கள் அவர் களை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்ததால் அவர்கள் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டனர். பின்பு, அற்புதவிதமாக அவர்கள் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் சிறை யில் இருந்தபோது, சிறைச்சாலைக்காரனுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் கர்த்தருடைய வார்த்தைகளைப் போதித்தபடியால் அவனும் அவன் வீட்டிலிருந்த அனைவரும் உடனே ஞானஸ் நானம் பெற்றார்கள் (அப்.16:16-34).

அப்போஸ்தலர் 17-ம் அதிகாரத்தில், பவுல் அத்தேனே பட்டணத்திலுள்ள மார்ஸ் மேடையில் பிரசங்கிக்கிறார். 18-ம் அதி காரத்தில் ஜெப ஆலயங்களில் ஆராதனைக்காகக் கூடியிருந்த யூதர்களை மனமாற்றினார்கள். மேலும், பவுல் எருசலேம் சபையின் மூப்பர்களைச் சந்தித்திருக்கிறார். ஆனால், அவர்களை எந்த இடத்தில் சந்தித்தார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால், அப். 21:18 -ன் படி அவர்கள் யாக்கோபின் வீட்டில் கூடி யிருக்க வேண்டும். பவுல் ரோமபுரிக்குச் செல்லும் வழியில் புத்தே யோலி பட்டணத்திற்குப் போய் அங்கே சகோதரரைக் கண்டு அங்கே அவர்களோடு ஏழு நாட்கள் தங்கியிருந்தார். அப்படித் தங்கி யிருந்த அந்நாட்களில் அவர் ஆராதிக்காமல் இருந்திருக்கமாட்டார். கண்டிப்பாக ஆராதித்திருப்பார். அப்படியானால் எங்கே கூடி ஆராதித்தார்? நிச்சயமாக, ஏதாவதொரு சபை அங்கத்தினருடைய வீட்டில் தான் சபையாகக் கூடியிருக்கவேண்டும். ஆக, எங்கெல்லாம் ஜனங்கள் தேவனை ஆராதிக்கும்படி கூடினார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப் பட்டிருக்கிறது. இதினிமித்தம், ஜனங்கள் ஆராதிக்கும்படி ஏதாவதொரு அங்கத்தினருடைய இல்லத்தில் தான் கூடி வந்தார்கள் என்ற தீர்க்கமான முடிவுக்கு நம்மால் வர முடியும்.

நிச்சயமாகவே ஓரிடத்தில் கூடிவரும் சபை, ஓர் இடத்தை வாங்கி அங்கே சபைக்காக கட்டிடத்தைக் கட்டுவதில் எந்தத் தவறு மில்லை. அதேநேரத்தில், சபைக் கட்டிடம் கட்டி அதில்தான்

ஆராதிக்க வேண்டுமென்றும் அவசியமில்லை. இந்த விஷயத்தில் சபைக்கான கட்டிடம் கட்டுவது என்பது சபை மற்றும் அங்கத்தினர் களின் தனிப்பட்ட விருப்பமாயிருக்கிறது. சபை கூடுமிடம் என்று வரும்போது அது ஒரு பெரிய அறையிலோ, ஒரு பள்ளிக் கூடத்திலோ, ஒரு கூடாரத்திலோ, அல்லது சபை அங்கத்தின ரொருவருடைய வீட்டிலோ கூடலாம். மாறாக, சபை கூடிவராம லிருக்கக்கூடாது என்று வேதம் புத்தி புகட்டுகிறது.

## பாடம் - 18

# பட்சபாதமுள்ளவரல்ல

## No Respecter of persons

**நா**ம் தொல்லைகள் நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதினிமித்தம் அன்றாடம் எல்லையில்லா பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். இவைகளில் பெரும் பாலானவைகள் மனிதன் சக மனிதர்களோடு ஒற்றுமையாக, சமா தானமாக வாழ இயலாமையால் வந்தவைகள். மனிதன் தேசம், இனம், நிறம், மதம் போன்றவைகளால் பிரிந்து கிடக்கிறான். அவன் இதுபோன்ற தடைகளைத் தகர்த்து எறிவதற்குப் பதிலாக அவைகளின் பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிக்கிறான். இவைகள் அதிகப்படியான போட்டி, அவநம்பிக்கை மற்றும் வெறுப்புக்குத் தான் வழிவகுக்கிறது.

ஆனால், உண்மை என்னவென்றால், மனிதன் இப்படிப் பிரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அப்போஸ் தலனாகிய பவுல், *மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்* என்று அப். 17:26 -ல் சொல்லியிருக்கிறார். இது உங்களுக்கும் எனக்கும் என்ன பொருள்படுகிறது? இதன் பொருள் நாம் யாரைவிடவும் சிறந்தவர்களல்ல, அதேபோல், யாரும் நம்மைவிட சிறந்தவர் களல்ல என்பதையே காட்டுகிறது. இனம், நிறம், மதம், மொழி என பல பேதங்கள் இருந்தாலும், அடிப்படையில் எல்லா மனிதர்களும் சரீரப்பிரகாரமாக ஒரேவிதமாகத்தான் இருக்கிறார்கள். ஆகவே, நாமெல்லாரும் சமமாகத்தான் இருக்கிறோம். மொழி, நிறம், சமுதாய அந்தஸ்து மற்றும் பல்வேறு வகையான காரியங்கள் இயற்கையாகவே ஒரு மனிதனை இன்னொரு மனிதனை விட சிறந்தவனாக மாற்றுவதில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய அப்போஸ்தலன் பேதுருவும், *தேவன் பட்ச பாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்* என்று

அப்.10:34, 35-ம் வசனங்களில் சொல்லியிருக்கிறார். இவைகள் மனிதனுக்கான தேவனுடைய உணர்வுகளை அடையாளப் படுத்துகின்றன. நாம் தொடர்ச்சியாக இப்பாடத்தைப் படிக்கும் போது, மனிதனைப் பிரித்தது தேவனல்ல, மாறாக, மனிதன் தானே தன் பாவச்செயல்கள் மூலமாகத் தன்னை தேவனிடத்திலிருந்து பிரித்துக் கொண்டான் என்று தெரிகிறது. ஆனாலும், தேவன் தமது உருக்கமான இரக்கங்களால் அவனை தன்னிடமாகச் சேர்த்துக் கொள்ள வாஞ்சையாக இருக்கிறார். *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்* (யோவான் 3:16).

அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்தின் வல்லமை பற்றியும், அதினிமித்தமான தன்னுடைய பொறுப்பு பற்றியும் இவ் விதம் சொல்கிறார். *சகோதரரே, புறஜாதிகளான மற்றவர் களுக்குள்ளே நான் பலனை அடைந்தது போல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன். ஆயினும், இதுவரைக்கும் எனக்குத் தடை யுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமாபுரி யிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்பட்டேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது* (ரோமர் 1:13-17).

அதன்பின்பு, பவுலடியார் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர் களிடம் பேசும்போது இவ்விதம் சொன்னார். *நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்று மில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை;*

*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்* (கலா. 26-28) என்றார். ஆகவேதான், கிறிஸ்தவர்கள் இன வேறுபாட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. தேசம் மற்றும் நிறத்தின் அடிப்படையில் அவர்கள் தங்களைப் பிரித்துக் கொள்வதில்லை. மற்றவர்களைவிடத் தங்களை அவர்கள் உயர்வானவர்களாக எண்ணுவதில்லை. ஏனென்றால், இவர்கள் எல்லா இடங்களிலுமுள்ள மனிதர்களை நேசிக்க வேண்டுமென்ற கட்டளையை இரட்சகராகிய இயேசுவினிடத்தில் பெற்றிருக் கிறார்கள். இதினிமித்தம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருந்து, எல்லாருடைய நன்மைக்காகவும் இணைந்து செயலாற்றும் செயல்வீரர்களாக இன்றளவும் இருக்கிறார்கள்.

மேலும், தூய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம் ஜாதி முறை களையும் இனவெறிகளையும் முற்றிலும் அகற்றி, மனிதனுடைய சுயமரியாதையை மீட்டுத்தருகிறது. இன்னுமாக, இது எல்லா மனிதர்களும் வாழ்வதற்குத் தேவையானவைகளையும், வேலை செய்வதற்கான பெலனையும், சாட்சியாய் வாழ்வதற்கான நெறி முறைகளையும் கொடுத்து எல்லா தேசங்களிலும் மனித இனம் சிறந்தது என்பதை உயர்த்திக் காட்டுகிறது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து நீங்கள் உங்களுக் குள்ளே சிந்தித்துப் பாருங்கள். *தேவன் பட்சபாதமுள்ளவரல்ல, தேவன் அப்படிப்பட்டவராயிருக்கும்போது, மனிதன் மட்டும் ஏன் அப்படி இருக்க வேண்டும்?* நாம் மற்றவர்களோடு இணைந்து வாழவும், மற்றவர்களை மதித்து வாழவும் போதிக்கப்பட்டிருக்கி றோம். ஆகையால், நாம் ஏகசிந்தையுள்ளவர்களாய் கூடி தேவனை ஆராதிக்கும்போது, நாம், இயேசுவானவர் ஜெபித்த ஜெபத்திற்கு சாட்சியாக நிற்க முடியும். *அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர் களெல்லாம் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்* (யோவான் 17:21,22) என்றார். இயேசு கிறிஸ்துவின் இக்கூற்றுப்படி வாழும்போது, உலகம், நம்மைப்பார்த்து கிறிஸ்தவம் சிறந்தவைகளுக்கான முன் உதாரணமாக மாறி விட்டது என்று உரக்கச் சொல்லும்.

பாடம் - 19

# தேவனுடைய வார்த்தையின் வல்லமை

## The Power of The Word of God

தேவன் எல்லாக் காலங்களிலும் பேசியிருக்கிறார் (எபி.1:1,2), தேவன் தம்முடைய குமாரன் மூலமாகப் பேசியிருக்கிறார் (யோவான் 1:1,2; மத்தேயு 17:5), அவருடைய வார்த்தைகள் பாதுகாக்கப்பட்டு பரிசுத்த எழுத்துக்களை உள்ளடக்கிய வேதாகமத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது (II தீமோ.3:16,17), அந்த வார்த்தை வல்லமை யுள்ளது (எபி.4:12). நாம் அந்த வார்த்தைகளை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தால், அது நம் வாழ்க்கையில் கிரியை செய்து ஆத்துமாவை இரட்சிக்கும் (ரோமர் 1:16,17).

சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் தேவன் சொன்னவைகளை யெல்லாம் நினைவில் வைத்திருக்கிறீர்களா? தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று (ஆதி.1:3). தொடர்ந்து வரும் வசனங்களில் தேவன் தம்முடைய வாயின் வார்த்தைகளினாலே *உண்டாகக்கடவது* என்றார். அவைகள் அப்படியே உண்டாயிற்று. ஆகையால், தேவனுடைய வார்த்தை வல்லமையால் நிறைந்திருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுக்காகப் பேசும்படி வந்தார். அதனால் தான் *வார்த்தை* என்றழைக்கப்படுகிறார் (யோவான் 1:1). ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவும் தமது ஊழிய நாட்களில் இவ்விதம் விளம்பியுள்ளார். யோவான் 7:16-18 ம் வசனங்களில், *இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக என் உபதேசம் என்னுடைய தாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான். சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான். தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.*

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அதிகார முடையவராகப் பேசினார் (மத்.7:29). அவரை விமர்சித்தவர்கள் அவருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியவில்லை. இதினிமித்தம் வசனமே எப்போதும் வென்றிருக்கிறது. அதனால் தான், கிறிஸ்துவானவர் நானே வழியும், சத்தியமும், ஜீவனுமா

யிருக்கிறேன் என்றார் (யோவான் 14:6). அவர் பேசின போது குருடர்கள் பார்வையடைந்தார்கள், ஊமைகள் பேசினார்கள், செவிடர்கள் கேட்டார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், வியாதியஸ்தர் சுகமடைந்தார்கள், மரித்துப்போனவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். அவர் கடலைப் பார்த்துப் பேசினபோது, கொந்தளித்த கடல் அமர்ந்தது, பிசாசுகள் ஓடின, தண்ணீர் திராட்சரசமாக மாறியது, திரளான ஜனங்கள் சாப்பிட்டுத் திருப்தி யானார்கள். இப்படி கர்த்தருடைய வார்த்தை வல்லமையான விளைவுகளை ஏற்படுத்த ஒருபோதும் தவறியதில்லை.

இயேசு கிறிஸ்து சொன்னவைகள், செய்தவைகள் எல்லாம் வேதாகமத்தில் எழுதித் தரப்பட்டுள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாம் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:30,31). நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் படிப்பதினாலும், விசுவாசிப்பதினாலும் (மத்.17:5; II தீமோ. 2:15) விசுவாசம் உண்டாகிறது (ரோமர் 10:17). நாம் அவ்வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக இரட்சிக்கப்படுகிறோம் (மாற்கு 16:15,16). *ஆகையால், நீங்கள் மாயமற்ற சகோதர சிநேக முள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கும் படியாய், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. இப்படியாக, விசுவாசம் விருத்தியடைந்து செயலை விளைவிக்கிறது.* நிறைவாக அது ஆத்தும இரட்சிப்பைக் கொடுக்கிறது. ரோமர் 1:16-ல் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்று காண்கிறோம். ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்று தீர்க்கமாகச் சொல்லிவிட்டார் (மத்.7:21).

ஆகையால், தேவ வார்த்தை உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்து உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும். மேலும், தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையை வழிநடத்த நீங்கள் அனுமதிக்கும் போது, அது உங்களுக்குப் பரலோகத்தில் நித்திய வாழ்வைக் கொடுக்கும். இன்னுமாக, தேவனுடைய வார்த்தை

உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்யும்போது, அது உங்களை கர்த்தருக்குள் உண்மையாயிருக்கச் செய்வதோடு தேவ சாயலிலும், அவருடைய குமாரனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலிலும் வளர உதவி செய்யும். ஆம், நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுத்துவோம் (II கொரி. 3:18). இங்கே, நாம் பார்க்கும் கண்ணாடியானது தேவனுடைய வார்த்தைதான். தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார். ஆகையால், நாம் எதைக் காண்கிறோமோ அதை அப்படியே பிரதிபலித்து (பின்பற்றி) தேவசாயலில் வளர்ந்து விருத்தியடைவோம்.

மேலும், *சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்* (யாக்.1:25). சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை நாம் சற்று நெருக்கமாகப் பார்க்கும்போது, அது உங்களுக்குப் பெலனையும், வைராக்கியத்தையும், தீர்மானத்தையும் தந்து, உங்கள் வாழ்க்கையில் தேவைப்படும் எல்லா ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும். இறுதியில், அதுதான் உங்களை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). *என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்* என்றார்.

ஆகையால், இத்தகைய வல்லமையைப் பெற்றுக் கொள்ளப் பெரும்பாலானோர் சத்தியமில்லாத இடத்திற்குச் செல்வது மிகவும் வேதனைக்குரியது. இதை மனிதனிடத்திலோ, அவனுடைய போதனையினிடத்திலோ காணமுடியாது. மாறாக, இந்த வல்லமை தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் இருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. ஆம், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாகத் தேவன் நமக்குள் கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தையின் வல்லமை யானது நம்மை இரட்சித்து, நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையைத் தருகிறது. இவ் வல்லமையை விட பெரிதான வல்லமை உலகில் வேறு எதுவாக இருக்க முடியும்? +

பாடம் - 20

# பரிணாமக் கொள்கை
## The Theory of Evolution

இவ்வுலகம் எப்படி உண்டாக்கப்பட்டது? மனிதன் எங்கேயிருந்து வந்தான்? ஜீவனின் ஆதாரம் என்ன? இக்கேள்விகளுக்குச் சிலர் தங்களுக்கு விடை தெரியும் என்று சொல்கிறார்கள். அதற்கு விடையாகப் பரிணாமக் கொள்கையைச் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இன்றைய நவீன உலகில் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் பரிணாமக் கொள்கையை உண்மையென போதிக்கின்றன. மேலும், அருங்காட்சியகங்கள், உயிர் எப்படித் தோன்றியது, எப்படி எல்லா உயிரினங்களும் வளர்ச்சியடைந்தன போன்றவற்றை விளக்குவதற்குப் பரிணாமக் கொள்கையை எடுத்துக் கையாள்கின்றன. மேலும், அறிவியல் புத்தகங்கள் இத்தகைய யூகங்களால் நிறைந்திருக்கிறது.

முதலில் இந்தப் பரிணாமக் கொள்கை உண்மையானதா? மனிதன் தன்னைவிட கீழான ஜீவராசிகளான அமீபா, குரங்கு போன்றவைகளிலிருந்து வந்திருக்க முடியுமா? அப்படியானால், இந்த உயிரினங்கள் ஏன் அடுத்தகட்ட வளர்ச்சியை அடையவில்லை? பரிணாமக்கொள்கை உண்மையென்றால், மனிதன் தற்போதைய நிலையிலிருந்து ஏன் அடுத்த நிலைக்கு மாறவில்லை? அப்படியானால், மனிதன் உயிரினத்தின் உயரிய நிலையை அடைந்துவிட்டானா? இதற்கு மேல், எந்த ஓர் நிலையும் இல்லையா? இவைகளெல்லாம், ஆழ்ந்து சிந்திக்கும்படியான மிகச் சிறந்த கேள்விகளாயிருக்கின்றன.

இங்கே காரியம் என்னவென்றால், கொள்கை என்பது சில மனிதர்களுடைய அபிப்பிராயங்கள் தான். அது உண்மை அல்ல. ஒரு கொள்கையை உண்மையென்று போதிப்பது ஏமாற்று வேலையாகும். பரிணாமக் கொள்கை உண்மையென்று போதிக்கப்படுகிறது. ஆனால், அது ஒருபோதும் நிரூபிக்கப் படவில்லை. இக்கொள்கையைப் பரப்புபவர்கள், இதில் நேர்மை யோடு செயல்படுகிறார்கள். ஆயினும் இதை வேறு சில மனிதர்கள் இக்கொள்கை பொய் என்று நிராகரித்திருக்கிறார்கள்.

பரிணாமக் கொள்கை நிரூபிக்கப்பட்ட உண்மையாக இருந்தால் அது கொள்கையாயிராமல் உண்மையாயிந்திருக்கும். உண்மை கற்றுத்தரப்பட வேண்டும். ஆயினும் இக்கொள்கை நிச்சயமாக ஒருபோதும் நிரூபிக்கப்படாது. ஆகையால், உண்மை யில்லாத ஒன்றை நாம் நம்பும்படி கற்றுக்கொடுக்கப்பட்டு விடாத படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். மேலும், இப்பாடத்தைக் குறித்து, நம் பிள்ளைகளுக்கு என்ன போதிக்கப்படுகிறது என்பதைக் குறித்து விழிப்புணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். பெரும்பாலான நேரங்களில், பெற்றோர்கள் தாங்கள் விசுவாசிக்கிற காரியங்களில் உறுதியாயிருப்பார்கள். ஆனால், அவர்களுடைய பிள்ளைகள் எந்தக் கொள்கைக்காகப் பெற்றோர்கள் நின்றார்களோ அதற்கு எதிரான காரியங்களில் நடக்கப் போதிக்கப்பட்டிருப்பார்கள். இப்படி நம்முடைய பிள்ளைகளுக்கு நடக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

பரிணாமக் கொள்கை என்பது தேவன் இருக்கிறார் என்னும் உண்மையை அழிப்பதற்கும், எல்லாம் தேவனால் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்னும் உண்மையை உருக்குலைப்பதற்குமான ஓர் முயற்சியாகத் தான் இருக்கிறது. ஆனால், இவ்வுலகத்தைப் பற்றி நினைக்கும் போது, நாம் எடுக்க வேண்டிய தீர்க்கமான தீர்மானம் இவ்வுலகம் தெய்வீகமாகவும், அற்புதவிதமாகவும் உண்மையில் தேவனால் உண்டாக்கப்பட்டது என்பது தான்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதி.1:1) வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது (சங்.19:1). இது தேவனைப் பற்றியும், அவருடைய சிருஷ்டிப்பைப் பற்றியும் சொல்லும் வைர வரிகளாயிருக்கின்றன. இவைகள், ஜீவனைப் பற்றியும், இவ்வுலகமும், அதிலுள்ளவைகளும் உண்டானது பற்றியும் நமக்கு விளக்கிக் காண்பிக்கின்றன. இவைகளை ஏற்றுக்கொள்வதற்கு விஞ்ஞானப்பூர்வமற்ற பரிணாமக் கொள்கையை ஏற்றுக் கொள்வதற்குத் தேவைப்படும் அறிவை விடக் குறைந்த அளவு விசுவாசமே போதுமானதாகும்.

மேலும், ஒருவர் தனக்குத் தேவனிடத்திலுள்ள விசுவாசத்தை ஒத்துக் கொள்ளும்போது, அந்நபர் தன்னுடைய

அறியாமையை வெளிப்படுத்தவில்லை. மாறாக, இப்படிச் செய்வதன் மூலமாக அவர் தன்னுடைய ஞானத்தைத்தான் வெளிப்படுத்துகிறார். இவைகளையெல்லாம் வைத்துக் பார்க்கும் போது, சிருஷ்டிப்புக்கு சிருஷ்டிகர் ஒருவர் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருவதே சரியானதாகும். ஆகையால், நம்முடைய விசுவாசம் சிருஷ்டிப்பின் ஆதாரங்களையும், சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. அதேநேரத்தில் பரிணாமக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள், அது வெறும் கொள்கைதான், *உண்மையல்ல* என்பதை ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே, நாம் வெற்றுக்கொள்கையை விடுத்து, வெற்றி கொடுக்கும் தேவனின் வார்த்தைகளை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டால், வாக்குத்தத்த கிரீடத்தை மகிமையில் பெற்றுக்கொள்ள முடியும்.

## பாடம் - 21

# பிரசங்கத்தின் வல்லமை எங்கே இருக்கிறது?

# Where Is The Power In Preaching?

நீங்கள் உலகமெங்கும் போய் எல்லா மக்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:15). அப்போஸ்தலனாகிய பவுலும் திருவசனத்தைப் *பிரசங்கம் பண்ணு* என்று தீமோத்தேயுவுக்கு எழுதினார் (IIதீமோ.4:2). நாம் இவ்விதமாகக் கட்டளைகளை பெற்றிருக்கிறபடியால் அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டும். இது, முதல் நூற்றாண்டில் எப்படி உண்மையாயிருந்ததோ அப்படியே இன்றும் உண்மையாயிருக்கிறது.

நம் தேவன் தம்முடைய செய்தியை மனிதனுக்கு அறிவிக்கத் தெரிந்துகொண்ட வழிகளுள் ஒன்றாக சுவிசேஷம் இருக்கிறது. பிரசங்கத்தை, பிரசங்க பீடத்திலிருந்தும் செய்யலாம் அல்லது வேறு ஏதாவது பொது இடங்களிலும் செய்யலாம். இவை எல்லாமே பிரசங்கம் தான். பிரசங்கத்தில் ஒரு பிரசங்கியார் தன் வாய் மூலமாக தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிறார்.

இன்று சிலர், பிரசங்கம் அதன் வல்லமையை இழந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இதற்கு உதாரணமாக, அவர்கள் சுவிசேஷக் கூட்டங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முன்பெல்லாம் சுவிசேஷக் கூட்டங்களில் திரளானோர் கூடினார்கள். இப்போதெல்லாம் கூட்டம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். சுவிசேஷக் கூட்டங்கள் மாத்திரமல்ல, வேறு எந்த ஆவிக்குரிய கூட்டமாக இருந்தாலும், கூட அங்கேயும் முன்பு போல கூட்டம் கூடுவதில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால், சுவிசேஷக் கூட்டங்களே தேவைப்படாத காலங்கள் வந்துவிடுமா என்று ஐயப்படத் தேவையில்லை. ஏனென்றால், அப்படி ஒரு காலம் ஒருக்காலும் வராது. கிறிஸ்தவம் தழைக்க சுவிசேஷக் கூட்டம் அவசியம்.

முன்பெல்லாம், பிரசங்கம் ஜனங்களின் கவனத்தை ஈர்த்த அளவுக்கு, இப்போது ஈர்க்காததற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது காரணம், ஜனங்கள் ஆராதனையிலும்,

ஆவிக்குரிய காரியங்களிலும் நேரத்தை ஒதுக்குவதில் சோர்ந்து போய்விட்டார்கள். அடுத்த காரணம் அல்லது அடிப்படைக் காரணம், செய்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட அதிக முக்கியத்துவம் செய்தியைக் கொடுப்பவருக்குக் கொடுக்கிறார் கள். பிரசங்கத்திற்குப் பின்னே, பிரசங்கியார் ஒருவர் இருக்கிறார், இவர்தான் பிரசங்கத்திற்காகப் பயிற்றுவிக்கப்பட்டு, செதுக்கப்பட்டு பிரசங்கபீடத்தில் ஏற்றிவிடப்படுகிறார். அவர் நன்றாக ஆடை உடுத்தி, ஒவ்வொரு வார்த்தையையும் எப்படி உச்சரிக்க வேண்டுமென்று போதிக்கப்பட்டு, எப்படி பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கற்றுக்கொள்ளுகிறார்கள். மேலும், பிரசங்கியார் இனிய குணத்தைப் பெற்றிருப்பது அவசிய மாயிருக்கிறது. அவர் எப்போதும் எல்லோரிடமும் நட்புடன் பழகு கிறவராக இருக்க வேண்டும். அவர் ஒருபோதும் எதிர்மறையான வராக இருக்கக் கூடாது. மாறாக, தன் பிரசங்கத்தால் ஜனங்களைக் கட்டுவிக்கிறவராக இருக்க வேண்டும். இருப்பினும், பிரசங்கம் பிழைப்புக்கானது என்கிற ஒரு எண்ணம் உருவாகும்போது, பிரசங்கத்தின் மீதான ஆர்வம் ஜனங்களுக்குக் குறைந்துவிடுகிறது.

பிரசங்கத்தில் பிரசங்கியாருக்கும் முக்கியப் பங்கு உண்டு. ஆம், அவரால் தேவச் செய்தியைச் சிறப்பான முறையில் கேட்பவர்களுக்குக் கொண்டுசெல்ல உதவமுடியும். அதே வேளையில், *பிரசங்கத்தின் உண்மையான வல்லமை தேவச் செய்தியில் தான் இருக்கிறது*. பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிருந்தது என்று பவுல் குறிப்பிட்டுள்ளார் (I கொரி.1:21). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் சத்தியம் தான் நம்மை விடுதலையாக்கும் என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 8:32). நாம் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதால் நம்முடைய ஆத்துமா சுத்திகரிக்கப்படுகிறதென்று பேதுருவும் வழிமொழிந்திருக்கிறார் (I பேதுரு1:22).

இன்று அழகான வார்த்தை ஜாலங்களை உள்ளடக்கிய பிரசங்கங்கள், பிரசங்கியாரின் கல்வியை வெளிப்படுத்துகிற பிரசங்கங்கள் ஜனங்கள் மத்தியில் ஒரு தவறான தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. ஆம், தங்களைப் பற்றி அதிகமாகப் பேசி, தேவச் செய்தியைக் குறைவாகப் பேசுகிறவர்கள் தங்கள் நேரத்தை விரயமாக்குகிறார்கள். அப்படியிராமல், வல்லமையானதும், ஆத்துமாவிலே தாக்கத்தை ஏற்படுத்துகிறதும், வேதாகமத்தை

அடிப்படையாகக்கொண்ட எளிமையான பிரசங்கம் தான் ஜனங்களின் தேவையாயிருக்கிறது. வேதாகமத்தின், இடத்தை வேறு எதுவும் நிரப்பவே முடியாது. ஏனென்றால், ஜனங்களின் ஆத்துமா அப்படிப்பட்ட ஆகாரத்திற்காகத்தான் ஏங்குகிறது. உண்மையாகவே, வேறெதுவும் நம் ஆத்துமாவைத் திருப்திப்படுத்தவே முடியாது என்பது தான் நிதர்சனமான உண்மையாயிருக்கிறது.

ஆகையால், நாம் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், மனிதனுக்குத் தேவையான தேவச்செய்தியை முன்னிலைப்படுத்தினால், அதுவே ஊழியத்திற்கு ஏற்ற தாயிருக்கும். இதன் பொருள் ஒரு பிரசங்கியார் பிரசங்கத்திற்காக ஆயத்தப்படக்கூடாதென்றில்லை. மாறாக, நாம் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு விட்டு, தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது தான். ஆகையால், பிரசங்கியாரின் பிரசங்கம், ஜனங்களின் செவிகளுக்கு இனிமையானதாக, அவர்களின் பொழுதுபோக்குத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஒன்றாக இராமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். பிரசங்கமானது தேவனுடைய வார்த்தைகளின்படி பிரசங்கிக்கும்போது அதில் எல்லையில்லா வல்லமையிருக்கிறபடியால் அது ஜனங்களுக்கு மிகப்பெரிய இரட்சிப்பைக் கொடுக்கிறது.

## பாடம் - 22

# நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருக்கிறீர்களா?

# Are you a Member of The Church of Christ?

**நா**ன் இதுபற்றி உங்களிடம் பேசலாமா? இன்னும் நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்காமல் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒருவேளை நீங்கள் வேறு ஏதாவது சபையின் அங்கத்தினராக இருக்கலாம். அப்படியானால், அது யாருடைய சபை? நிச்சயமாக, அந்த சபையை கிறிஸ்துவின் சபையோடு ஒருக்காலும் ஒப்பிடவே முடியாது.

நீங்கள் போய்க்கொண்டிருக்கும் சபையை கிறிஸ்து ஸ்தாபித்தாரா? எங்கே? எப்போது? அந்த சபை அவர் மீது கட்டப் பட்டதா? அந்த சபைக்காக கிறிஸ்து மரித்தாரா? அதன் இரட்சகராக கிறிஸ்து இருக்கிறாரா? அதன் தலையாக கிறிஸ்து இருக்கிறாரா? அந்த சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்கிறதா? அந்த சபையை வேதாகமத்தில் வாசிக்க முடியுமா?

நான் இக்கேள்விகளை உங்கள் மீது அழுத்தம் கொடுப் பதற்காகவோ அல்லது உங்களைச் சங்கடப்படுத்துவதற்காகவோ கேட்கவில்லை. மாறாக, நீங்கள் இக்காரியங்களைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்து கிறிஸ்துவானவரால் கட்டப்படாத சபையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதையும், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திராத சபையில் அங்கம் வகிக்கிறீர்கள் என்பதையும் உணர்ந்துகொள்ளும்படியாக நான் இவைகளைக் கேட்கிறேன்.

இன்றைய நாட்களில், சபை முக்கியமானதல்ல வென்றும், நீங்கள் எந்தச் சபையைச் சார்ந்தவராக இருந்தாலும் அது ஒரு பிரச்சனையில்லையென்றும் பலர் சொல்லக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அப்படியானால், இவைகளைப் பற்றி உங்களுக்குச் சரியான தகவல்கள் தரப்படவில்லை. நிச்சயமாக, நம் ஆண்டவர் முக்கியமற்ற ஒன்றை ஸ்தாபித்திருக்கமாட்டார். மதிப்பற்ற ஒன்றிற்காக மரித்திருக்கமாட்டார். ஒரு நபர் வேறெதாவது முறையில் இரட்சிக்கப்படக்கூடும் என்றால், அந்த நபரை இரட்சிப்பதற்காகத் தம்முடைய இரத்தத்தைச் சிந்தியிருக்கமாட்டார்.

ஆகையால், வேதாகமம் ஒரே சபைதான் உண்டென்றும், அந்த சபையானது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறதென்றும் போதிக்கிறது (எபே.4:4;கொலோ.1:18). கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு (மாற்கு 16:16) அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறார்கள் (அப்.2:47). இதினிமித்தம் இயேசுகிறிஸ்து சபைக்கு இரட்சகராயிருக்கிறார் (எபே.5:23) மேலும், சபையானது இரட்சகராகிய கிறிஸ்துவுக்குச் சொந்தமானபடியால் தான் சபை கிறிஸ்துவின் சபை என்றழைக்கப்படுகிறது (அப்.20:28).

மேற்சொன்ன தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ள நீங்கள் உங்கள் வேதாகமத்தை வைத்து சரிபார்த்துக் கொள்ளும் படியாக உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் அப்படிச் செய்தால், சபையைப் பற்றிய உண்மையை நீங்கள் கண்டுபிடித்து கிறிஸ்துவின் சபையிலே அங்கமாக விரும்புவீர்கள். நீங்கள் என்ன செய்தாலும் சரி, மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் அங்கம் வகிக்க வேண்டாம். ஏனென்றால், அவைகள் பிரிவினை களைத்தான் அடையாளப்படுத்துகின்றன. வேதாகமத்தின் உண்மையான சபையைக் கண்டறியும்வரை, நீங்கள் போய்க் கொண்டிருக்கும் சபைகளில் திருப்தியடைய வேண்டாம். அப்போதுதான், நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராக முடியும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

ஒருவேளை, இதுகாறும் நீங்கள் எந்த சபையிலும் அங்கம் வகிக்கவில்லை என்றால், ஏதாவது மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திற்குள் சிக்கித் தவிப்பதற்கு முன்பாக நான் உங்களுக்கு மேலான வாழ்வுதரும் கிறிஸ்துவின் சபையை அறிமுகப் படுத்துகிறேன். நீங்கள் எந்த ஒரு சபையிலும் உங்களை இணைத்துக் கொள்ளாதவராக இருந்தாலும், பலவிதாமன உபதேசங்கள் உங்கள் மனதிற்குள் புகுந்து நீங்கள் குழப்பத்தில் இருக்கலாம். இப்படிப்பட்ட தருணத்தில் நீங்கள் பட்சபாதம் இல்லாதவர்களும், திறந்த மனதுடையவர்களுமாயிருந்தால், அதுதான் உண்மையான சபையைப் பற்றி அறிந்துகொள்ள ஏதுவாகும். மேலும்,நீங்கள் பல்வேறுபட்ட சபைகளைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிற காரியங்களை வைத்து, வேதாகமம் போதிக்கும் சத்தியத்தை ஆழ்ந்து சிந்தித்து, அந்த உபதேசம் சபையைப் பற்றி என்ன போதிக்கிறது என்பதை நீங்கள்தான் கண்டுபிடிக்க வேண்டும். உங்கள் மனம் விரும்பினால் நீங்கள்

இதை முயற்சித்துப் பார்க்கலாம். எப்படியெனில், தேவன் உங்களுக்கு வாசிக்கவும், படிக்கவும், சிந்திக்கும் திறனையுமுடைய நல்ல மனதைத் தந்திருக்கிறார். அதாவது, தேவன் தமது வல்லமையுள்ள வார்த்தைகளின் வாயிலாக எனக்கும், இவ்வுலகிலுள்ள எந்த மனிதனுக்கும், தேவன் தமது காரியமாக என்ன செய்யும்படி சொல்லியிருக்கிறாரோ, அதைத்தான் இப்பாடத்தைப் படிக்கும் உங்களுக்கும் சொல்லியிருக்கிறார்.

நீங்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அவைகள் ஒரே சபையைப் பற்றி மட்டுமே பேசுவதைக் காணமுடியும். அதை இன்னும் சற்று விவரமாக ஆராய்ந்து பார்த்தால், அது கிறிஸ்துவின் சபைதான் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள். அதன்பின்பு, அதன் அங்கத்தினராக மாற என்ன செய்ய வேண்டுமென்பதையும் கற்றுக்கொள்வீர்கள். நீங்கள் அந்த உபதேசத்தை அறிந்துகொண்டு அதன் அங்கத்தினராக மாற வேண்டுமென்பது என் ஜெபமாயிருக்கிறது. நீங்கள் அவருடைய சத்தியத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியாமல், அவருடைய சபையில் ஒருபோதும் அங்கம் வகிக்கமுடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்போது, அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்கிறார்.

ஒருவேளை நீங்கள் இரட்சிக்கப்படவில்லையென்றால் சபையில் அங்கத்தினராக முடியாது. ஏனென்றால், நீங்கள் உபதேசத்தின்படி இட்சிக்கப்பட்டிருந்தால் தேவனே உங்களைத் தமது சபையிலே சேர்த்திருப்பார். இது உங்களுக்குத் தெளிவாகப் புரியும் என நம்புகிறேன். இந்தக் காரியங்களை எல்லாம் நீங்களே சரிபார்த்துக் கொள்ளும்படி உங்களுக்கு சத்தியத்தின்படி அழைப்பு விடுக்கிறேன். ஆம், நிச்சயமாக இதில் நீங்கள் ஒன்றைக்கூட இழக்கப் போவதில்லை. மேலும், தேவனுடைய வார்த்தையின் காரியங்களைச் செயலாற்றுவதின் மூலம் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக இருந்தால், நான் ஒரு உண்மையான கிறிஸ்தவனாக கிறிஸ்துவின் ஒரே மெய்யான சரீரத்தில் அங்கமாக இருக்கிறேன் என்று சந்தோஷமாகச் சொல்லும் சிலாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும். இப்போது நீங்கள் உங்கள் ஆத்துமாவை மோசம்போக்கும் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தில் இல்லை என்பதும், மனிதர்களுடைய

வீணான கட்டளைகள் மற்றும் உபதேசங்ளைப் பின்பற்றவில்லை என்பதும் இப்போது உங்களுக்கு வெளிச்சம். ஆகையால், உங்களிடத்தில் சத்தியம், இரட்சிப்பு மற்றும் நம்பிக்கை அதிகப்படியாக இருக்கிறது. இன்று சிலர் இப்படிப்பட்டதொரு மேன்மையான சிலாக்கியத்தை இழந்துவிட்டு அற்பமான காரியங்களில் திருப்திப்பட்டுக்கொள்வது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது!

இப்போது நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இருந்தால், ஓர் உண்மையுள்ள அங்கத்தினராக இருக்கிறீர்கள். அப்படித்தானே? அப்படி இல்லையென்றால், நீங்கள் எவ்விதத்திலும் கிறிஸ்தவரல்லாதவர்களை விடச் சிறந்தவர்களல்ல. சொல்லப்போனால், நீங்கள் மிக மோசமான நிலையில் இருக்கிறீர்கள். ஏனென்றால், உங்களுக்கு உண்மையான சத்தியம் தெரிந்திருந்தும் அதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் காரியத்திலிருந்து விலகிவிட்டீர்கள். இப்படிச் செய்ததினால் பல ஆத்துமாக்கள் இழந்துபோனதற்கு நீங்கள் காரணமாகிவிட்டீர்கள். இப்படியிராமல் நீங்கள், உங்கள் இருதயங்களை வேதவசனத்தால் நிரப்பி, அவைகளை நீங்களும் கைக்கொண்டு மற்றவர்களும் கைக்கொள்ளும்படி அதை உண்மையாய்க் கற்றுக்கொள்ளுங்ள். இப்படிச்செய்ய தேவன் நிச்சயம் உங்களுக்கு உதவி செய்வார். மேலும், ஒரு கிறிஸ்தவரான நாம் கர்த்தருக்கென்று சேவை செய்ய வேண்டும். அதாவது அவரது சுவிசேஷத்தை எடுத்துரைப்பதால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்க முடியும். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்த முடியும். +

## பாடம் - 23

# வேதாகமம் ஓர் அறிமுகம்

# Introducing The Bible

நம் கரங்களில் தவழும் வேதபுத்தகம் புத்தகங்களின் புத்தகம் என்றழைக்கப்படுகிறது. ஏனென்றால், இது பல புத்தகங்களை உள்ளடக்கிய புத்தகமாயிருக்கிறது (வெளி.20:12).

வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஏற்பாடு என்றால் *உடன்படிக்கை* என்று பொருள்படும். தேவன் மோசே மூலமாகத் தம்முடைய ஜனங்களோடு ஓர் உடன்படிக்கை பண்ணினார். பிற்பாடு தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக என்றென்றும் மாறாத நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (I கொரி.3; எபி.8:13;9:16,

பழைய ஏற்பாடு 39 புத்தகங்களையும், புதிய ஏற்பாடு 27 புத்தகங்களையும் சேர்த்து 66 புத்தகங்களை வேதாகமம் தன்னகத்தே கொண்டுள்ளது.

### பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் ஐந்து பிரிவுகள்

| | |
|---|---|
| சட்டம் (5) | ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். |
| வரலாறு (12) | யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், I சாமுவேல், II சாமுவேல், I ராஜாக்கள், II ராஜாக்கள், I நாளாகமம், II நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர். |
| பாடல் (5) | யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு. |
| பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (5) | ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல் |
| சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (12) | ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா |

### புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் நான்கு பிரிவுகள்

| | |
|---|---|
| வாழ்க்கை வரலாறு (4) | மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் |
| வரலாறு (1) | அப்போஸ்தலருடைய நடபடிகள் |

| | |
|---|---|
| நிருபங்கள் (21) | ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர்,பிலிப்பியர், கொலோசெயர், I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர், I தீமோத்தேயு, II தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், எபிரெயர், யாக்கோபு, I பேதுரு, II பேதுரு, I யோவான் II யோவான்,III யோவான், யூதா. |
| தீர்க்கதரிசனம் (1) | வெளிப்படுத்தின விசேஷம் |

***வேதாகமம் மூன்று காலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.***

| | |
|---|---|
| பிதாக்களின் காலம் | இது ஆதாம் முதல் மோசே வரை உள்ள சுமார் 2500 வருடங்களை உள்ளடக்கிய காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் தேவன் முற்பிதாக்களினிடத்தில் நேரடியாகப் பேசினார் இச்செய்தியை முற்பிதாக்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களிடம், தங்களைச் சார்ந்தவர்களிடத்திலும் தெரிவித்தார்கள். |
| மோசேயின் காலம் (அ) யூதர்களின் காலம் | மோசே முதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை உள்ள இக்காலம் சுமார்1500 ஆண்டுகள் வரை நீடித்தது. இக்காலகட்டத்தில் தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலமாகப் பேசினார். இந்த நியாயப்பிரமாணம் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது முடிவுக்கு வந்தது ( கொலோ.2:14; மத்.5:17-19; லூக்கா. 24:44). |
| கிறிஸ்துவின் காலம் | இக்காலம் கிறிஸ்துவின் மரணத்திலிருந்து ஆரம்பமானது. இது கிறிஸ்துவின் வருகை வரை நீடித்திருக்கும். இக்காலம் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. இது காலத்தின் அடிப்படையில் பார்த்தால் கடைசி காலமாகும். இக்காலகட்டத்தில் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக மனிதர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் (யோவான் 20:30, 31; II தீமோ.3:16,17). |

- ***பிதாக்களின் காலம், நட்சத்திர ஒளியின் காலம் என்றழைக்கப் படுகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் குறைவான ஒளியே கொடுக்கப்பட்டது.***

- ***மோசேயின் காலம், நிலவொளியின் காலம் என்றழைக்கப் படுகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் சற்று கூடுதலான ஒளி கொடுக்கப்பட்டுள்ளது.***

- ***நிறைவாக, கிறிஸ்துவின் காலம் சூரியஒளியின் காலம் என்றழைக்கப்படுகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் இயேசுகிறிஸ்து மூலமாக முழுமையான ஒளி கொடுக்கப்பட்டது.***

வேதாகமத்தை நாற்பது தேவதாசர்கள் சுமார் 1600 வருட கால இடைவெளியில் எழுதினார்கள். இந்த எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு வேதவாக்கியங்களை எழுதியிருக் கிறார்கள். இவர்கள் அந்தந்தக் காலகட்டங்களிலிருந்த வேலைகளைச் செய்கிறவர்களாயிருந்தார்கள்.

இவர்கள் உலகின் பல பகுதிகளில், பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்ந்தார்கள். இந்த எழுத்தாளர்களெல்லாம் ஒருவரையெருவர் அறியாதவர்களாயிருந்திருந்தார்கள். இருந்த போதிலும், இவர்களுடைய எழுத்துக்களிலோ, கருத்துக்களிலோ எவ்வித முரண்பாடுமில்லை. ஆகையால், மனித இனத்தின் ஒட்டு மொத்த வரலாற்றிலும் தேவன் மனிதனோடு எப்படி இடைப் பட்டார் என்பதையும் வேதாகமம் தெளிவாகத் தெரிவிக்கிறது.

பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு கிரேக்கம் மற்றும் அராமிக் மொழியில் எழுதப் பட்டது. இவைகளையெல்லாம் தேவனுடைய மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள் (II பேதுரு 1:21; II தீமோ.3:16,17).

வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு புத்தகமாகும் (எபி.1:1,2). இதோடு நாம் ஒன்றையும் சேர்க்கவும் கூடாது, இதிலிருந்து ஒன்றையும் கழிக்கவும் கூடாது. இதற்குப் பதிலாக வேறெதையும் வைக்கவும் கூடாது. (வெளி.22:18,19; கலா.1:7-9; உபா. 4:2; நீதி. 30:6). மேலும், வேதவாக்கியங்களை நமக்குத் தருவதற்கு மாத்திரமல்ல, அதைப் பாதுகாப்பதற்கும் தேவனுக்கு வல்லமை உண்டு (I பேதுரு 1:25; மத். 24:35). முடிவாக, ஒட்டு மொத்த மனித இனமும் கர்த்தருடைய வார்த்தையால் நியாயந்தீர்க்கப்படும் (யோவான்

வேதாகமம் இவ்வுலகமும் அதிலுள்ளவைகளும் எவ்விதம் உண்டாயினவென்று விவரமாகச் சொல்லுகிறது (ஆதி.1,2 அதிகாரங்கள்) இது, மனிதனைப் பற்றிய ஒட்டுமொத்தத் தகவல்களையும் தயக்கமின்றித் தருகிறது. அது மாத்திரமல்ல, அதற்கு ஆதாரமாக வரலாற்றுத் தகவல்களையும், அறிவியல் பூர்வமான தகவல்களையும் வேதாகமம் தன்னகத்தே கொண்டுள்ளது.

- *வேதாகமம் ஆணும், பெண்ணும் தேவசாயலில், அதாவது என்றென்றும் அழியாத ஆத்துமாவுடன் உண்டாக்கப்பட்டதைச் சொல்லுகிறது [ஆதி.1:26,27].*
- *வேதாகமம் மனிதனுடைய வீழ்ச்சியைப் பற்றியும், மரணம் எப்படி இவ்வுலகத்திற்குள் பிரவேசித்தது என்பது பற்றியும் சொல்லுகிறது [ஆதி.3].*

- வேதாகமம் மோசேயின் சம்பவங்களைக் கால கிரமத்துடன் வெளிப்படுத்துகிறது. அவர் எப்படி இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினார் என்பதையும் விவரமாக வெளிப்படுத்துகிறது [யாத்.20].
- வேதாகமம் கிறிஸ்துவின் வருகை பற்றியும், கன்னிமரியினிடத்தில் அவருடைய பிறப்பு பற்றியும் தெளிவாகத் தெரிவிக்கிறது [மத்தேயு 1].
- வேதாகமம் கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றியும், அவருடைய சிலுவை மரணம் பற்றியும் சொல்லுகிறது [மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான்].
- வேதாகமம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது [1 கொரி.15;1-4]. மேலும், அவர் பரமேறி பிதாவினிடத்திற்குச் சென்றதையும் விவரிக்கிறது [அப்போஸ்தலர்1].
- வேதாகமம், சபை ஆரம்பத்தைப் பற்றியும் ஒருவர் அதிலே எப்படி அங்கத்தினராவது என்பது பற்றியும் போதிக்கிறது [அப்.2].
- வேதாகமம் ஒருவர் தன் கடந்த காலப் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லுகிறது.
  - சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும் [ரோமர் 10:17] அதை விசுவாசிக்க வேண்டும் [ ரோமர் 10:10]
  - பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும் [ அப்.17:30]
  - கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட வேண்டும் [மத்.10:3],
  - பாவமன்னிப்புக்கென்று ஞானஸ் நானம் பெற வேண்டும் [மாற்கு 16:16; அப். 2:38; 22:16]
- வேதாகமம் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டுமென்பது பற்றியும் விரிவாக விளக்குகிறது.
  - வாரத்தின் முதல் நாள் கூடுதல் [அப்.20:7],
  - ஜெபம் [அப்.2:42]
  - சத்திய வசனத்தைப் படித்தல் [ தீமோ.2:15]
  - பாடல் [எபே.5:19]
  - கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்தல் [மத்.26:26-28]
  - காணிக்கை கொடுத்தல் [1கொரி. 16:1,2].

- *வேதாகமம், கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ வேண்டுமென்று விவரிக்கிறது [II பேதுரு 1:5-11; வெளி. 22:14].*

- *வேதாகமம், நிறைவாக வருங்காலத்தில் மனிதனுக்கு என்ன நடக்கும் என்பதையும் எடுத்தியம்புகிறது.*

  - *மரணம் என்பது மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது [எபி. 9:27]*

  - *கிறிஸ்து மறுபடியும் வருவார் [ யோவான் 14:1-3]*

  - *நியாயத்தீர்ப்பு நடக்கும் (II கொரி. 5:10]*

  - *நீதிமான்கள் பரலோகத்திற்கும், துன்மார்க்கர் நரகத்திற்கும் போவார்கள் [மத். 25:46].*

நீங்கள் வேதாகமத்தை விசுவாசிக்கிறீர்களா? அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படிவீர்களா? இப்படிச் செய்பவர்கள் மட்டுமே என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். வெளி.14:13, பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; *அது: கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று.*

பாடம் - 24

# புதிய ஏற்பாட்டு ஒற்றுமை

## New Testament Unity

கிறிஸ்தவ உலகமானது இன்று மதரீதியாகப் பிளவு பட்டுள்ளது. அதாவது, கத்தோலிக்கம், ப்ரோடஸ்டன்ட் சபைகள், மார்க்கப் பிரிவினைக் கூட்டங்கள், சமுதாய சபைகள் என்று பல விதமாகப் பிரிந்துள்ளது. எல்லா சபைகளும் கர்த்தரையே சேவிப்பதாகச் சொல்லிக்கொள்ளுகின்றன. அதே நேரத்தில் தங்களுக்குள்ளே எங்கேயோ தவறு நடந்திருக்கிறது என்பதை இவர்கள் உணர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அதன் விளைவாகத்தான் இவ்விதமான மத அமைப்புகளுக்கிடையே ஒற்றுமையைக்கொண்டு வருவதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதஅமைப்புகளின் தலைவர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகப் பல மாநாடுகளை, சுவிசேஷக் கூட்டங்களை, கருத்தரங்குகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் விழிப்படைந்து, ஒற்றுமைக்காக முயற்சிக்கிறார்களே என்று இவர்களை மெச்ச முடியாது.

ஏனென்றால், நம் தேவன் பிரிவினையையும், குழப்பத்தையும் வெறுக்கிறார். உதாரணமாக, கொரிந்து பட்டணத்திலிருந்த கர்த்தருடைய சபையில் சில பிரிவினைகள் உருவாயின. உடனே பவுல் அவர்களைக் கடிந்துகொண்டார். I கொரி.1:10-17, *சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். ஏனெனில், என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது. உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல் லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்*

*பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என் நாமத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தேனென்று ஒருவனும் சொல்லாதபடிக்கு, நான் கிறிஸ்புவுக்கும், காயுவுக்குமேயன்றி, உங்களில் வேறொருவனுக்கும் ஞானஸ்நானங் கொடுக்கவில்லை; இதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங்கொடுத்தேனா இல்லையோ அறியேன். ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார்; கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்.*

மேற்கண்ட வனப்பகுதியில் அப்போஸ்தலனாகிய பவுல், ஒற்றுமைக்கான வேண்டுகோள் விடுக்கிறார். பிரிவினைகளோடு இடைப்படும்போது, பவுல், கொரிந்தியரின் பொருத்தமற்ற அந் நிலையை அவர்களுக்குப் புரியவைக்க அவர்களிடம் மூன்று கேள்விகளைக் கேட்கிறார். முதலாவது, கிறிஸ்து பிரிந்திருக் கிறாரா? என்று கேட்டார். நிச்சயமாக கிறிஸ்து பிரிந்திருக்க வில்லையென்பது அவர்களுக்குத் தெரியும். இரண்டாவது கேள்வி, பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? இல்லை, கிறிஸ்து தான் அவர்களுக்காகச் சிலுவையில் அறையப் பட்டார் என்பதும் தெரியும். மூன்றாவதாக, பவுலின் நாமத் தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இதுவும் இல்லை யென்பதுதான் பதில். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே தான் ஞானஸ்நானம் பெற்றார்கள். பாருங்கள், இங்கே முடிவு என்ன வென்றால், எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்க வேண்டும் என்பதுதான்! இது எவ்வளவு எளிமையான உபதேசமாக இருக்கிறது என்பதை நாம் சிந்தித்து அதின்படி செயல்பட வேண்டும்.

கொரிந்துப் பட்டணத்துச் சபையில் இத்தகைய பிரச்சனைகள் நிறைந்திருந்தபடியால்தான், ஞானஸ்நானம் கொடுக்க வந்தேனென்று யாரும் எண்ணிவிடாதபடி, ஒரு சிலருக்கு மாத்திரமே தான் ஞானஸ்நானம் கொடுத்ததாகப் பவுல் சொல்லுகிறார். வேறுவிதமாகச் சொன்னால், பவுல் தன் பணியின் நோக்கம் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதுதான் என்கிறார். இதன் விளைவாக, தானாகவே சிலர் அவருடைய கைகளினாலே ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். இங்கே, பவுல் ஞானஸ்

நானத்திற்கு எதிராக எதையும் போதிக்கவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்படியிருந்தால் அவர் ஒருவருக்கும் ஞானஸ்நானங் கொடுத்திருக்கவேமாட்டார். ஆனால், சூழ்நிலைகளின் காரணமாக, பவுல் சிலருக்கு மாத்திரம் ஞானஸ்நனங்கொடுத்ததைக் குறித்துச் சந்தோஷப்படுகிறார்.

ரோமர் 16:17,18 வசனங்களில் பவுல், *அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறர்கள் என்கிறார்.* இங்கே பவுல் சொல்லும்போது, பிரிவினையை உண்டாக்குகிறவர்கள் தனியாகக் குறிக்கப்பட்டு, அவர்களை விட்டு விலக வேண்டுமென்கிறார். நாம் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? ஏனென்றால், அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல், தங்கள் நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடற்றவர்களின் இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். ஆகவேதான் பவுல், அப்படிப்பட்டவர்கள் மெச்சப்பட வேண்டும், புகழப்பட வேண்டும் என்று சொல்லாமல் அப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேண்டுமென்று அறிவுறுத்துகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஒற்றுமைக்காக ஜெபித்தார். *யோவான் 17:20,21, நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் என்றார்.* இங்கே, கிறிஸ்து வானவர் அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தார். மேலும், அவர் களுடைய வார்த்தையினாலே தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காகவும்

ஜெபித்தார். அப்போஸ்தலர் சம்பந்தமாக கிறிஸ்து சொல்லும் போது, அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் என்று ஜெபித்தார். இது எந்த அளவுக்கு ஒன்றாயிருக்கவேண்டுமென்று பார்க்கும் போது நானும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல என்று சொல்லு கிறார். இதுதான் உண்மையான ஒற்றுமையாகும்.

பவுலின் எழுத்துக்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, அதிலே ஐக்கியத்திற்கான ஆதாரம் போடப்பட்டிருப்பதைக் காணமுடியும். எபே.4:1-6, *ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்ட வனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர் களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், ஒரே பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும், உங்கள் எல்லோருக்குள்ளும் இருக்கிறவர். இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரியங்களில் எத்தனை ஒன்றுகள் உள்ளன? ஒரே ஒரு ஒன்றுதான் உள்ளது.*

இவ்வுலகில் மெய்யான சபை ஒன்று உண்டு, அந்த சபையானது கிறிஸ்துவின் பெயரைத் தரித்திருக்கிறது. அது ஒரே மாதிரியான சுவிசேஷத்தைப் போதித்துக்கொண்டும், நடை முறைப்படுத்திக் கொண்டும் வருகிறது. மறுமுனையில் மத உலகில் சிலர், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லோருமே, ஒரு பெரிய ஆவிக்குரிய குடையின் கீழ்தான் இருக்கிறார்கள் என்று சொல்லுகின்றனர். ஆனால், பவுலுடைய எச்சரிப்பின்படி, நாம் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினை களையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டும். பிரியமானவர்களே! நிச்சயமாக எல்லோருக்கும் அந்தக் குடையின் கீழ் நிழலும், பாதுகாப்பும் கிடைக்காது. உண்மையான உபதேச த்திற்கு விரோதமான மற்றும் வித்தியாசமான உபதேசம் போதிக்கப் படும்போது, அந்த உபதேசம் பிரிவினையை உண்டாக்குகிற படியால் தேவன் அதைக் கடுமையாகக் கண்டிக்கிறார்.

எனதருமை நண்பர்களே! தேவன் நமக்கு ஒரேயொரு புத்தகத்தை அதாவது வேதாகமத்தைத் தந்திருக்கிறார். நாமெல்லோரும் அதை வாசித்து, விசுவாசித்து, அதன் போதனைகளுக்குக் கீழ்ப்படியும்போது, ஒரேமாதிரியான போதனைக்கு நாம் கீழ்ப்படிகிறவர்களாயிருப்போம். அப்போது அந்த ஒரே போதனைக்கு தங்களைக் கீழ்ப்படுத்துகிறவர்கள், ஒரே சபையில் சேர்க்கப்படுவார்கள், ஒரே மாதிரியான பெயரைத் தரித்திருப்பார்கள், தேவனை ஒரே மாதிரியாக ஆராதிப்பார்கள். ஆகையால், வேதாகமம் நமக்குள் ஒருபோதும் பிரிவினையை உண்டாக்காமல் தேவனோடு நம்மை இணைத்து வைக்கும். மேலும், கிறிஸ்து வானவர், நாம் பிரிந்திருக்கும்படியாக ஜெபிக்கவில்லை. மாறாக, நாமெல்லாரும் ஒன்றாகயிருக்கும்படிதான் ஜெபித்தார். ஆகையால், நாம் தேவசித்தத்தை செய்யவில்லையென்றால் ஒற்றுமையாக இருக்க முடியாது. அதேவேளையில் அவருடைய சித்தத்தைச் செய்யும்போது நாம் என்றென்றும் கிறிஸ்துவுக்குள் ஒற்றுமையாயிருக்க முடியும். +

## பாடம் - 25

# வாரத்தின் முதல் நாள்

# The First Day of The Week

ஒவ்வொரு வாரத்திற்கும் ஏழு நாட்கள் உண்டு. இவைகளுள் ஒரு கிறிஸ்தவன் எந்த நாளில் தேவனை ஆராதிக்க வேண்டும்? ஆராதனைக்கென்று ஏதாவது ஒரு நாள் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதா? வேதாகமம் இதைப்பற்றி என்ன போதிக்கிறது.

நாம் எல்லோரும் அறிந்திருக்கிறபடி, மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த யூதர்களுக்கான ஆராதனை நாள் சனிக்கிழமையாயிருந்தது. மற்ற மதங்களில் வெவ்வேறு கிழமைகள் அவர்களுடைய வழிபாட்டு நாட்களாக உள்ளன. உதாரணமாக, இஸ்லாமியர் தங்கள் தொழுகையின் நாளாக வெள்ளிக்கிழமையைத் தான் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவனுக்கு எப்படி? ஒரு கிறிஸ்தவன் குறிப்பிட்ட அந் நாளில் தேவனை ஆராதிக்க வேண்டுமென்பது அவ்வளவு முக்கியமா?

கிறிஸ்தவர்களில் சிலர் யூதப் பிரமாணமாகிய ஓய்வு நாள் இன்றும் நம்மைக் கட்டுப்படுத்துகிறது என்கிறார்கள். ஆனால், இந்தப் பிரமாணம் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. மாறாக, புறஜாதிகளுக்கல்ல (யாத். 20:117). நாம் இப்போது அதிலிருந்து முற்றுப்பெற்ற காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம் (யோவான் 1:17). இன்று நியாயப்பிரமாணம் நிறைவேற்றப்பட்டு நீக்கப்பட்டுவிட்டது (மத்.5:17-19). இதிலே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஓய்வுநாளை ஆசரித்தார். ஏனென்றால், அவர் வாழ்ந்ததும், மரித்ததும் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ்தான். ஆனால், அவர் ஓய்வுநாளை ஆசரிக்கும்படி ஒருவருக்கும் ஒருபோதும் கட்டளையிடவில்லை, ஆகையால், அவர் உயிர்த் தெழுந்த பிறகு அவருடைய சீஷர்கள் ஓய்வுநாளை ஆசரிக்கவே இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கூட பலமுறை ஓய்வுநாளில் ஜெப ஆலயங்களுக்குச் சென்றிருக்கிறார். ஆனால், அவர் ஒருமுறை கூட ஓய்வுநாளை ஆசரிக்கவில்லை. அப்படி யானால், அவர் எதற்காக இங்கே சென்றார்? தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதற்காகச் சென்றார். நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பார்க்கும்போது, பவுல், ஜெப ஆலயங்களுக்குப் போனதற்கான உண்மையான

நோக்கத்தை யூதர்கள் கண்டுபிடித்த பிறகு, அவருக்கு அங்கே வரவேற்புக் கிடைக்கவில்லை.

ஆராதனை நாள் கத்தோலிக்க சபையால் மாற்றப் பட்டிருக்கலாம் என்று சொல்லுகிறவர்களும் நம் மத்தியில் இன்றும் இருந்துகொண்டு தான் இருக்கிறார்கள். கத்தோலிக்கர்கள் தான் நமக்கு வேதாகமத்தைத் தந்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், இவை இரண்டுமே உண்மையில்லை. ஆம், கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் ஓய்வுநாளை ஆசரித்தார்கள் என்று வேதாகமம், எங்குமே போதிப்பதில்லை. ஆதித்திருச்சபை வரலாறும் இதைப் போதிக்கவில்லை. நாம் சத்திய வசனத்தை பகுத்துப் பார்க்கும்போது, மோசேயின் பிரமாணத்திற்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை கண்டுகொண்டால், மோசேயின் பிரமாணமும், அதைத் தொடர்ந்து ஓய்வுநாளும் (I கொரி. 13:6-16) முற்றிலும் ஒழிக்கப்பட்ட பிறகு, கிறிஸ்துவின் பிரமாணம் உதயமாகிறது. அதில் வாரத்தின் முதல் நாள் ஆராதனை நாளாகிறது. அப்.15:23-29 வசனங்களை நாம் வாசிக்கும் போது, புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாளை ஆசரிப்பதிலிருந்து, பரிசுத்த ஆவியானவரால் விலக்களிக்கப் பட்டதை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

நாம் வேதவாக்கியங்களுக்கு எதிரான முடிவுகளை எடுப்பதற்கு முன்பு வாரத்தின் முதல் நாள் பற்றிய சில காலங்களை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முதலில் வாரத்தின் முதல் நாள் என்பது கிறிஸ்தவர்களுக்கான ஓய்வுநாளோ, பரிசுத்தமாக ஆசரிக்கப்பட வேண்டிய ஒரு நாளோ அல்ல. அப்படியென்றால், அது என்ன? கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிப்பதற்காகத் தேவனால் அங்கீகரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிற ஓர் அற்புதமான நாள்.

*வாரத்தின் முதல்நாளைப் பற்றி வேதவாக்கியங்கள் என்ன சொல்லுகிறது என்பதைத் தயவு செய்து கவனியுங்கள்:*

- கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் மத்.(28:1-7).

- *வாரத்தின் முதல்நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகு குறைந்தது இரண்டு முறையாவது அவர் தம்முடைய சீஷர்களைச் சந்தித்தார்* (யோவான் 20:1,19,26).

- *பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அது வாரத்தின் முதல்நாளாக இருந்தது* (அப்.2:1-14)

- *இது நமக்கு எப்படித் தெரியும்? ஏனென்றால், எப்போதும் பெந்தகாஸ்தே நாள் வாரத்தின் முதல்நாளில் தான் வரும்.*
- *கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வாரத்தின் முதல் நாளில் தான் முதன் முதலாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது [அப்.2].*
- *சபை வாரத்தின் முதல்நாள் ஸ்தாபிக்கப்பட்டது [அப்.2:38-47].*
- *சீஷர்கள் அப்பம் பிட்கும்படியாக வாரத்தின் முதல்நாளில் கூடினார்கள்.*
- *அப்.20:7 வாரத்தின் முதல் நாளிலே, அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.* ஓய்வு நாளில் வாரத்தின் முதல்நாளாக இருந்திருக்குமானால், ஓய்வுநாள் கடந்து கூடுதலான நாட்களுக்கு, சீடர்களோடு சேர்ந்து ஆராதிக்கும் படியாய் பவுல் காத்திருக்க வேண்டும்? விடை உங்களுக்கே புரிந்திருக்கும்.
- கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் எதையாகிலும் சேர்த்து வைக்கும்படியாகக் கட்டளை பெற்றிருக்கிறார்கள்.
- கொரி.16:1,2, *பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன்.* என்று கூறுகிறார். இப்போது கேள்வி என்ன வென்றால், ஆராதனை நாள் ஓய்வு நாளாக இருந்திருந்தால் காணிக்கை சேகரிப்பதற்காக வாரத்தின் முதல்நாளிலே கிறிஸ்தவர்களை பவுல் ஏன் கூடிவரச் செய்ய வேண்டும்? ஓய்வுநாள் கொள்கையைப் பிடித்துக்கொண்டிருப்பவர்களே பவுலின் அறிவுரைகளைப் புரிந்துகொண்டீர்களா? அப்படியில்லையென்றால் ஏன் இன்னும் புரிந்துகொள்ளவில்லை?

கிறிஸ்தவர்கள் நாளானது சமீபித்து வருகிறதைக்காண்கிற படியால் சபை கூடிவருதலை விட்டுவிடக்கூடாது (எபி.10:25)

மறுபடியும் இது வாரத்தின் முதல்நாளாகத் தான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய யோவான் இதை கர்த்தருடைய நாள் என்று அழைக்கிறார். (வெளி.2:10). இது ஆராதனை நாளாக இருக்கிறது. கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து (மத்.6:33). அவரை ஆராதிக்கக் கூடிவரும் நாளாக வாரத்தின் முதல்நாள் இருக்கிறது.

இன்னும் பழைய பிரமாணத்தை உறுதியாக பிடித்துக் கொண்டிருப்பவர்கள் ரோமர் 7:1-7; II கொரி.3; எபேசியர் 2; கொலோசெயர் 2 மற்றும் எபிரெயர் 7-10 அதிகாரங்களை ஆழ்ந்து படியுங்கள். நாம் இப்போது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும். ஆகையால், பிரியமானவர்களே! தேவன் தம்முடைய வார்த்தைகளில் எந்த நாளில் அவரை ஆராதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அந்த நாளில், அதாவது வாரத்தின் முதல் நாளாம் ஞாயிற்றுக்கிழமையில் நாம் அவரை ஆராதித்து, உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியினாலே அவரை மகிமைப்படுத்துவோம், அப்போது தேவன் நம்மில் பிரியப்படுவார்.

## பாடம் - 26

# விசுவாசத்தினாலே இரட்சிப்பு

## Salvation by Faith

விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. அதாவது, இழந்துபோன ஒரு பாவி விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறார். இதையே வேறு விதமாகச் சொன்னால், அந்நபர் விசுவாசத்தினாலே நீதிமானக்கப் படுகிறார். மனுஷர் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று அறிகிறோம் (ரோமர் 3;28). இங்கே, பவுல் குறிப்பிடுகின்ற நியாயப் பிரமாணம் மோசேயின் பிரமாணமாயிருக்கிறது. தொடர்ந்து பவுல் சொல்லும்போது, *இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்* (ரோமர்5:1). எனவே, இரட்சிப்பு விசுவாசத்தினாலே என்பதை நாம் மறுக்க முடியாது.

இரட்சிப்பு விசுவாசத்தினாலே என்பதை நாம் மறுக்க முடியாவிட்டாலும் கூட, விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பு என்று நாம் போதிக்க முடியாது. ஆனால், கிறிஸ்தவ மார்க்கத்தில் பெரும்பான்மையோர் விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்று எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம், *மாத்திரம்* என்னும் வார்த்தையைச் சேர்த்து, ஒருவர் *விசுவாசத்தினாலே மாத்திரம்* இரட்சிக்கப்படுகிறார் என்னும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இது உண்மையல்ல. இரட்சிப்பு விசுவாசத்தினாலே மாத்திரம் உண்டாவதில்லை. இதை யாக்கோபு ஆசிரியர் இன்னும் சற்று கூடுதலாகவே மெருகேற்றுகிறார். யாக்கோபு 2:24, ***ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.***

ஒருவர் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக்கப் படவில்லையென்றால், வேதவாக்கியங்கள் விசுவாசத்தினாலே இரட்சிப்பு என்று போதிப்பதின் பொருள் என்ன? இங்கே, போதனை என்னவென்றால், விசுவாசம் என்பது வெறுமனே இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று ஏற்றுக் கொள்ளாமல், அதைவிட மேலாக அதைக் கிரியைகளிலே

வெளிப்படுத்துவது ஆம், விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவது, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வது, கீழ்ப்படிதலோடு அவருக்காகக் கிரியை செய்வது. தேவனும், தம்முடைய கிருபையினாலே நம்மெல்லோருக்கும் இரட்சிப்பை அருளுகிறார். அதை நாம் விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதினிமித்தம் ஒருவர் இரட்சிக்கப்பட கர்த்தர் கட்டளை யிட்டிருக்கிற எல்லாவற்றையும் செய்து முடித்தாலும் கூட, அவருடைய இரட்சிப்பு அவரின் விசுவாசத்தினாலேயும், தேவனுடைய கிருபையினாலுமே சாத்தியமாகிறது.

இது எப்படி உண்மையாயிருக்கிறது என்று பார்ப்போம். யோவான் 3:16-ல், கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். *தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனே அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.* இங்கே, நாம் கேட்க வேண்டிய கேள்வி ஒருவர் யாரை விசுவாசிக்க வேண்டும்? இதையே வேறுவிதமாகச் சொன்னால், நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? என்று யாராவது ஒரு நபரிடம் கேட்டால், ஆம், விசுவாசிக்கிறேன் என்று அந்நபர் சொல்ல வேண்டும். அடுத்த கேள்வி, அவர் சொல்லுகிறதைச் செய்யும் அளவுக்கு அவரிடம் நீங்கள் அன்பு கூருகிறீர்களா? ஆம், என்றால், அந்நபர் உண்மையாகவே அவரிடத்தில் அன்பு கூர்ந்தால் அவர் சொல்லுகிறதைச் செய்கிறவராக இருக்க வேண்டும். ஆகையால், கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்ப்படிகிற அளவுக்கு ஒருவர் விசுவாசிக்கவில்லையென்றால், உண்மையாக அந்நபர் தேவனை விசுவாசிக்கவில்லை என்று தான் பொருள்.

குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசி யாதவனொ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார் (யோவான் 3:23). இவ்வசனத்தின் இரண்டாம் பகுதியில், குமாரனை விசுவாசியாதவனுக்கு என்ன நடக்கும் என்பதைக் கவனியுங்கள். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை என்றுள்ளது. அதாவது, குமாரனை விசுவாசித்துக் கீழ்ப்படிகிறவன் நித்திய ஜீவனை உடையவனாகிறான், குமாரனை விசுவாசித்துக் கீழ்ப்படியாதவர்கள் நித்திய ஜீவனைக் காண்பதில்லை.

இதற்கான செயல்பாட்டைக் கீழ்க்காணும் வசனங்களில் நாம் காண முடியும். *இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான், அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்* (அப்.8:36-39). இங்கே, பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியிடம் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தார். அப்பொழுது எத்தி யோப்பிய மந்திரி என்ன செய்தார்? அவர் கிறிஸ்துவை அறிக்கை யிட்டு கிறிஸ்துவை முழு இருதயத்தோடும் விசுவாசித்தான், அதாவது அவர் தன் விசுவாசத்தை கர்த்தருக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகக் காட்டினார். ஆகவே தான் அவர் இரட்சிக்கப்பட்டார்.

மேலும், பவுலும், சீலாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப்.16:31) என்று சிறைச்சாலைக் காரனிடத்தில் சொன்னார்கள். பலர் இங்கேயே நின்று விடுகிறார்கள். ஆனால், இது சரியானதல்ல. ஏனென்றால், யார் இந்த சிறைச்சாலைக்காரன்? அவன் ஒரு அவிசுவாசியாக இருந்தான். முதலில் அவன் விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது. ஆகையால், அவனும் அவன் வீட்டாரும் விசுவாசிக்கத்தக்கதாக பவுலும், சீலாவும் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தார்கள். விசுவாசம் உண்டான பிறகு (ரோமர் 10:17), சிறைச்சாலைக்காரன் அவர்கள் கால்களைக் கழுவினான். இதன் மூலம் அவன் தன்னுடைய மனந்திரும்புதலைக் காட்டினான். அதன் பின்பு அவனும், அவன் வீட்டாரனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மிக எளிமையாக, அதே நேரத்தில் மிகத் தெளிவாக, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற்கு 16:16)

என்று சொல்லியிருக்கிறார். நம் ஆண்டவர் எங்கேயாவது விசுவாசத்தினாலே மாத்திரம் என்று சொல்லிவிட்டு, நீங்கள் மற்ற கட்டளைகளுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டாம் என்று சொல்லியிருக்கிறாரா? நிச்சயமாக இல்லை. இங்கே செய்தி என்னவென்றால், ஒருவருக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உண்மையான விசுவாசம் இருந்தால், அந்த விசுவாசம் அந்நபரை ஆண்டவருக்குக் கீழ்ப்படியப்பண்ணும். அதாவது, அவர், நிச்சயமாக தன்னுடைய விசுவாசத்தைக் கிரியைகளில் காட்டுவார் அல்லது நிரூபிப்பார். மேலும், நாம் எபிரெயர் 11-ம் அதிகாரத்தை வாசித்தால், தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய பக்தி வாழ்வில் எப்படித் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் காணமுடியும். ஆகையால் ஜீவபுத்தகத்தில் நம்முடைய நாமங்களும் பதியப்பட பக்தி வாழ்வில் கிரியையுடன் கூடிய விசுவாச வீரர்களாய் ஜொலித்து மற்றவர்களையும் இப்பாதைக்கு அழைத்து வர அருட்பணி செய்வோம். +

## பாடம் - 27
# மதத்தின் பெயரால் ஜனங்கள் செய்யும் காரியங்களை ஏன் செய்கிறார்கள்?
# Why Do People Do What They Do In The Name of Religion?

மதத்தின் பெயரால் தங்கள் முதுகில் காயங்களை ஏற்படுத்தி மார்பில் அடித்துக்கொண்டு இரத்தம் சொட்ட சொட்டத் தங்கள் கடவுள்களின் பெயரை உச்சரிக்கும் கூட்டத்தை நான் பார்த்திருக்கிறேன். இன்னும் சிலர் மிருக பலிகள் செலுத்துவதையும், எல்லாவிதமான சடங்காச்சாரங்களைச் செய்வதையும், கால்நடைகளை மரியாதையாக வணங்குவதையும் கூட பார்த்திருக்கிறேன். போதாக்குறைக்கு, கத்தோலிக்கர்களும், ப்ரோடஸ்டன்ட்காரர்களும் ஒருவருக்கொருவர் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டதன் மூலம், தேவனுடைய நாமம் வெகுவாகத் தூஷிக்கப்பட்டுவிட்டது. மத காரியங்களுக்காக ஜனங்கள் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள்? என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அதற்கான பதிலாக, அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவ்வளவு தான், அவர்கள் அவ்விதமாகத்தான் போதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே எண்ணுகிறேன். அவர்களில் அநேகர் நேர்மையும் உண்மையுமுள்ளவர்களாயிருக்கிறபடியால், இவைகளையெல்லாம் செய்யவேண்டுமென்ற நம்பிக்கையில் அவைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பக்தியாயிருப்பது மாத்திரம் போதுமானதல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும். ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாட்களில் கூட பலர் மிகவும் பக்தியாயிருந்தார்கள். ஆனால், அவர்கள் காரியங்களைச் சரியாகச் செய்ய வேண்டுமென்பதற்காகப் பக்தியாய் இராமல் மனிதர்கள் காண வேண்டுமென்பதற்காகவே செய்தார்கள் (மத்தேயு 6). இன்னும் சிலர், தங்கள் மேலான வாழ்வுக்குச் சிறந்த வழி ஒன்றிருப்பதை அறியாமலேயே தங்கள் காரியங்களைச் செய்கிறார்கள் (அப்போஸ்தலர் 17). மற்றும் ஒரு சாரார், தேவனுடைய உபதேசங்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாக மனுஷருடைய உபதேசங்களைப் பின்பற்றுகிறார்கள் (மத்தேயு 7:21-23;15:9). மேலும், பலர் பொருளாதார நன்மைகளுக்காகப் பக்தியாயிருக்கிறார்கள்.

இவ்வகையான மக்கள் கூலியாட்கள் என்றழைக்கப்படுகிறார்கள் (யோவான் 10:12,13). இப்படிப்பட்டவர்கள், தங்களுக்கான கூலி கிடைக்கும்வரை யாரைப் பற்றியும் கவலைப்படாமல், எந்த வேலையாக இருந்தாலும் செய்யக்கூடிய மனோபாவம் உடையவர்கள்.

ஒருவர் தான் சார்ந்த மதத்தில் எவ்வளவு நேர்மையானவராக, உண்மையுள்ளவராக இருந்தாலும் சரி, அவர் பல காரியங்களை அறியாமையினால் செய்கிறார் என்பதே உண்மையாயிருக்கிறது. அப்படிப்பட்ட ஒருவர், தான் சார்ந்த மதத்தில் அல்லது மார்க்கத்தில் பிரயாசப்பட வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால், அதிலுள்ள சத்தியம் அல்லது உபதேசம் உண்மையுள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும். மார்க்க உலகில் சத்தியம் என்பது ஒன்றே ஒன்று தான் உண்டு. அது தனக்குள்ளே ஒருபோதும் முரண்படாது. ஒரு மனிதன் அதை முழுமையாக அறிந்து தன் வாழ்வில் சிறப்பாய் செயல்படவேண்டும் (யோவான் 17:17;8:32). இப்படிச் சிறப்பாய் செயல்படக்கூடியவர்கள் எல்லோரும் இணைந்து ஒன்றாகத் தேவனை ஆராதிப்பார்கள். இப்படிச் செய்வது அவர்களுக்குள்ளே அறிவுப்பூர்வமாகவும், நியாயமாகவும், பிரயோஜனமாகவும் இருக்கும். இப்படிச்செய்வதின் மூலம் தேவன் கனப்படுத்தப் படுகிறார்.

நாம் எப்படி சத்தியத்தை அறிந்து அதைப் பெற்றுக் கொள்ள முடியும்? இதை நாம், தேவன் இருக்கிறார் என்பதை ஆதாரமாகக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும். இதுதான் நியாயமானதாகவும், சரியான முடிவை ஏற்படுத்துகிறதாகவும் இருக்கிறது. சிருஷ்டிகர் என்பவர் இருந்தால், அவர் மாத்திரமே தேவனாக இருக்க முடியும். சிருஷ்டிகர் என்பவர் தான் தேவன் என்று எப்படி நாம் அவரை அறிந்து கொள்வது? அவருக்கென்று ஏதாவது சித்தமுண்டா? அவர் ஏதாவது பேசியிருக்கிறாரா? அவர் தம்முடைய விருப்பங்களை மனித இனத்துக்கு எப்படி வெளிப் படுத்தியிருக்கிறார்? அந்த தேவன் மனித இனம் எதைச் செய்யும்படி சொல்லியிருக்கிறார்? அதைக்குறித்து மனிதன் செய்ய வேண்டியது என்ன?

மனிதன் செய்ய வேண்டியது அந்த ஒரே தேவனையும், அவருடைய சித்தத்தையும் அறிந்துகொள்ள நாடுவதாகத் தான் இருக்கவேண்டும். உலகத்தில் அநேகம் புத்தகங்கள் உண்டு.

அவைகளில் நாம், தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடாகிய வேதாகமத்தைச் சரியாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமா யிருக்கிறது. எப்படியென்றால், மற்ற புத்தகங்களோடு ஒரு போதும் வேதாகமத்தை ஒப்பிடவே முடியாது. ஏனென்றால், மனிதனுடைய பிரச்சனைகள் அனைத்திற்கும் தீர்வாக அமைவது விவிலியம் மாத்திரமே. இந்த விவிலியம், சிருஷ்டிப்பைப் பற்றி, தேவனைப் பற்றி, மனித இனத்தின் ஆரம்பம் பற்றி, மனிதனின் வீழ்ச்சி பற்றி அதிலிருந்து மனிதன் எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்பது பற்றி, மனிதனுடைய மரணத்திற்குப் பின்பு என்ன நடக்கும் என்பது பற்றியும் மிகத் தெளிவாக விளக்குகிறது. உலகிலுள்ள புத்தகங்கள் அனைத்தையும் ஆராய்ந்தாலும், அவை களில் கட்டுக்கதைகள் தான் அதிகமாக இழையோடியிருக்கும். இவைகளிலிருந்து வேறுபட்டு எல்லாப் புத்தகங்களுக்கும் மேலாக உயர்ந்து நிற்பது வேதாகமம் மட்டுமே. வேதாகமம் தான் அது வெளிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து பல நூற்றாண்டுகளாக உலகிலேயே அதிகமான பேரால் வாசித்து கடைப்பிடிக்கப்படும் புத்தகமாக இன்றளவும் திகழ்கின்றது.

மதசம்பந்தமான காரியங்களில் மனிதனுடைய வார்த்தை களுக்குச் செவிகொடுக்க வேண்டாம். ஏனென்றால், நீங்களே காரியங்களை விசாரித்துப் பாருங்கள், உங்களுக்கு நல்ல மனது இருக்கிறது நீங்கள் புத்திசாலிகள். உங்களால் காரியங்களைப் புரிந்து அறிந்து முடிவெடுக்க முடியும். ஆம், வேத வாக்கியங்களை நீங்களே மீண்டும் மீண்டும் படியுங்கள். வேத வசனங்கள் எதைப் போதிக்கின்றன என்பதைக் காண அவைகளை ஆராய்ந்து பாருங்கள் (யோவான் 5:39). ஒருவேளை நீங்கள் மனிதர்களின் போதனைகளைக் கவனித்தால், அவர்கள் போதனையோடு வேதாகமத்தின் போதனையை ஒப்பிட்டுப் பாருங்கள். அதை மாத்திரம் நீங்கள் நேர்மையாகச் செய்தால், அவர்கள் போதிக்கிறார்களா அல்லது தங்கள் சுக வாழ்வின் மேன்மைகளைப் பேசுகிறார்களா என்பதை நீங்கள் நிச்சயம் அடையாளங் கண்டு கொள்ள முடியும்.

தேவன் ஒருவரே, அவருடைய மார்க்கமும் ஒன்று தான், அந்த மார்க்கத்திற்கு வழிகாட்டின புத்தகமும் ஒன்றுதான், தேவனு டைய சித்தமும் ஒன்றுதான் என்பதை வேதாகமத்தின் பக்கங்களி லிருந்து மனிதன் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டால்,

தற்போது செய்து கொண்டிருக்கிற காரியங்களை விட்டு விட்டு அவன் விவேகமான, நியாயமான, சரியான காரியங்களைச் செய்யத் தொடங்கி விடுவான். ஆம், சத்தியம் ஒரு மனிதனை விடுதலையாக்கும் (யோவான் 8:32). சத்தியத்திற்கு ஒருவர் கீழ்ப்படியும்போது அது அவரை இரட்சிக்கும் ( I பேதுரு 1:2,23; மாற்கு 16:16) . மேலும், சத்தியம் உண்மை யுள்ளவர்களுக்கு நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையையும் கொடுக்கிறது (வெளி.2:10).

நீங்கள் சார்ந்திருக்கும் மத நம்பிக்கையில், பழக்க வழக்கங்களில் குருட்டாட்டமுள்ளவர்களாய் இருக்கவேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதற்காக நீங்கள் புதுமையாக வித்தியாசமாக இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. இன்றைய நாட்களில் மதத்தின் பெயரால் செய்யப்படும் காரியங்களை நீங்கள் செய்ய வேண்டியதில்லை. அவைகளையெல்லாம் செய்யாமலேயே நீங்கள் பக்தியாக வாழமுடியும். இந்தக் காரியங்களையெல்லாம் நீங்கள் சிந்தித்து, பரிசோதித்துப் பார்க்கும்படியாக உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஏனெனில், மார்க்க சம்பந்தமான காரியங்களில், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதைச் செய்யவே நாங்கள் விரும்புகிறோம். அப்போதுதான் நாங்கள் சரியானவர்களாக இருப்போம்.

தொடர்ந்து நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்யும் போது, ஒட்டுமொத்த உலகத்திலிருந்தும் வித்தியாசமானவர்களாக இருப்போம். அதாவது, நாம் வாழ்கிற, ஆராதிக்கிற, போதிக்கின்ற விதங்களில் நாம் மற்றவர்களிடமிருந்து முற்றிலுமாக மாறுபட்டு நல்லொழுக்கமுள்ள வாழ்க்கை வாழ்ந்து மற்றவர்களோடு எப்போதும் உண்மையை மாத்திரமே பேசுகிறவர்களாக இருப்போம். இப்படிப்பட்ட குணாதிசயங்கள் நம்மில் என்றென்றும் மிளிர நாம் தேவனைப் பணிவோடும், பக்தியோடும், விவேகத்தோடும் தொழுதுகொள்ள வேண்டும்.

+

# பிசாசுகளைத் துரத்துதல்

## Casting Out Devils

சமீப காலமாக சாத்தானை ஆராதிப்பவர்கள் பற்றி ஒரு புறத்திலும், பிசாசுகளைத் துரத்துகிறவர்கள் பற்றி மறுபுறத்திலும், அதிகமாகக் கேள்விப்படுகிறோம். பேய் ஓட்டுதலைப் பற்றி எழுதப்பட்ட ஒரு புத்தகம் அதிகமாக விற்பனையான புத்தகங் களுள் ஒன்றாகத் திகழ்கிறது. பேய் ஓட்டுதலைப் பற்றி ஒரு திரைப் படம் எடுக்கப்பட்டு அதுவும் அதிகமாகப் பிரபலமானது. இவைக ளெல்லாம், பிசாசைப் பற்றியும், பிசாசு மனிதனோடு இடைபடுகிற விதத்தைப் பற்றியும் பல கேள்விகளை எழுப்புகின்றன. ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ் தலர்களின் நாட்களிலும், பிசாசுகள் மனிதர்களுக்குள்ளாகப் புகுந்து அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்தியது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும், அந்த அசுத்த ஆவிகளைத் துரத்தியிருக்கிறார்கள். ஆனால், இந் நாட்களில் எப்படி? இன்று ஜனங்களுக்குள்ளாக பிசாசு புகுகின்றதா? அப்படிப் புகுந்தால் அதை விரட்ட முடியுமா? யாரால் பிசாசுகளைத் துரத்த முடியும்?

வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது, சாத்தானுடைய ஆரம்பம், அவன் எப்படிக் கிரியை செய்கிறான் என்பது பற்றி யெல்லாம் வேதாகமம் அவ்வளவாகத் தகவல்களைத் தர வில்லையென்றாலும், ஆங்காங்கே அவனைப் பற்றி பதிவு செய் யப்பட்டிருக்கும் தகவல்களைத் தான் நாம் சார்ந்திருக்க வேண்டிய தாயிருக்கிறது. தேவன், வானத்திலும் பூமியிலும் உள்ள சகல வற்றையும் உண்டாக்கினார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக் கிறபடியால், சாத்தானை தேவன் தான் உண்டாக்கினார் என்ற முடி வுக்கு தாராளமாக நாம் வர முடியும். ஆரம்பத்தில் சாத்தான் தீமை யானவனாகக் காணப்படவில்லை. ஆனால், அவன் தேவனுக்கு விரோதமாகவும், உண்மையுள்ள தூதர்களுக்கு விரோதமாகவும் கலகம் செய்தபடியால், அவனும் அவனுக்கு ஆதரவாயிருந்தவர் களும் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டார்கள். தேவனால், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவுடனேயே சாத்தான், சமயத்தை வீணடிக்காமல் ஏதேன் தோட்டத்தில் ஆதித்தாயாகிய ஏவாளின் மூலம் ஆதாமையும் வஞ்சித்து வெற்றி கொண்டான். அதினி மித்தம் பாவம் உலகத்தில் பிரவேசித்தது. அதிலிருந்து தான் சாத் தான் இருப்பதை மனித குலம் உணர்ந்து கொண்டது.

வேதாகமத்தில், சாத்தான் பெயல்செபூல், பிசாசு, சர்ப்பம், பொல்லாதவன், பொல்லாத ஆவி, அசுத்த ஆவி என்னும் பதங்களில் அழைக்கப்படும் அவன் ஆவியாயிருக்கிறான். வேதாகமத்தின் பல இடங்களில் பன்மையில் பேசப்பட்டிருக்கிறான். மாற்கு 5:1-1 13 வசனங்களில் இயேசு கிறிஸ்து கல்லறைகளில் வாழ்ந்து கொண்டிருந்த அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனை எதிர்கொண்டு அவனைப் பார்த்து உன் பெயர் என்னவென்று கேட்டபோது நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பெயர் லேகியோன் என்றான். யாக்கோபு நிருபத்தில் நாம் பார்க்கும்போது அதன் ஆசிரியர், கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது; ஏனென்றால், பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன (யாக்.2:19) என்கிறார். இதினிமித்தம். சாத்தானும், அவனுடைய தூதர்களும் அநேகராயிருக்கிறபடியால், பிசாசு பிடித்தவன் அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆகவேதான், சாத்தான், பிசாசுகள் என்றும் பன்மையில் அழைக்கப்படுகிறான்.

கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் நாட்களிலும், பிசாசு சிலபல விசேஷித்த வல்லமைகளையும், சுதந்திரங்களையும் பெற்றுக்கொள்ள தேவன் அனுமதி கொடுத்தது போல் தெரிகிறது. எப்படியென்றால், சாத்தான் மனிதர்களுக்குள்ளாகப் புகுந்து அவர்களைக் கட்டுப்படுத்த தேவன் அனுமதித்திருக்கிறார். இத்தகைய சூழலில் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், அந்த அசுத்த ஆவிகளுக்கு எதிராக எதையும் செய்ய முடியாதிருந்தது. பிசாசுகள் மனிதர்களுக்குள் குடியிருந்து, அவர்கள் மூலமாகப் பேசி, அவர்களை அலைக்கழித்தன. ஆனால், இதன் நோக்கம் என்னவாக இருந்தது? பிசாசுகளுக்கு இத்தகைய விசேஷித்த வல்லமையையும், சுதந்திரத்தையும் தேவன் கொடுத்ததற்கான காரணம், கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் பிசாசுகளைத் துரத்தி சாத்தானை விட தேவன் தான் பெரியவர் என்பதை உலகம் உணர்ந்து கொள்ளத்தான். மேலும் இது, கிறிஸ்து மூலமாகவும், அப்போஸ்தலர் மூலமாகவும் தேவன் கிரியை செய்கிறார் என்பதையும் நிரூபணம் செய்தது. எனவே, இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, சாத்தானுக்கு ஒருவகையான வல்லமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, சில குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டது என்பது உறுதியாகத் தெரிகிறது.

மனிதனை மேற்கொண்டு, அவனுக்குள்ளாகப் புகுந்து செயல்படும் அதிகாரம் அந்நாட்களில் இருந்துள்ளது. இதற்கு மிகச்

சிறந்த உதரணம் மாற்கு 5:1-13 வசனப் பகுதிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்றுமொரு உதாரணத்தை மத்தேயு 9:32 -ல் பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனுடைய வாழ்க்கையில் நாம் காணமுடியும். மேலும், இயேசுவும் அப்போஸ்தலர்களும் கிராமங்கள்தோறும் போய் நற்செய்தியை அறிவித்தார்கள். பின்பு அவர் பட்டணங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனே கூட இருந்தார்கள் (லூக்கா 8:1). பிலிப்பு சுவிசேஷத்தை பிரசங்கிக்க சமாரியாவுக்குச் சென்றபோது பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித் தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக் காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள் (அப்.8: 6,7). இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், அசுத்த ஆவிகளைத் துரத்தும் வல்லமையை கிறிஸ்துவும், அப் போஸ்தலர்களும் மாத்திரம் பெற்றிருக்கவில்லை. மாறாக, அப் போஸ்தலர்கள் கைகளை வைத்ததினால், அற்புத அடையாளங் களைச் செய்யும் வல்லமை பெற்ற பிலிப்பு போன்றோரும் பிசாசு களைத் துரத்தியிருக்கிறார்கள். பிசாசு பிடித்திருந்த பலரை நம் ஆண்டவரும், அவருடைய சீஷர்களும் சுகப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஆனால், யாருக்கும் பிசாசு பிடிக்கவில்லை என்று பல் வேறுபட்ட விளக்கங்கள், வியாக்கியானங்கள் உண்டு. இன்னும் சிலர், தங்களுக்குப் பிசாசு பிடித்திருந்ததாக நினைத்தவர்கள், பாவம் நிறைந்த தூதர்களால் வழிநடத்தப்பட்டவர்கள் என்றும் கூறுகிறார்கள். இந்த விளக்கங்கள் ஒன்றும் வேத வசனத்தோடு ஒத்துப் போகவில்லை என்பதை நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். யூதா 6, தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்து கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர் களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளி னாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார். I பேதுரு 2:4, பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர், அந்தப் பிசாசுகள் துன்மார்க்கமாக மரித்தவர்களுடைய ஆவிகள் என்று நினைக்கின்றனர். ஆனால், *அந்த ஐசுவரியவான் ஆபிரகாமிடம் தனக்கு ஐந்து சகோதரர் உண்டென்றும், அவர்கள் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி லாசரு போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். அதற்கு ஆபிரகாம், அவர்கள் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்துகொண்டிருந்தபடியால் அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாத படிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.*

மேலும் பலர், அசுத்த ஆவிகள் ஒன்றும் தங்களுக்குப் பிடிக்கவில்லையென்றும், தங்களுக்கு ஏதோ ஒரு வியாதி இருந்ததென்றும், புத்தி சுவாதீனத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், தங்களுக்கு வந்த வியாதிக்குத் கூட தங்கள் கிரியைகளே காரணம் என்றும் சொல்லுகிறார்கள். சிலவேளைகளில் வியாதிகளுக்கும் அசுத்த ஆவிகளுக்கும் சம்பந்தம் உண்டு. அது எப்போதுமே அப்படியிருப்பதில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால், அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்டவர்கள் சம்பந்தமான வசனப்பகுதிகளை நாம் கூர்ந்து நோக்கும்போது நோய்களுக்கும், அசுத்த ஆவிகளுக்கு உள்ள வேறுபாட்டை நம் ஆண்டவர் இயேசு தெளிவுறக் காட்டியிருப்பார். இங்கே இந்நாட்களில் அசுத்த ஆவிகள் இல்லாதிருந்தால், மனிதர்களைப் பிடித்திருந்த ஆவி எது? என்ற கேள்வி எழுகிறது. இதற்கு, வேதவாக்கியங்கள் அந்நாட்களில் மனிதர்களை அசுத்த ஆவிகள் பிடித்திருந்ததை உறுதி செய்கின்றன.

நிச்சயமாகவே, முதல் நூற்றாண்டிலிருந்த எல்லோருக்கும் பிசாசு பிடித்திருக்கவில்லை. ஆனால், வேதம் சொல்லுகிறது. பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், அற்புதமாக அவைகளைத் துரத்துகிறவர்களிடத்தில் வந்திருக்கிறர்கள். இது தொடர்பாக வேதாகமத்தில் பல வசனங்கள் உண்டு. அதில் , மத்தேயு 12:22-30-ம் வசனப்பகுதிகளை மட்டும் பார்ப்போம். *அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக்கதாக அவனைச்*

*சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள். பரிசேயர் அதைக்கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி தனக்குத்தானே விரோத மாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப்பட்டணமும் எந்த வீடும் நிலைநிற் கமாட்டது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே ; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? நான் பெயல்செபூலினாலே பிசாசு களைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கி றவர்களாயிருப்பார்கள். நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசு களைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்ஜியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பல வானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன் உடமைகளை எப் படிக் கொள்ளையிடக்கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட் டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியா யிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.* இங்கே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாத்தானின் வல்லமையாலே பிசாசுகளைத் துரத்துவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறார். இதை, வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்து பிசாசுக்காக வேலை செய் வதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு கிறிஸ்துவானவர், சாத்தான் சாத்தானை எப்படித் துரத்த முடியும்? என்று கேட்டார். மேலும் அவர், தனக்குத் தானே பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும், ஏன் சாத்தா னின் ராஜ்யமும் கூட பாழாய்ப் போம் என்றும் சொன்னார்.

இயேசு கிறிஸ்து தாம் அசுத்த ஆவிகளைத் துரத்தினது மாத்திரமல்ல அப்போஸ்தலர்களும் அப்படிச் செய்யும்படி கட்டளையிட்டார். அதாவது வரையறுக்கப்பட்ட கட்டளையை அவர் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கும்போது, *வியாதி யுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைக் குணப் படுத்துங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள், இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள் என்று சொன்னார்.* (மத்.10:8). அதே அப் போஸ்தலர்களிடம் பிரதான கட்டளைகளைக் கொடுக்கும் போது இவ்விதமாகச் சொன்னார். மாற்கு 16:17,18,

*விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடைாளங்களாவன: என் நாமத்தி னாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.*

மேற்சொல்லப்பட்ட வசனத்தில் நமதாண்டவர் பிசாசு களைத் துரத்துவதற்கும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்து வதற்கும், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுவதற்கும், மற்ற அற்புத அடையாளங்களைச் செய்வதற்கும் உண்டான வித்தியா சத்தைக் காட்டுகிறார். அதாவது, சபையானது ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், அதன் வளர்ச்சிக்காகவும், தேவனுடைய வல்லமை வெளிப்படும்படியாகவும் இது கொடுக்கப்பட்டது. அந் நாட்களிலிருந்த எல்லோருக்கும் பிசாசு பிடித்திருக்கவில்லை என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அதாவது, பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் குறைவான எண்ணிக்கையில் தான் இருந்தார்கள். ஆக தேவன், தமது குமாரனுக்கும், அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார்.

தேவனால் எல்லோருக்கும் பிசாசுகளைத் துரத்தும் வல்ல மையானது கொடுக்கப்படவில்லை என்ற உண்மை இதன் மூலம் நிரூபணமாகிறது. அப்.19:3-17, வசனப்பகுதிகளில், *அப்பொழுது தேசாந்திரிகளாய் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல் லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நா மத்தைச் சொல்லத் துணிந்து: பவுல், பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிர தான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லிப் பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந் து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிர்வாணிக ளும், காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். இது எபேசுவிலே குடியிருந்த யூதர், கிரேக்கர் அனைவருக்கும் தெரிய வந்தபோது அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயே சுவின் நாமம் மகிமைப்பட்டது.*

இது இன்றைய நாட்களில் மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார், தங்களுக்குப் பிசாசுகளைத் துரத்தும் வல்லமை உண்டு என்று சொல்வதை எனக்கு நினைவுபடுத்துகிறது. முதல் நூற்றாண்டில், ஒரு சிலருக்குப் பிசாசு பிடித்திருந்ததுபோல், இன்றும் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் இருந்து மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார் அவைகளைத் துரத்த முயற்சித்தால், எவ்வித சந்தேகமுமின்றி பொல்லாத ஆவிகள் அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன், சுவிசேஷப் பிரசங்கியார்களையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி அவர்கள்மேல் பாய்ந்து அவர்களைப் பாடாய்ப் படுத்திவிடும். சொல்லப்போனால், இன்று பிசாசு பிடித்த யாரையாவது மார்க்கப்பிரிவினை பிரசங்கியார்கள் விரட்ட முயற்சித்தால் அவர்களுடைய கதி அதோ கதியாகிவிடும்.

இப்போது எழும் கேள்வி என்னவென்றால், இன்று பிசாசுகள் மனிதர்களைப் பிடிக்கின்றனவா? நாம் இதுகாறும் பார்த்த காரியங்களை வைத்துப் பார்க்கும்போது இல்லை என்பது தான் பதிலாக இருக்கிறது. ஆனால், பலர் இன்றும் பிசாசுகள் இருப்பது நிச்சயம், அவைகள் மனிதர்களை அலைக்கழிக்கின்றன என்கிறார்கள். அதற்கு அவர்கள் பல உதாரணங்களையும் காண்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களில் ஒருவர் எளிதாக வஞ்சிக்கப்பட முடியும். அதிலும் குறிப்பாக, வேத வாக்கியங்கள் இதைக் குறித்து என்ன போதிக்கின்றன என்பதை ஒருவர் தெளிவாகப் புரிந்து கொள்ளாதபோது வஞ்சிக்கப்படுவதென்பது இன்னும் எளிதாகிவிடுகிறது. ஆம், எனக்குத் தெரிந்த வாலிபன் ஒருவனுக்கு வலிப்பு நோய் உண்டு. அடிக்கடி அவனுக்கு வலிப்பு வந்துவிடும். அதினிமித்தம், அவனுடைய பெற்றோர் அவனுக்குள் அசுத்த ஆவி பிடித்திருப்பதாக நினைத்தார்கள். ஆனால், அவனுக்கு எந்த ஆவியும் பிடிக்கவில்லை. அதாவது, நோய்க்கும் பேய்க்கும் சம்பந்தமில்லை.

மற்றொரு சந்தர்ப்பத்தில் உடம்பு வீங்கிய ஓர் இளம் பெண்ணைப் பார்த்தேன். அவள் அதன் காரணமாக மிகுந்த உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்தாள். அவளுடைய பெற்றோர், உறவினர் மற்றும் நண்பர்கள் அவளுக்கு பிசாசு பிடித்திருந்ததாக நினைத்தார்கள். ஆனால், மருத்துவ சோதனையில், அவளுக்கு கிருமிகளால் பரவும் நோய் தொற்று இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

1970 களில், புதுதில்லியில் எனக்குத் தெரிந்த ஒருவருடைய வீட்டிற்கு ஜெபத்திற்காக அழைக்கப்பட்டிருந்தேன். அந்நபர் என்னிடம், தனக்குப் பேய் பிடித்திருப்பதாகவும், அப்பேய் விரட்டப்பட ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்டார். அப்பொழுது நான் அவருக்கு இந்தக் காரியத்தைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை விளக்கிக்கூறினேன். ஆனாலும் அவர், என்னை ஜெபிக்கும்படியாகத் தொடர்ந்து வற்புறுத்தினபடியால், அவர் பெலனடையும்படியாகவும், ஆரோக்கியமடையும்படியாகவும், அவர் உணவையும், அதைத் தொடர்ந்து மருந்தையும் உட்கொள்ளும்படியாகவும், அவர் அசுத்த ஆவிகள் சம்பந்தமாக சத்தியத்தைப் படித்துத் தெளிவடைய வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்றும் ஜெபித்தேன். இந்த நபரை பிசாசு பிடித்து அலைக்கழிக்க வில்லை. மாறாக, இவரே பிசாசின் கிரியைகளைத் தன் வாழ்வில் பிரவேசிக்க அனுமதித்து, தான் தவறான பாதையில் செல்ல தனக்குத் தானே வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டார்.

என் வாழ்க்கையில், பிசாசுகள் ஓட்டப்பட்ட கதைகள் பல வற்றைக் கேட்டிருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்களிடம் அதைக் குறித்து விசாரிக்கும்போது ஏதோ ஒரு மார்க்கப் பிரிவினை பிரசங் கியார் தான் பிசாசுகளைத் துரத்தியதாகச் சொல்லக் கேட்டேன். மார்க்கப்பிரிவினை பிரசங்கியார்கள் கள்ளப்போதகங்களைப் போதிக்கிறவர்கள் என்பதை அறிந்திருக்கிறேன். என்னுடைய கேள்வி என்னவென்றால், பெயல்செபூலினால் நமதாண்டர் பிசாசு களைத் துரத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டபோது, சாத்தானை சாத்தான் துரத்த முடியுமா? என்று இயேசு ஆண்டவர் கேட்டது நினைவுக்கு வருகிறது. அதாவது சாத்தானை சாத்தான் எப்படித் துரத்த முடியாதோ, அப்படித்தான் மார்க்கப்பிரிவினைக் கூட்டத் தாரும் பிசாசுகளைத் துரத்த முடியாது.

மக்களில் அநேகர் சாத்தான் எப்படிக் கிரியை செய்கிறான் என்பதைப் பற்றிய அறிவில்லாதிருக்கிறார்கள். அதாவது, சாத்தான் சம்பந்தமான போதனைகளைப் பற்றிய தவறான புரிந்து கொள்ளு தல், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்கள், படிப்பறிவில்லாதவர் கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகிறது. இவர்கள் மத சம்பந்த மான காரியங்களிலும், உலகப் பிரகாரமான காரியங்களிலும் மூட நம்பிக்கை என்னும் இருளில் மூழ்கிக் கிடப்பவர்கள். இப்படிப்பட்ட வர்களை சாத்தான் சம்பந்தமான காரியங்களில் தவறாக வழி நடத்துவது மிகவும் சுலபமாகும்.

முதல் நூற்றாண்டில் ஒருவருக்குள் பிசாசு புகுந்து அலைக்கழிப்பது போல் இன்று நடப்பதில்லை. ஆனால், சாத்தானுடைய கிரியைகள் ஒரு மனிதனுக்குள் புகுந்து அதன் நோக்கத்தை நிறைவேற்ற அவர்களைப் பயன்படுத்துவதையும் நம்மல் மறுக்க முடியாது. அதேவேளையில், பிசாசு ஒருவருக்குள் புகுந்து அவரைப் பாடாய்படுத்தி அந்நபர் தன் கட்டுப்பாட்டை இழப்பதற்கும், ஒருவர் தீமையான காரியங்களுக்காகவே தன் வாழ்க்கையில், எண்ணத்தில் விருப்பப்பட்டு வரவேற்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். முதல் நூற்றாண்டில், பிசாசு பிடித்தவர்களை அற்புத அடையாளங்கள் மூலமாகத்தான் துரத்தியடிக்க முடியும். ஆனால், இன்றைய நாட்களில் ஒருவர் சாத்தானை தன்னுடைய வாழ்வில் அனுமதிக்கவும் முடியும், விரட்டியடிக்கவும் முடியும். இது தான் வித்தியாசம்.

இன்றைய நாட்களில் வாழும் நம்முடைய வாழ்க்கையில், நாம் அனுமதிக்கவில்லையென்றால் சாத்தானால் நமக்குள் புகுந்து அலைக்கழிக்க முடியாது. ஒருவேளை, அன்றைக்கு இருந்ததுபோல இன்றைக்கும் சாத்தானால் மனிதனைப் பிடிக்க முடியுமென்று வேதாகமம் போதித்தால் அது உண்மையாகவே பயங்கரமாயிருக்கும். ஒன்றை மட்டும் உறுதிபடத் தெரிந்து கொள்ளுங்கள். இன்று பிசாசுகளைத் துரத்த கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும், அவர்களால் கைகளை வைக்கப்பட்டவர்களும் இன்று இவ்வுலகில் இல்லையே!ஆகையால், நம் இருதயங்களில் நம்மை ஆள்வது கிறிஸ்துவா, சாத்தானா என்பதை நாம்தான் முடிவுசெய்யவேண்டும். மேலும், கிறிஸ்துவும், அவருடைய உபதேசமும் நமக்குள் இருக்கும்வரை, அதாவது கிறிஸ்து நமக்குள்ளும், நாம் கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கும் வரை சாத்தானால் நம்மை நெருங்கவே முடியாது. நெருங்கினால் நொறுங்கிப் போவான் என்பதை விசுவாசித்தால் வீழ்ச்சியில்லை!

## பாடம் - 29

# குற்றங்களை அறிக்கையிடுதல்

## Confession of faults

இவ்வுலகில் ஒருவர் தான் செய்வதற்குக் கடினமான காரியம், நான் பாவம் செய்துவிட்டேன் என்று ஒத்துக்கொள்வது தான். நாம் வேதாகமம் முழுவதும் வாசித்தாலும் கூட, நான் பாவம் செய்தேன் என்று சொல்லுவதற்கு ஒரு சிலருக்குத் தான் தைரியம் இருந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை, மனித இனம் பாவத்தை ஒத்துக்கொள்ளுகிற காரியத்தில் பெரிய அளவில் மாற்றமில்லை. மனிதன் பாவியாக இருக்கிற படியால் எப்போதுமே தன் பாவத்தை நேர்மையாக அறிக்கையிட முடியும். இது கிறிஸ்தவரல்லாதர்களுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவர்களுக்கும் உண்மையாயிருக்கிறது.

ஒருவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவரான பிறகு, அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராயிருக்க வேண்டும். இதன் பொருள், ஒருவர் பாவமே செய்யாமல் பரிபூரணமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதல்ல. மாறாக, ஒருவர் தன்னுடைய அழைப்புக்குத் தன்னால் முடிந்தவரை உண்மையாயிருக்க வேண்டும். இப்படி ஒருவர் செய்வதின் மூலமாக அவர் ஒளியிலே நடக்கிற பிள்ளையாகக் காணப்படுவார். ஆம், இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலுமிருந்தும் அவரைச் சுத்திகரித்திருக்கிறது (Iயோவான் 1:7). ஆனாலும், எல்லோரும் உண்மையாயிருப்பதில்லை. அவர்கள் விழுந்துபோகிறார்கள், மறுபடியும் திரும்புகிறார்கள், திரும்பவும் தவறுகிறார்கள். அதாவது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்துகொண்டே தொடர்ந்து பாவம் செய்கிறபடியால் இழந்துபோகிறார்கள். மேலும், தங்களுடைய மோசமான முன்னுதாரணத்தின் மூலமாகக் கர்த்தருடைய சபைக்கு மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். இக்காரியத்தில் என்ன செய்யப்பட வேண்டும்?

தேவனிடத்தில் முழுமையாகத் திரும்பாதவர்கள், ஆதியில் கொண்டிருந்த அன்பை புதுப்பித்துக் கொள்ளவும், தங்கள் பாவங்களை உணரத்தக்கதாகவும் வேதவசனத்தின்படி

அவர்களிடமிருந்து ஐக்கியத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் (1கொரி.5; மத்.18:15-17). மேலும், தேவனிடத்தில் திரும்பக் கொண்டுவருவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். தவறிழைத்தவர்கள் தேவனிடத்தில் மனந்திரும்புவதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

பாவத்திலிருக்கும் ஒருவர் தான் மீட்கப்பட வழிமுறைகள் உண்டென்று அறிந்துகொள்வது ஓர் அலாதியான அனுபவம். ஆனால், ஒருவர் ஒருமுறை இரட்சிக்கப்பட்டால், அவர் எப்போதுமே இரட்சிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார் என்று வேதாகமம் போதிப்பதில்லை. மேலும், ஒருவர் கிறிஸ்துவை விட்டு விலகிச்சென்றால், அவர் என்றும் இழந்த நிலையிலேயே இருக்கிறார் என்றும் வேதாகமம் போதிப்பதில்லை. *ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராக இருக்கிறார்* என்னும் வசனம், தேவன் மனிதன் பாவஞ்செய்கிறதை ஊக்கப்படுத்துவதில்லை. மாறாக, மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முழுச்சுதந்திரத்தையும் அருளுகிறது. அதாவது, மனிதன் மனந்திரும்பி தேவனிடமாகத் திரும்புவதற்கு தேவன் அதிகமான வாய்ப்புகளைக் கொடுக்கிறார். இது உண்மையாயிருக்கிறபடியால், ஒருவர் தேவனுடைய நீடிய பொறுமைக்காகவும், கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் அவருக்கு முன்பாக எப்போதும் நன்றியுடையவராக இருக்க வேண்டும். ஆம், லூக்கா 15- ல் இடம் பெற்றுள்ள கெட்ட குமாரன் சம்பவத்தை வாசித்துப் பாருங்கள்.

நிச்சயமாகவே, கர்த்தர், நாம் யாரும் பாவத்திற்குச் திரும்பிச் செல்வதை விரும்புவதில்லை. ஒருவேளை, அப்படியொருவர் சென்றால் மறுபடியும் திரும்புவது கடினமான காரியமாகும். எனவே, ஒருவர் பின்மாற்றமடைந்தால், தவறு செய்தால், பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தால் அவர் தேவனிடத்திலிருந்து விழுந்துவிட்டார் என்றுதான் பொருள். அவர் தொடர்ந்து அப்படியே இருந்தால் இழந்துபோன நிலையிலேயே இருப்பார்.

ஒருவர் கர்த்தரிடத்தில் உள்ள பாதுகாப்பிற்குத் திரும்ப வேண்டுமென்றால், அவர் சில காரியங்களைச் செய்ய வேண்டும்.

முதலாவது, ஒருவர் தன்னுடைய பாவத்திலிருந்து உண்மையாக மனந்திரும்ப வேண்டும். இது சம்பந்தமாக நமக்கு கெட்ட குமாரன் வாழ்க்கை முன் உதாரணமாக உள்ளது. மாத்திரமல்ல, முதலில் தேவனுக்குக் கீழ்ப்படிந்து விட்டு, பின்பு தேவனுடைய வரத்தைப் பணத்தினால் வாங்க முயற்சித்துப் பாவஞ்செய்த மாய வித்தைக்காரனாகிய சீமோனுடைய வாழ்க்கையும் உண்டு. *பேதுரு அவனை நோக்கி, தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக் காட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்; நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள் என்றான்.* (அப்.8:20-24). இந்த வசனப்பகுதியில், நாம் தேவனிடத்தில் திரும்ப வேண்டுமென்றால், பாவங்கள் அனைத்தையும் விட்டு விட்டுத்தான் திரும்ப வேண்டுமென்று காண்கிறோம்.

அடுத்ததாக, ஒருவன் தன்னுடைய குற்றங்களை அறிக்கையிட வேண்டும். *யாக்கோபு ஆசிரியர், நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்* (யாக்.5:16) என்று சொல்லியிருக்கிறார். ஆம். ஒருவர் தன் பாவங்களை ஒத்துக்கொள்ளவும், அறிக்கையிடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும். அதாவது, ஒருவர் தன்னுடைய ஒவ்வொரு பாவத்தையும் பட்டியலிட வேண்டுமென்றில்லை. ஒரு குறிப்பிட்ட நபர் என்ன பாவம் செய்தார் என்பது அவருக்குத் தெரியும். அதேபோல், யாரிடத்தில் இவர் அறிக்கையிடுகிறாரோ அவருக்கும் இவரைப் பற்றித் தெரியும். எனவே, பாவம் செய்தவர், நான் இன்று பாவம் செய்துவிட்டேன். ஆகையால், எனக்கு மன்னிப்புத் தேவை என்று சொன்னால் அதுவே போதுமானது. பொதுவாக நாம் பார்க்கும்போது, ஒருவர் பாவம் செய்திருக்க வேண்டும் அல்லது செய்யாமலிருக்க வேண்டும். இந்த, இரண்டில் ஒன்றுதான் சரி. இடையில் ஒன்றுமில்லை. இங்கே ஒருவர் தன்னுடைய பாவங்களை அறிக்கையிடும்போது அதை நேர்மையாகச் செய்ய வேண்டும்.

நிறைவாக, ஒருவர் தேவனுடைய மன்னிப்பைப் பெற ஜெபம் ஏறெடுக்க வேண்டும். இதை நாம் மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய சம்பவத்திலும், யாக்.5:16 - ம், வசனத்திலும் காண முடியும். இப்படிச் செய்வதன் மூலமாக, தவறிழைக்கும் ஒரு கிறிஸ்தவன் திரும்பவும் ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் என்ற மேலான நிலைக்குத் திரும்ப முடியும். இதற்குப் பின்பு அவர் சபையால் மன்னிக்கப்பட்டு முழு ஐக்கியத்தாலும் ஏற்றுக் கொள்ளத்தகுதியுடைய நபராக மாற்றப்படுகிறார்.

இப்போது, ஒருவர் செய்யும் பாவம் எவ்வளவு வெளிப் படையானது என்பதை நாம் கவனிப்போம். ஒருவர் செய்யும் பாவம், அவருக்கும் தேவனுக்கும் மாத்திரம் தெரிந்திருக்கும் பட்சத்தில் அவர் தேவனோடு ஒப்புரவானால் அதுவே போது மானது. இந்தக் காரியத்தில் வேறு யாரும் இடைப்பட வேண்டிய அவசியமிருக்காது. அடுத்து, ஒருவர் தன்னுடைய சகோதரனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தால், பாவம் செய்தவர், பாதிக்கப் பட்டவர், தேவன் இவர்களுக்கிடையே இப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டியதில்லை. முடிவாக, ஒருவர், வெளிப்படையாக எல்லோருக்கும் முன்பாகப் பாவஞ்செய்தால், அது சபைக்கு முன்பாக எடுத்துச் செல்லப் படுகிறது. பாவஞ்செய்தவர் சபையார் எல்லோரும் அறியதக்க வகையில் தன் பாவத்தை எல்லோருக்கு முன்பாகவும் அறிக்கை யிட்டு தன் தவறைத் திருத்திக்கொள்கிறார். அதாவது, தான் செய்த பாவம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடியால், பாவஞ் செய்த நபர் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டும்.

நீங்கள் பாவம் செய்கிற கிறிஸ்தவராக இருந்தால், உங்களுக்கு வாய்ப்பு இருக்கும்போதே கர்த்தரிடத்தில் திரும்புவீர்களா? ஏனென்றால், உங்களுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாவின் நலன் கருதியும், பரிசுத்தமான சபையின் நலன் கருதியும் நீங்கள் இதைச் செய்யவேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாக, தேவன் நீங்கள் மனந்திரும்பும்படியாக அழைத்து மன்றாடுகிறார்.

## பாடம் - 30

# கிறிஸ்தவம் ஓர் அந்நிய மார்க்கமா?

## Is Christianity a Foreign Religion?

கிறிஸ்தவம் ஓர் அந்நிய மதம் என்றும், அது மேற்கத்திய மதம் என்றும் சொல்வதை நாம் கேள்விப்படுகிறோம். இன்னும் சிலர் இது ஒரு வெள்ளைக்கார மதமென்றும் சொல்லக் கேட்கிறோம். நிச்சயமாகவே இப்படிச் சொல்லுகிறவர்கள் எல்லாருமே கிறிஸ்துவின் பகைஞர் தான். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்தவம் எங்கேயிருந்து வந்ததென்பது குறித்தும், அது யாருக்கானது என்பது குறித்தும் அறிவில்லாதிருக்கிறார்கள். இவர்கள் இவ்விதமான பிரசாரத்தின் மூலம் உணர்வுகளைத் தூண்டி கிறிஸ்தவத்திற்கு எதிராகத் தவறான அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் பரப்பி விடுகிறார்கள்.

இந்தக் காரியங்களைக் குறித்து, உண்மையை அறிந்தவர்கள், கிறிஸ்து எருசலேம் அருகில் உள்ள பெத்லகேமில் பிறந்தவர் என்பதை அறிவார்கள். பெத்லகேம் மத்திய கிழக்கு நாடுகள் ஒன்றில் இருக்கிறது (மத்தேயு 1,2). கிறிஸ்துவின் போதனைகள், அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், பின்பு எருசலேமில் சுவிசேஷப் பிரசங்கம். அதன் விளைவாக ஏறக்குறைய மூவாயிரம்பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சபை ஸ்தாபிக்கப்பட்ட முதல் நாளிலேயே சபையிலே கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். அந்நாளிலிருந்து கிறிஸ்துவின் மார்க்கமாகிய கிறிஸ்தவம் உலகெங்கிலும் பரவத் தொடங்கியது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகக் கிறிஸ்தவம், அதன் போதனை மற்றும் நற்கிரியைகள் மூலமாகத்தான் உலகெங்கும் அறியப்பட்டு ஏற்றுக் கொள்ளபட்டிருக்கிறது.

கிறிஸ்தவம் ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட பகுதியையோ அல்லது ஒரு குறிப்பிட்ட மக்களையோ சார்ந்ததாக இருக்கவில்லை. இம்மார்க்கம் அனைத்து மக்களுக்காகவும் அக்கறைப்படும் மார்க்கமாக இருப்பதால் இது எல்லோருக்குமானது.

கிறிஸ்தவம் உலகின் மேற்கத்திய நாடுகளில் ஏன் பிரதானமாகத் திகழ்கிறது என்றால், அங்கே ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு விசுவாசித்து கீழ்ப்படிந்ததின் காரணமாகக் கிறிஸ்தவரானார்கள். ஆனாலும், மேற்கத்திய நாடுகளில்

புதிய ஏற்பாட்டில் நாம் காணும் தூய கிறிஸ்தவத்தைக் காண முடியாது. இங்கே கிறிஸ்தவம் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து விட்டது. இதற்குக் காரணம் கிறிஸ்துவின் உபதேசம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மனித உபதேசங்கள் பின்பற்றப்பட்டது தான். இதன் விளைவாக, வித்தியாசமான பெயர்களைக் கொண்ட சபைப் பிரிவுகள் தோன்றியது. இது தேவனுக்கு எவ்விதத்திலும் பிரியமா னதல்ல (ரோமர் 10:17,18). அவர் விரும்புவதெல்லாம் எல்லோரும் அவருடைய சித்தத்தை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர் களாக வாழ்வது தான் (I பேதுரு 4:16). மேற்கத்திய நாடுகளில் சிலர் அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களாக வாழ முயற்சித்துக் கொண்டி

கிறிஸ்தவம் ஆசியாவிலோ, ஆப்பிரிக்காவிலோ அல்லது ஏதாவதொரு தீவுகளில் தோன்றியிருந்தாலும் சரி, அது மேற்கத்திய நாடுகளில் அதிகமாக இருப்பதற்கான காரணம், இப்பகுதி வாழ் மக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றுவதற்கும், தங்களைச் சீர் படுத்தி அடுத்த வாழ்க்கைக்கு ஆயத்தமாவதற்கும் கிறிஸ்தவம் தான் தலைசிறந்தது என்று எண்ணிக் ஏற்றுக்கொண்டதுதான்.

கிறிஸ்தவம் மத்திய கிழக்கு நாடுகளில் தோன்றின படியால், அப்பகுதியிலிருந்தவர்கள் கிறிஸ்தவத்தை மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள். காலப்போக்கில் கிழக்கிலுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திலிருந்து விழுந்துபோன படியால், மேற்கத்திய விசுவாசிகள், கிறிஸ்தவத்தை கிழக்கத்திய நாடுகளுக்கு மீண்டும் கொண்டு வந்தார்கள். அதாவது, சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அதைக் கேள்விப்படாத வர்களிடத்தில் கொண்டு சென்றார்கள். காரியங்கள் எப்போதுமே இப்படித்தான் தொன்றுதொட்டு நடந்து கொண்டிருக்கிறது. இந்த நடைமுறை உலகம் உள்ளவரை வளர்ந்து கொண்டே தான் இருக்கும்.

நம் கர்த்தர் எல்லா ஜனங்களுக்கும், எவ்விடத்தி லுள்ளவர் களுக்கும் கிறிஸ்தவராகும்படியான வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்று இரட்சிப்பின் திட்டத்தை வடிவமைத்தார். அத னால் தான், அவர் அப்போஸ்தலர்களிடம் இவ்விதமாகக் கட்டளை யிட்டார். *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்க ளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல*

*நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்* [மத்தேயு 28:19,20]. மறுபடியும் கிறிஸ்து இவ்விதமாகச் சொன்னார். *பின்பு, அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று* (மாற்கு 16:15,16). ஆம், உலகம் உள்ளவரை கிறிஸ்தவம் எல்லா ஜனங்களுக்குமானதாகத்தான் இருக்கும். இச்செய்தி உலகம் முழுவதும் போதிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். சத்தியத்தைப் பகிர்வது என்பது சத்தியத்தை அறிந்த எல்லோர் மீதும் விழுந்த கடமையாயிருக்கிறது.

இன்றைய நாட்களில் புதிய ஏற்பாடு புத்தக வடிவத்தில் நம் கைகளில் தவழ்கிறது. கிறிஸ்து தாமே அதிலுள்ள வசனங்களை *விதை* என்று விவரிக்கிறார் (லூக்கா 8:11). இந்த விதையானது பிரசங்கத்தின் வாயிலாக விதைக்கப்படுகிறது. அதை ஏற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறவர்கள் கிறிஸ்தவர்களாக மாறுகிறார்கள். ஜனங்களுடைய கையில் வேதாகமம் இருக்கிறபடியால், அதை அவர்களாகவே வாசித்து அதின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்படத்தக்கதாகத் தெளிவாக இருக்கிறது. மாறாக, மக்கள் மீது திணிக்கப்படும் மதம் மதிப்பற்றதும், வீணானதுமாயிருக்கிறது. ஒருவருக்கு மதசம்பந்தமாக எப்படி இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கும் உரிமை இல்லையென்றால் அவருக்கு சுதந்திரமே இல்லை என்று தான் பொருள். இதினிமித்தம் ஒருவர் கிறிஸ்தவத்தை, ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் அவருடைய விருப்பமாயிருக்கிறது. ஆகவே, ஒருவர் கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள, விரும்பினால், அவர் அப்படிச் செய்ய இச்சமூகம் அனுமதிக்க வேண்டும். அது தான் உண்மையான சுதந்திரம்.

தூய கிறிஸ்தவத்திற்கு பூமியில் தலைவரும் கிடையாது, தலைமையகமும் கிடையாது. கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். *அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த, முதற்பேறுமானவர். எல்லாவற்றையும் அவருடை பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்* (கொலோ. 1:18; எபே.1:22,23). அவர் பரலோகிலிருந்து நித்தியத்தை *அருளுகிறார்*. தேவன்

*தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் பேகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* (யோவான் 3:16).

*தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்* (II பேதுரு 3:9). *அப்போஸ்தலனாகிய பவுலும், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்* என்று சொல்லுகிறார் (II தீமோ. 2:4). இதினிமித்தம்தான் கிறிஸ்தவத்திற்கு உலகளாவிய ஈர்ப்பு இருக்கிறது. காரணம் கிறிஸ்தவம் தான் தனிமனிதனின் ஆன்மீகத் தேவைகளை அலசி ஆராய்ந்து அதைச் சந்திக்கிறது.

இவ்வுலகில் யாரும் கிறிஸ்தவத்தை தங்களுக்கு மட்டும் தான் என்றோ, கிறிஸ்தவம் ஒரு மேற்கத்திய மதம் என்றோ, கிழக் கத்திய மதம் என்றோ சொல்ல முடியாது. ஏனென்றால், இது எல்லா ஜனங்களுக்குமான உலகளாவிய ஒன்றாக விளங்குகிறது. ஆகையால், கிறிஸ்தவத்தை ஒரு தேசத்திற்குரியதாகவும், தங்கள் தேவைகளைச் சந்திக்கிற தனிப்பட்ட ஒன்றாகவும் கருத முடியாது. ஆம், கிறிஸ்தவம், அதை எடுத்துச் செல்லும் பொறுப்பை எல்லோருக்கும் கொடுத்திருக்கிறது.

கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்து நீங்கள் பயப்படவும் வேண்டாம், அதை எதிர்க்கவும் வேண்டாம். அது உங்களையோ, உங்கள் தேசத்தையோ அல்லது ஒரு நபரையோ எவ்விதத்திலும் காயப்படுத்துவது இல்லை. கிறிஸ்துவத்திற்கு அரசியலிலோ, அதி காரத்திலோ, அடக்கு முறையிலோ எந்த விருப்பமுமில்லை. கிறிஸ்தவத்தை யார் சுமந்து வருகிறார்களோ அவர்களை வைத்து தீர்ப்பைச் செய்யவேண்டாம். மாறாக, அதன் போதனைகளைக் கொண்டு தீர்ப்புச் செய்யுங்கள். தீர்ப்புச் செய்வதற்கு முன்பாக அது எதைப் பற்றியது என்பதைக் காண்பதற்காக புதிய ஏற்பாட்டின் பக் கங்களிலே அதைப் படியுங்கள். அப்படிச் செய்தால், நிச்சய மாகவே நீங்கள் கிறிஸ்தவராக மட்டுமே வாழ விரும்புவீர்கள்.

## பாடம் - 31

# நற்செய்தியின் வல்லமை

# The Power of The Gospel

அப்போஸ்தலன் பவுலடியார் ரோமாபுரியாருக்கு இவ்விதம் எழுதினார். *கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்த சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது* (ரோமர் 1:16,17). வேதாகமத்தின் இந்த இரண்டு வசனங்கள் குறித்து நிறைய சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் என்னவென்று கவனித்து என்ன பொருள் தருகிறதென்று பார்ப்போம்.

நற்செய்தி என்றால் என்ன? அது எதுவாக இருந்தாலும், பவுலடியார் நான் அதைக்குறித்து வெட்கப்படேன் என்று கூறுகிறார். அதற்குக் காரணம், அது இரட்சிப்புக்குத் தேவபெலனாயிருக்கிறது. அதாவது, இரட்சிக்கும் வல்லமையை நற்செய்தி கொண்டுள்ளது. அதுமாத்திரமல்ல, தேவ நீதியானது ஆரம்ப முதல் இறுதி வரை என்னவென்று நம்மால் கண்டுபிடிக்கத்தக்க அளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தி என்பது என்னவென்று நம்மால் கண்டுபிடிக்க முடிந்தால், அதில் தேவ வல்லமை எங்கே இருக்கிறதென்பதைத் தீர்மானிக்க முடியும்.

I கொரிந்தியர் 15:1-4-ல், பவுலடியார் இவ்விதம் சொல்லியுள்ளார். *அன்றியும் சகோதரரே, நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைதிருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்* என்று. இதன்

உயிர்த்தெழுதல் என்று இங்கே பவுல் கூறுகிறார். கொரிந்தியர் களிடத்தில் நான் அதைப் பெற்றுக் கொண்டேன் என்றும், அதை அவர்களுக்குப் பிரசங்கித்தேன் என்றும், அதைப் பெற்றுக் கொண் டவர்கள் இரட்சிப்படைந்தார்கள் என்றும் சொன்னார்.

இங்கே கேள்வியென்னவெனில், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஒருவனை எப்படி இரட்சிக்க முடியும்? என்பது. இதையே வேறுவிதமாகச் சொல்லவேண்டுமா னால், நற்செய்தியின் வல்லமையினாலே நாம் இரட்சிக்கப்ப டும்படியாய் இதன் உண்மைகளை நம் வாழ்வில் எப்படிச் சம்பந்தப்படுத்துவது. *முதலாவது* நாம் விசுவாசிப்பதற்கான உண் மைகள் இவை என்பதை உணர வேண்டும். *இரண்டாவது,* அதே அப்போஸ்தலன் பவுலடியார், ரோமபுரியார் அந்த உபதேசக் கோட் பாடுகளுக்குக் கீழப்படிந்தார்கள் என்று பேசுவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ரோமர் 6-ம் அதிகாரத்தின் முதல் பாகத்தில், அவர்கள் பாவத்திற்கு எப்படி மரித்தார்கள் என்றும் , தண்ணீர் ஞானஸ் நானத்தில் எப்படி அடக்கம் பண்ணப்பட்டார்கள் என்றும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்ட நிலையிலிருந்து வெளியே வந்தார்கள் என்றும் காட்டுகிறார். அதாவது, கிறிஸ்து மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார், பிறகு உயிர்த்தெழுந்தார். தங்கள் கீழ்ப்படிதல் மூலமாக ரோமாபுரியார் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர் தெழுதலை அடையாளப்படுத்துகிறார்கள். *மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற் குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர் களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங் கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்* (ரோமர் 6:17,18). இப்பொழுது கவனமாகக் கவனியுங்கள். அவர் கள் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தார்கள். இப்பொழுது நீதிக்கு அடிமைகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தது எது? தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட் டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே இது சாத்திய மாயிற்று. அவர்கள் கீழப்படிந்த உபதேசம் மட்டும் இதற்குக் காரண

மாயிராமல், உபதேசச்சட்டம் காரணமாயிருந்துள்ளது. அங்கே *உபதேசம்* விசுவாசிக்கும்படியான உண்மைகளாயிருந்தது. இதைத் தாண்டி அவர்கள் அந்த உபதேச சட்டத்திற்குத் தங்களைக் கீழ்ப் படுத்தினார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதலிலே அந்த *உபதேச மானது* ஏதோ ஒரு வகையில் வெளிப்படுகிறது. இது அவர்கள் கீழ்ப்படியும்படியான ஒரு செயல். நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மரித்தார்கள். தண்ணீருக் குள் அடக்கம் பண்ணப்பட்டார்கள் - ஞானஸ்நானம் - பிறகு புதிய ஜீவனுக்காகத் தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள். இதன் மூலம், தங்கள் கீழ்ப்படிதலினாலே கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலை அடையாளப்பூர்வமாகக் காட்டியிருக்கிறார்கள்.

பவுலடியார், தேவனை அறியாதவர்களுக்கும், கிறிஸ்து வின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு (II தெச.1:7-9) கிறிஸ்து மீண்டும் வருகிறார் என்று கூறுகிறார். பேதுரு ஆசிரியரும், நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங் காலமா யிருக்கிறது முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமா யிருக்கும்? ( I பேதுரு 4:17). நற்செய்தியானது உண்மைகளை மாத்திரம் கொண்டிராமல், கட்டளைகளையும் கொண்டுள்ளது. கிறிஸ்து தாமே இவ்விதம் சொல்லியுள்ளார். *பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே*

பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தெ கொஸ்தே நாளில் நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள். நற்செய்தி யின் உண்மைகள் பிரசங்கத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட பிறகு, கேட்டவர்களுடைய இருதயத்தில் விசுவாசம் ஏற்பட்ட பிறகு, அவர்கள் இப்படியாகக் கேட்டார்கள். *இதை அவர்கள் கேட்ட பொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந் திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு*

*கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்* (அப். 2:37,38). அதன் விளைவாக சுமார் *3000* பேர் நற்செய்திக்குக் கீழ்ப் படிந்தவர்களாகி அன்றைய தினம் சபையிலே சேர்த்துக்கொள்ளப் புட்டார்கள் (அப்.2:41,47).

பவுலடியார் சுவிசேஷத்தை நற்செய்தி என்று பொருள் படுத்தினார் (ரோமர் 10:15). சுவிசேஷம் என்றால் என்ன என்று அறியும்போது சுவிசேஷம் என்ன செய்யும் என்பதைத் தெரியும் போது, அது ஏன் நற்செய்தி என்றழைக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இச்செய்தியானது உலகமனைத்திற்கு மானது என்பது உறுதி செய்யப்பட்டபடியால், கர்த்தர், இது வானத்தின் கீழிலிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று கட்டளையிட்டார் (மாற்கு 16:15; மத். 28:18).

ஆக, விசுவாசிக்கிற ஒவ்வொவரும் இரட்சிக்கப்படும்படி யாய் சுவிசேஷமானது தேவ பெலனாயிருக்கிறது. இழந்துபோன வர்களை இரட்சிப்பதற்குத் தேவன் நற்செய்தியின் மூலம் கிரியை நடப்பிக்கிறார்.

இதற்கு இணையானது எதுவுமில்லை. ஒருவன் தன் விருப்பம் போல இரட்சிக்கப்படும்படியாய் எதற்கு வேண்டு மானாலும் முயற்சிக்கலாம். ஆயினும், தன் ஆத்தும இரட்சிப்புக்கு கிறிஸ்துவின் சுவிசேஷம் போன்று வல்லமையுடையதைக் கண்டு பிடிக்க முடியாது.

இங்கே இதை நினைவில் கொள்ள வேண்டும் வல்லமை அங்கே இருந்தாலும், தேவனிடமிருந்து வந்த செய்தியில் அது அடங்கியிருந்தாலும், ஓர் ஆத்துமாவிலே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு, கேட்பவர் அதை விசுவாசித்து அதன் கட்டளைகளுக் குக் கீழ்ப்படிய வேண்டும். அப்பொழுது தான் சுவிசேஷத்தின் வல் லமை ஒருவனுடைய ஆத்துமாவுக்கு வந்து சேர்ந்து இரட்சிப்பை நடப்பித்து நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுத் தரும்.

ஆம், தேவ வல்லமை நற்செய்தியில் தான் இருக்கிறது. உலக மனைத்திலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விட வல்லமை வேறெதற்கும் இல்லை. இல்லவே இல்லை. +

## பாடம் - 32

# அற்புதங்கள் எங்கே?

## Where Are The Miracles?

ஒரு சில வாரங்களுக்கு முன்பு, ஒரு வானொலியில் பிரசங்கியார் ஒரு கூட்டத்திற்கான விளம்பரம் செய்தார். அந்த விளம்பரம் இப்படியாக இருந்தது. சம்பந்தப்பட்ட ஊழியர் தேவனால் அபிஷேகம் பெற்றவராக இருப்பதால், அற்புத சுகமளிக்கும் கூட்டம் நடத்தப் போகிறார் என்று. அச்சமயத்தில் நான் அப்பகுதியில் இருந்தேன். அற்புதங்கள் அக்கூட்டத்தில் நடத்தப்பட்டதாகச் செய்தி எதுவுமே வரவில்லை. அவர் சொன்னபடி அற்புதம் செய்ததாக யாரும் அங்கு பேசவில்லை. செய்தித்தாளில் இது சம்பந்தமாக எந்தச் செய்தியும் வரவில்லை. அக்கூட்டம் பற்றி ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. அந்த விளம்பரம் பற்றி நான் கேள்விப்படவில்லயென்றால், அப்படி ஒரு கூட்டம் நடந்ததாகவே தெரிந்திருக்காது. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல ஒரு அற்புதம் நடந்திருந்தால் அந்தப் பட்டணம் முழுவதும் அந்தப் பேச்சாகவே இருந் திருக்காதா? ஆனால், அப்படி எதுவும் இல்லை. இதிலிருந்து எந்த ஒரு அற்புதமும் அக்கூட்டத்தில் நடக்கவில்லையென்பது வெளி படையாகவே தெரிகிறது.

பிறகு இந்த அற்புத சுகமளிக்கும் கூட்டம் பற்றிய சுவ ரொட்டிகளைப் பட்டணத்தின் பல இடங்களில் பார்த்தேன். அப் பொழுது இக்கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. ஆயினும், பட்டணத்தார் ஒருவரும் இதைப்பற்றி பேசவில்லை. அவர்கள் சொன்னதுபோல ஏதாவது அற்புதம் நடந்திருந்தால், கண்டிப்பாக பலபேர் அதுபற்றி பேசியிருப்பார்கள். எந்தவொரு அற்புதமும் அக் கூட்டத்தில் நடைபெறவில்லையென்ற முடிவுக்கு நாம் இதன் மூலம் கண்டிப்பாக வர முடியும்.

ஒரு சமயம் இப்படிப்பட்ட கூட்டங்களை ஏற்பாடு செய்யும் பெந்தெகொஸ்தே சபைப் பிரிவார் மற்றும் அசெம்ளீஸ் ஆப்காட் சபைப் பிரிவினரைப் பற்றி பேச்சு வந்தது. அப் பேச்சினூடே இப்படிப்பட்ட கூட்டங்களுக்கு வரும் மக்கள் ஒரு அற்புதத்தை எதிர்பார்த்து வரவேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட கூட்டத்தாரால் வசீகரிக்கப்பட்ட ஒரு பெண்ணிடம்

பேசியபோது, *பாஸ்டர் பால்* அவர்களுக்கு கர்த்தர் தரிசனமாகி ஒற்றுமைக்கான ஒரு திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார் என்று சொன்னார். இதே பெண், எனக்கு நன்கு தெரிந்த பெந்தெகொஸ்தே பாஸ்டர் பெயரைச் சொல்லி கர்த்தர் அந்தப் பாஸ்டர் மூலமாகக் கிரியை நடப்பித்துக் கொண்டுள்ளார் என்றும் சொன்னார். அந்தப் பாஸ்டர் ஒருமுறை என்னைத் தொடர்பு கொண்டு, பெந்தெகாஸ்தே பிரிவிலிருந்து விலகி உண்மைச் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, கர்த்தராலே அவருடைய சபையிலே சேர்க்கப்பட ஆசையாயிருக்கிறேன் என்றார். சொன்னது போல், கீழ்ப்படியவும் செய்தார். ஆனால், அவருக்கு நாங்கள் மாதாந்திர சம்பளம் கொடுக்க முன் வராததால் ஆர்வம் இழந்து மீண்டும் பெந்தெகொஸ்தே கூட்டத்திற்குத் திரும்பிவிட்டார். அவர், அக்கூட்டத்தாருக்கு மத்தியில் நற்பெயரோடு இருந்தபடியால், அவர் உண்மையாகவே ஒரு தேவ மனிதர் என்றும், அற்புதங்களை நடப்பிக்கக் கூடியவர் என்றும் எண்ணியிருந்தனர். பணத்துக்காக ஆசைப்பட்டவர் எப்படி தேவ மனிதர் என்றழைக்கப்படத் தகுதியானவராக இருக்க முடியும்? கேலிக்கூத்தாக உள்ளது.

மனிதர்கள் ஆவிக்குரிய ரீதியில் வஞ்சிக்கப்பட்டு, பொய் உபதேசங்களுக்குள்ளாக வழிநடத்தப்படுவது எவ்வளவு சுலபமாயிருக்கிறது பாருங்கள்! அநேகர், தவறாக வழிநடத்தப்படுவது மாத்திரமல்ல, வஞ்சிக்கப்படவும் விருப்பம் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, இத்தலைப்பு பற்றி, வேதாகமம் என்ன சொல்லுகிறதென்பதைக் கவனமாகக் கவனியுங்கள்.

கிறிஸ்துவின் காலத்திலும் அப்போஸ்தலர்கள் காலத்திலும் காரியங்கள் எப்படி வித்தியாசமாக இருந்ததென்பது சுவாரசியமாக உள்ளது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் அற்புதம் செய்தார்கள். ஆனால், அதுபற்றி எந்த விளம்பரமும் செய்யவில்லை. கூட்டத்தைக் கவருவதற்கான எந்த யுக்தியையும் மேற்கொள்ளவில்லை. அற்புதங்கள் நடக்கப் போகிறதென்று யாரையும் கூவி அழைக்கவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் தாங்கள் செய்த அற்புதங்கள் மூலம் பிரபலமடைவதற்கோ அல்லது பிணியாளிகளைச் சுகமாக்கவோ கூட செய்யவில்லை. ஜனங்கள் பரிபூரண சுகத்தோடிருப்பதற்குத் தகுதியானவர்களாக இருக்கிறபடியால், தங்கள் விசுவாசத்தின் மூலம் அதை அவர்கள் பெற்றுக் கொள்ளட்டும் என்றும் பிரசங்கிக்கவில்லை. மாறாக, அவர்கள் அவிசுவாசிகளிடத்தில் தங்கள் காரியங்களை நடத்தினபடியால்,

அவர்களை விசுவாசமுள்ளவர்களாக மாற்றும்படியாகவும், அவர்கள் பிரசங்கிக்கும் செய்தியானது தேவனிடத்திலிருந்து வந்த தென்பதை உறுதிபண்ணும்படியும் சில அற்புதங்கள் அவர்கள் மூலம் நடப்பிக்கப்பட்டன.

அப்போஸ்தலர் சம்பந்தமாக நாம் இவ்விதம் வாசிக்கிறோம். *அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்* (மாற்கு 16:20). எபிரெயர் ஆசிரியரும், *ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாகச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத் தக்கதாக அவருடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர் களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம் முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போ மானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்* (எபி.2:1-4) என்று சொல்லுகிறார்.

அக்கால கட்டத்தில் புதிய ஏற்பாடு இன்னும் கொடுக் கப்படவில்லை. அற்புதங்களும், அடையாளங்களும், பலத்த செய்கைகளும், அப்போஸ்தலர்களின் செய்தியை உறுதிப்படுத் தும்படியாக நடத்தப்பட்டன. அல்லது அப்போஸ்தலர்கள் பேசின வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகள் தான் என்பதை உறுதி செய்தன.

ஆனால், இன்றைக்கு நிலைமை எப்படி? புதிய ஏற்பாடு பூரணமான நிலையில் நம்மிடம் இப்பொழுது உள்ளது. புதிய ஏற் பாட்டு வார்த்தைகள் உறுதிசெய்யப்பட்டாயிற்றா? நிச்சயமாக. ஆகையால், இப்பெழுது அற்புதங்களுக்கான தேவை இல்லை. தேவன் இன்று யாருக்கும் காட்சி தருவதுமில்லை மற்றும் எழுதிக் கொடுக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுவிட்ட புதிய ஏற்பாட்டு வார்த்தைகளைத் தாண்டி யாரிடத்திலும் பேசுவதுமில்லை.

அவருடைய புத்தகத்தைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அது தேவனுடைய செய்திதான் என்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டா யிற்று. ஆகையால், இன்று அந்த வார்த்தைகள் மூலமாக நம்மிடம் பேசுகிறார்.

ஒருவேளை, இந்நாட்களில் தேவன் நம்மெல்லாரிடத்திலும் பேசாமல், தன்னிச்சையான முறையில் நேரிடையாக ஒருவரிடத்தில் பேசி, ஒருவர் மூலமாக அற்புதங்கள் நடத்தினால், அது தேவனிடத்தில் பட்சபாதம் உண்டு என்று பொருள்படுவ தோடு வேதவசனங்களுக்கு முரண்பாடாகவும் இருக்கும். *அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய் கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்* என்றார் ( அப்.10:34, 35).

தேவன் இன்று அவருடைய குமாரன் மூலமாகப் பேசுகிறார். *பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசி கள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்* (எபி.1:1,2). *அவன் பேசுகையில், இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று* ( மத்.17:5). அத்தோடு, இயேசு என்ன போதித்தாரோ, என்ன நடப்பித்தாரோ அவைகள் நாம் வாசித்தறி யும்படியாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் எந்த நற்கிரி யையையும் நடப்பிப்பிப்பதற்குப் போதுமானது (2 தீமோ. 3:16,17; 2; பேதுரு 1:3; யாக்.1:25). அவைகள் சொல்லும் சத்தி யத்தை அறியும்படியாகவும், விசுவாசிக்கும்படியாகவும் அதை வா சித்துப் படிக்க வேண்டும் (2தீமோ.2:15; யோவான்: 17:17; ரோ மர்: 10:17) . எந்த வகையிலும் இவைகளில் மாற்றம் செய்யப்ப டக்கூடாது (வெளி.22:18, ஆகையால், இன்றைக்கு அற்புதம் செய்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் ஏமாற்றுக்காரர் களாக இருக் கிறார்கள். ஏனெனில், இன்னும், உறுதி செய்யப்படும் படியாய் வேறு எந்தப் புதிய செய்தியையும் அவர்கள் தேவனிடமிருந்து பெறவில்லை.

அதுபோலவே, தேவனுடைய வார்த்தைகளுக்கு அப்பால் தேவன் தங்களிடம் பேசினதாக யாராவது சொன்னால், நான் ஏற்கனவே முன்னுரையில் ஒற்றுமை குறித்து தேவன் என்னிடம் பேசினார் என்று சொன்ன பாஸ்டர் பால் போன்று இவர்களும் ஏமாற்றுப் பேர்வழிகளே! ஒற்றுமைக்காக இயேசு ஏற்கனவே ஜெபித்துள்ளார். அப்போஸ்தலர் காலந்தொட்டுப் புதிய ஏற்பாடு ஒற்றுமைக்கான திட்டத்தைப் புதிய ஏற்பாடு தன்னகத்தே கொண்டுள்ளது (யோவான் 17;எபே.4:1-6). அப்படியிருக்கும்போது தேவன் ஏன் இந்த மனிதனிடத்தில் தனியாகப் பேசி, அப்படியொரு சிறப்புத் திட்டத்தை வித்தியாசமான முறையில் கொடுக்க வேண்டும்?

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறியலாம் என்றும் வேதவசனங்கள் கூறுகிறது (மத்.7:16). இந்த பாஸ்டர் பால் வெறுமனே ஒரு பிரசங்கி தானேயொழிய, வேத வசன தகுதியினடிப்படையில் ஒரு பாஸ்டர் என்பவர் சபை மூப்பர் அல்ல (Iதீமோ.3:1-7) வேதாகமம் சொல்லும் ஒரே சபைக்கு எதிராகத் தன்னை பெந்தெகொஸ்தே பாஸ்டர் என்று அழைத்துக்கொண்டு ஒற்றுமையைப் பற்றி பேசுகிறார். இந்த மனிதர் கர்த்தர் தன்னிடம் நேரிடையாகப் பேசினார் என்று போதிப்பதன் மூலம், தேவன் பட்சபாதமுள்ளவர் என்று சொல்லுவதோடு வேதாகமம் முழுமை பெற்ற ஒன்றல்ல என்றும் கூறுகிறார். இவைகளெல்லாம் இவர் கள்ளப் போதகர் என்று அடையாளப்படுத்துகிறது.

தேவ ஆவியினால் அருளப்பட்ட வேத வசனங்கள் சொல்லுவதைக் கவனியுங்கள். *அன்றியும் சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையுங் குறித்து. நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது வார்த்தையினாலாவது எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவின் நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும்,*

தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான். நான் உங்களிடத்தி லிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபக மில்லையா? அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப் பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கி றீர்களே. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது, ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படு முன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படு வான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய் யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவா சிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் (2தெச. 2:1-12).

மீண்டும் பவுலடியார், ஆகிலும், ஆவியானவர் வெளிப் படையாய்ச் சொல்லுகிறபடி, *பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிக ளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசு வாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும், ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்* (1தீமோ.4:1-3).

தொடர்ந்து, *நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக் கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தரா கிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகு தலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளை யிடுகிறதாவது, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிர தையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய*

*சாந்தத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு புத்தி சொல்லு ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைளுக் கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகுங்காலம் வரும்* (2 தீமோ.4:1-4) என்று எழுகிறார்.

இறுதியாக, இயேசுவானவர் தாமே என்ன கூறுகிறார் என்பதையும் கவனியுங்கள். *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்றார்*( மத்.7:21-23).

ஒருவன் சுலபமாக வஞ்சிக்கப்படவும், தவறாக வழிநடத்தப்படவும் முடியும். அற்புதங்கள் சம்பந்தமாக மட்டுமல்ல கிறிஸ்துவின் உபதேச காரியங்களிலும் இது உண்மையாயிருக்கிறது. அற்புதங்கள் இன்றும் நடக்கிறது என்று சொல்லுபவர்களை நீங்கள் கவனித்தால், அவர்கள், நாங்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுவதையும் பார்க்க முடியும். கர்த்தர் தங்களோடு நேரடியாகப் பேசுகிறார் என்று சொல்லும் இவர்கள், அதே கர்த்தர் தந்த வேத வசனங்களில் சொல்லாத பல பெயர்களைத் தங்களுக்குச் சூட்டிக்கொண்டு வேத வசனங்கள் சொல்லும் சபைக்கு மாறாக, பலவிதமான பெயர்களை சபைப் பிரிவுகளுக்கு தங்கள் விருப்பம் போல் வைத்துக் கொள்வார்கள். அவர்களுடைய பிரசங்கங்களையும், செய்திகளையும் நீங்கள் கவனித்துப் பார்த்து அவைகள் வேத வசனங்களுக்கு எதிராக இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளும்படி உங்களை ஊக்கப்படுத்துகின்றேன். அவர்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் என்பது இதன் மூலம் உறுதிப்படும்

மேலுமாக, பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலினாலே நாங்கள் அற்புதங்கள் செய்கிறோம் என்று

சொல்லுகிறவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிடப்பதோடு, தங்களுக்குள்ளாக ஒற்றுமை இல்லாமல் ஒருவரையொருவர் எதிர்த்துக் குற்றப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இங்கே எழக்கூடிய நியாயமான கேள்வி இதோ, வித்தியாசமானவைகளை ஏவி வித்தியாசமான காரியங்களை இவர்களுக்குப் போதித்து இவர்கள் ஒருவரையொருவர் எதிர்ப்பதற்கு பரிசுத்த ஆவியானவர் துணை நிற்கிறாரா என்பது. அப்படியிருக்குமானால், பரிசுத்த ஆவியானவர் தன்னைத் தானே எதிர்த்துக் கொள்ளுகிறார் என்று தானே பொருள் படும்! கண்டிப்பாக அப்படி இருக்க முடியாது. ஆகவே தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெறாமல், வேறு ஆவியினால் செயல்படுகிறார்கள் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம்.

அற்புதங்கள் இன்று இல்லை என்று நாம் விசுவாசிப்பதால், அவர்கள் நம்மைப் பார்த்து தேவ வல்லமையில் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று சொல்லுவார்கள். ஆனால், அது உண்மை அல்ல, தேவனிலும், அவருடைய வல்லமையிலும் நமக்கு அவர்களைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கை உண்டு. கடந்த காலங்களில், தேவன் அற்புதங்கள் நடப்பித்தது போல இந் நாட்களில் அற்புதங்கள் நடப்பிக்க அவர் தெரிந்து கொள்ள வில்லை. இந்நாட்களில், அவரால் அற்புதங்கள் செய்ய முடியாது என்பதல்ல அதன் பொருள். பூமியின் மண்ணினாலே முதல் மனிதனைப் படைத்த அவரால், இன்றைக்கும் மனிதனை மண்ணி னாலே உருவாக்க முடியும். ஆனால், அவர் தேவன் என்பதையும், தான் வல்லமையுள்ளவர் என்பதையும், திரும்ப திரும்ப நிரூபிக்க அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், தேவன் தன்னுடைய வல்லமையை முன்பே நிரூபித்துவிட்டார்.

இப்பொழுது, அதே தேவன் ஆணையும், பெண்ணையும் படைக்க இயற்கைச்சட்ட விதிகளின்படி கிரியை நடப்பிக்கிறார். அதுபோலவே, அவராலே பிணியாளிகளைக் குணப்படுத்தவும், குருடருக்கு வெளிச்சம் கொடுக்கவும், மரித்தோரை எழுப்பவும், இன்னும் வல்லமையான காரியங்களை நடப்பிக்கவும் முடியும் அவர் அப்படிச் செய்ய நினைத்தால். ஆனால், அப்படிச் செல்வதற் கான அவசியம் எதுவுமில்லை. இன்றைக்குத் தமது வசனங்கள் மூலமாகப் போதிக்கவும், விசுவாசம் உண்டாக்கவும், இரட்சிக்கவும், நம்பிக்கை அளிக்கவும் முடியும். அற்புதங்கள் எதை

நிரூபிக்கும்? அற்புதங்கள் நடைமுறையில் இருந்த காலகட்டத்தி லேயே அது குழந்தைத்தனமான நிலைமைக்கு ஒப்பிடப்பட்ட தோடு அவைகள் முடிந்துபோகும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அத்தோடு, நிறைவானது வரும்போது குறைவானது மாற்றப்படும் என்றும் வாக்களிக்கப்பட்டுள்ளது (Iகொரி.13:8-12) அது

அநேகர் நம்புவது போல், இன்றைக்கு அற்புதங்கள் நடைமுறையில் இல்லை. அப்படியிருக்குமானால் அது எங்கே இருக்கிறது? யாருக்காக இருக்கிறது? யாராலே இருக்கிறது? அவைகளுக்கான நோக்கம் என்ன?

# கிறிஸ்தவர்களாக இல்லாத கொஞ்சம் பேர்

## Some Who are Not Christians

அநேகர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், வேத வார்த்தைகளின்படி இப்படிச் சொல்லிக்கொள்ளுகிற எல்லோரும் கிறிஸ்தவர்கள் அல்ல. ஒரு வேளை இப்படிச் சொல்லுவது உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆயினும் இது உண்மை.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற ஒரு தகப்பனுக்கும், ஒரு தாய்க்கும் ஒருவன் *பிள்ளையாகப் பிறப்பதினாலேயே* அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட மற்ற மதங்களில் சரீரப் பிறப்பு ஒருவனை புத்தனாகவோ, இஸ்லாமியனாகவோ, இந்துவாகவோ மாற்றுவதற்குப் போதுமானதாக உள்ளது. கிறிஸ்தவத்தில் இருக்கும் கத்தோலிக்கப் பிரிவார் கூட இதேவிதமான சிந்தை கொண்டவர்களாகவே உள்ளனர். இருப்பினும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தில் இக்கருத்து உண்மையல்ல. கிறிஸ்தவக் குடும்பத்தில் ஒருவன் பிறப்பதினாலே அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. ஒருவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்துக் கீழ்ப்படிதலோடு அவரைப் பின்பற்றி தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடியும் பிறந்து தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிக்கும் போதே (யோவான் 3:3-5) அவன் கிறிஸ்தவனாகிறான்.

குழந்தையாக இருக்கும்போது தண்ணீரால் தெளிக்கப் பட்டாரென்பதாலேயே அவன் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. முதலாவது, ஞானஸ்நானம் என்பது தண்ணீரால் தெளிக்கப்படுவதல்ல. வேதாகம ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுவது (கொலோ. 2:12; ரோமர் 6:3,4; அப்.8). இரண்டாவது, ஞானஸ்நானம் பெறுகிற ஒருவர் சத்தியத்தைக் *கேள்விப்பட்டு* (ரோமர் 10:17) *விசுவாசித்து* (ரோமர் 10:10) தன்னுடைய பாவங்களிலிருந்து *மனந்திரும்பி* (லூக்கா 13:3), இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கையிட்ட (மத்.10:32) பிறகே ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். ஞானஸ்நானம் பெறுகிற ஒருவருக்காக வேறொருவர் இதைச் செய்ய முடியாது. *மூன்றாவது* நன்மை தீமை அடையும் வயதை எட்டும் வரைக்கும் குழந்தைகள் தங்களுடைய

செயலுக்குப் பொறுப்பாளிகளாகமாட்டார்கள் (மத்.18:1-3). ஆகையால், ஒரு குழந்தைக்கு ஞானஸ்நானம் என்ற பெயரில் தண்ணீர் தெளிக்கப்படுவதால் அக்குழந்தை கிறிஸ்தவராகி விடாது. கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசங்களுக்கும் ஒருவன் தன்னை ஒப்புக்கொடுப்பதின் மூலமே கிறிஸ்தவனாக முடியும். தெளிப்பு ஞானஸ்நானம் மனித போதனை.

இன்றும், பல பிரிவனைச் சபையார் ஏற்றுக் கொண்டிருப்பது போல், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிப்பதாலேயே ஒருவன் கிறிஸ்தவனாகிவிட முடியாது. கிறிஸ்தவனாவதற்கு ஒருவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டுமென்பது உண்மைதான். ஆனால், அதுவே போதுமானதல்ல. அப்படியிருக்குமானால் பிசாசுகள் விசுவாசித்து நடுங்குகிறபடியால் பிசாசுகள் கிறிஸ்தவர்களாயிருக்க முடியும் (யாக்.2:19). ஒருவன் கிறிஸ்தவனாவதற்கு, கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசம் கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிய வேண்டுமென்ற விருப்பம் உடையதாக இருக்க வேண்டும் (எபி.5:8,9; I பேதுரு 2:21). இன்னும் அந்த விருப்பம் இறுதிவரை உண்மையாயிருக்க வேண்டுமென்பதாகவும் இருக்க வேண்டும் (வெளி. 2:10).

ஏதோ ஒரு பிரிவினைச் சபையில் ஒருவர் அங்கமாகியிருப்பதினாலேயே அவர் கிறிஸ்தவனாகி விடுவதில்லை. அநேக பிரிவினைச் சபைகள் உண்டு. அவைகளில் அவர்கள் அங்கமாக இருப்பதால் நாங்கள் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றும் போது தான் கிறிஸ்தவர்களாகிறார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுவதின் விளைவாக ஒருவர் ஒருபோதும் ஏதாவதொரு பிரிவினைச் சபையில் அங்கமாகிவிட முடியாது. ஏனெனில், இயேசுவானவர் இப்பூமியில் வாழ்ந்தபோதும், மனிதர்களுக்காக இயேசு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்திய போதும் எந்தவொரு பிரிவினை சபையும் இருக்கவில்லை!

வேதாகமம் கிறிஸ்தவர்களை மட்டும் உருவாக்குகிறது (அப்.11:26). வேதாகமம் நம்மைப் பிளவுபடுத்தாது. மாறாக, கிறிஸ்துவில் நம்மை ஒற்றுமைப்படுத்தவே செய்யும் (Iகொரி.1:10). ஆகவே, ஒருவர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட

ஏதாவதொரு சபையில் அங்கமாயிருந்தால், அவன் வேத வசனங்களின்படியான ஒரு கிறிஸ்தவன் அல்ல. ஒருவேளை நானும் கிறிஸ்தவன் தான் என்று பல காரணங்கள் கூறி வாதிடலாம். ஆனால், உண்மை என்னவெனில், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி அவன் ஒரு கிறிஸ்தவனல்ல. அவன் வாதிடுவது போல கிறிஸ்தவன் தான் என்றால், அவன் பிரிவினை சபையில் அங்கமாக இல்லாமல் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக இருப்பான் (ரோமர் 16:16). மற்றும் ஒரு கிறிஸ்தவனாக மாத்திரமே இருப்பான் (அப்.2:47 பேதுரு 4:16). வேதாகமத்தைத் திறந்து படித்து உண்மையை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருவன் தன்னைக் கிறிஸ்தவனென்று சொல்லிக் கொள்வதாலேயே கிறிஸ்தவனாகி விடுவதில்லை. இந்த உலகத்தில் ஒருவன் தன்னை எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். ஆயினும், அப்படிச் சொல்லிக் கொள்வதற்கான நிரூபணங்களையும், ஆதாரங்களையும் ஒருவனால் கொடுக்க முடியவில்லையானால், அவன் போலியானவனாகவும், ஏமாற்றுக்காரனாகவும் இருப்பான். வேத ஆதாரமில்லாமல் யார் வேண்டுமானாலும் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ள முடியும். ஒருவன் தன்னைப் பற்றி என்ன சொல்லிக் கொண்டாலும், தன் நிலையை வேத வசனத்தைக் கொண்டு தன் வாழ்க்கையின் மூலம் தன்னை ஒரு கிறிஸ்தவன் என்று நிரூபிக்க முடியவில்லையென்றால் அவன் கிறிஸ்தவனே அல்ல (மத். 7:21-23).

உங்கள் ஆன்மீக நிலையை நீங்கள் சீர்தூக்கிப் பார்க்கும்படி நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் படி நீங்கள் கிறிஸ்தவரா? கிறிஸ்தவர் தான் என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா? கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து விட்டீர்களா? தேவனுக்கு நீங்கள் உண்மையாயிருக்கிறீர்களா? அப்படி இல்லையானால், கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று உண்மையான கிறிஸ்தவனாக மாறுங்கள் (மாற்கு 16:15,16; அப்.2:38). அப்பொழுது கிறிஸ்து உங்களை இரட்சித்து அவருடைய சபையில் உங்களைச் சேர்ப்பார். நீங்கள் எந்தப் பிரிவினை சபையையும் சேராமல், வேதாகமம் சொல்லும் கிறிஸ்தவராக மாத்திரம் இருப்பீர்கள் (அப்.2:47;11:26). இறுதியாக, அவருக்கு உண்மையாக இருப்பதன் மூலம், நித்திய காலத்துக்கும் நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக முடியும் ( ரோமர் 6:23; யோவான் 14:1-3).

பாடம் - 34

# சபை சரித்திரம், சுருக்கமாக

## Chirch History, in Brief

**சபை என்பது என்ன?**

(தேவன்)... நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார் (எபே.1:23). சபை என்பது ஆவிக்குரிய சரீரம்.

**ஒரு சரீரத்திற்கு எத்தனை தலைகள் உண்டு? ஒரு தலைக்கு எத்தனை சரிரங்கள் உண்டு?**

ஒரே சரீரம் (எபே.4:4).

**கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு எப்படிப்பட்ட ஐக்கியம் கொண்டுள்ளனர்?**

நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள் (I கொரி.12:27).

இக்கேள்விகளிலிருந்தும், இதற்கு வேதாகமம் தரும் பதில்களிலிருந்தும் எப்படிப் பிதாவாகிய தேவனுக்கு ஒரே பேறான குமாரன் இருக்கிறாரோ, அதுபோல குமாரனுக்கும் ஒரு சரீரம், ஒரு சபை, ஒரு மணவாட்டி, ஒரு ராஜ்யம், ஒரு குடும்பம் உண்டு. மத்தேயு தொடங்கி வெளிப்படுத்துதல் வரையிலான புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது சபை ஒன்றுதான் என்பதை நீங்கள் காண முடியும். சபைக்கான தேவனுடைய திட்டம் தெளிவானது. ஆவிக்குரிய குடும்பத்தில் பிறப்பதற்கான திட்டம் தெளிவானது அவரை எப்படி ஆராதிக்க வேண்டுமென்ற அவரின் விருப்பம் தெளிவாகவே எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனி கிறிஸ்தவனாகவும், பல கிறிஸ்தவர்களைக் கொண்ட ஒரு சபையாகவும் அவர் விரும்பும் ஐக்கியம், வேலை, இன்னும் வாழ்க்கை போன்றவை தெளிவாகவே உள்ளது. அவர் நமக்காகக் கொடுத்த இச்செய்தியில் எவ்வித முரண்பாடும் இல்லை.

**இவையெல்லாவற்றிலும் ஓர் ஒருமைத் தன்மை இருக்க வேண்டியது தேவ விருப்பமானால்**

கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் மத்தியில், திரும்பின பக்கமெல்லாம் பிரிவினைகள் காணப்படுகிறதே. அது எதினால்? வித்தியாசமான பெயர்களாலே அழைக்கப்படுகிற, வித்தியாசமான கொள்கைகளைப் போதிக்கின்ற பல சபைப் பிரிவுகள் இருப்பது ஏன்?

சாத்தான் தேவனுடைய எதிரியாக எப்பொழுதும் இருந்து கொண்டுள்ளான். கிறிஸ்துவுக்கு மரணத்தை ஏற்படுத்துவதன் மூலம் மனிதனை இரட்சிக்கும் தேவ திட்டத்தைச் சீர்குலைக்க அவன் சிலுவையின் மூலம் முயற்சித்தான். ஆனால், அவனுக்கு ஆச்சிரியத்தை உண்டாக்கும் விதமாக, கிறிஸ்துவின் மரணமே இரட்சிப்புக்கான வழியாக மாறிவிட்டது!

ஆகையால், சாத்தானின் அடுத்த திட்டம் என்ன? மனிதர்களுடைய பெருமை, அவர்களுடைய அபிப்பிராயங்கள் பிரிவினை எண்ணங்கள், தேவனைக் காட்டிலும் தங்களை நேசிக்கும் மனப்பான்மை இவைகள் மூலமாகக் கிரியை நடப்பித்தான். இதன் விளைவாக கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களுக்கு மத்தியில் பிரிவினை வந்தது.

முதல் நூற்றாண்டில் கொரிந்து சபையார், மனிதர்கள் பெயராலே தங்களை அழைத்துக் கொண்டதைப் பவுலடியார் கடிந்து கொண்டார் (1கொரி.1) இன்றைக்கு, சபை பிரிவுகளை ஆரம்பித்தவர்களின் பெயராலே அழைக்கப்படுகின்ற சபை பிரிவுகள் இருக்கின்றனவா? நமக்காக இரத்தம் சிந்திய இயேசுவின் பெயராலே அழைக்கப்படாமல் மனிதர்களுடைய பெயரைத் தரித்துக்கொள்ளும் மக்கள் இன்றைக்கு இருக்கிறார்களா? கொள்கை வேறுபாடுகளால் முதல் நூற்றாண்டில் பிரிவினைகள் இருந்தன. Gnostic கொள்கையைப் பின்பற்றினவர்கள் இருந்தார்கள். வேறுவகையான சில பிரிவுகளும் இருக்கவே செய்தது. மனிதர்கள் தங்கள் அறிவுக்கும், அபிப்ராயத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவ சித்தத்துக்கு எதிராகச் செயல் படும் சவாலை மனிதன் எப்பொழுதும் ஏற்படுத்தியே வந்திருக்கிறான்.

கிறிஸ்து இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையை பாதிக்கும் படியான வழி விலகுதல் நடக்கும் என்பது குறித்த எச்சரிப்பு புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால், ஒட்டுமொத்த சபையும் இல்லாமல் போகாது. ஏனெனில், இயேசு கிறிஸ்துவின் மூலமும், தீர்க்கதரிசிகள் மூலமும் சபையை ஒட்டு மொத்தமாக அழிக்க முடியாது என்று வாக்களிக்கப்பட்டுள்ளது (மத்.16:18;தானியேல் 2:44). 1 தீமோத்தேயு 4:1-3 வசனங்களில், போதிக்கப்படப்போகும் சில தவறுகளைக் குறித்துப் பவுலடியார் பட்டியலிடுகிறார். *ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச்*

*சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். விவாகம்பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல* (1தீமோ.4:1-4).

இப்படிப்பட்ட உபதேசப் பிழைகளாலும், ஒவ்வொரு சபைக்குமான ஆளுகை அமைப்பை மீறி, ஒரு பிராந்தியற்கே அதிகாரமுடைய ஒரு தலைமை என்று பிஷப்புகளாகத் தங்களை உயர்த்திக் கொண்டதாலும், இன்னும் இப்படிப்பட்ட மாறுபாடான கொள்கைகளாலும் மூல உபதேசங்களிலிருந்து வழிவிலகுதல் வளர்ந்து புதியதொரு சபைப் பிரிவு வந்தது. இப்படித்தான் ரோமன் கத்தோலிக்கர்கள் தங்களது முதல் போப்பை - கி.பி- 606-ல் ஏற்படுத்தினார்கள்.

பிறகு 1054-ல் ரோமன் கத்தோலிக்க அமைப்புக் குள்ளாகவே, ஆச்சார காரியங்களை அப்படியே கடைபிடிக்க வேண்டுமென்பவர்கள் பலமாக எழும்பினபடியால் அவர் களுக்குள் பிரிவினை ஏற்பட்டது. இதன் விளைவாக *கிரேக்க ஆர்தொடெக்ஸ்* (greek orthotox) நடைமுறைக்கு வந்தது.

அதன் பிறகு 1500 களின் மத்தியில், ஐரோப்பாவில் இருந்தவர்கள் ரோமானியர்களிடத்தில் காணப்பட்ட ஊழல் மற்றும் பல தவறுகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுத்து *புராட்டஸ்டண்ட்* (Protestant) சபைகளை ஏற்படுத்தினார்கள். இவர்கள் அந்த அமைப்புகளைத் தோற்றுவித்தவர்களின் பெயராலோ அல்லது

இப்படிப்பட்ட பிரிவினை சபை கூட்டங்கள் பற்றிய கூடுதலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் அட்டவணையைக் கவனித்துப் பாருங்கள்.

சரித்திரத்தை நாம் படிக்கும்போது, கத்தோலிக்க தலைமைக் குருவின் அதிகாரத்தை ஏற்படுத்திக்கொள்ளாமல், ரோமின் கொள்கைகளுக்குக் கட்டுப்படாமல் போன பல பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

உலகளவில் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், சபை ஆரம்பிக்கப்பட்ட கி.பி.33-ம் வருடத்திலிருந்து உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இருந்து கொண்டே உள்ளனர்.

1700 களின் இறுதிவாக்கில், அமெரிக்காவிலும் , ஐரோப்பாவிலும் இருந்த குறிப்பிடத்தக்கவர்கள் இப்படியாகச் சொன்னார்கள். ஒரு சீர்திருத்தம் போதுமானதல்ல, திரும்பவும் வேதாகமத்திற்குச் சென்று, முதல் நூற்றாண்டில் எப்படிக் கிறிஸ்தவர்களாக மாத்திரம் இருந்தார்களோ அதுபோன்ற புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்கள். அதன் விளைவாக தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த அம்மனிதர்கள், வேதாகமத்தைப் படித்து அந்த வேத வசனங்களின் போதனைகளுக்கும், அவரவர்கள் அங்கம் வகித்த சபைகளில் அவைகளுக்கு கொடுக்கப்படும் விளக்கங்களின் வேறுபாடுகளை அலசி ஆராய்ந்தார்கள். அவர்கள் வேதாகமத்தை மாத்திரம் பின்பற்றுவதில் நேர்மையுடையவர்களாக இருந்தபடியால், கிறிஸ்துவின் சரீரத்துக்குள்ளாகும்படியாய் ஞானஸ்நானம் பெற்று, அவரவர் வாழ்ந்த பகுதிகளில் கிறிஸ்துவின் சபையை அவர்களால் மீட்டமைக்க முடிந்தது. அதே விதமான வேண்டுகோளைத்தான் இப்பொழுது நாங்கள் எல்லோருக்கும் விடுக்கிறோம்.

**பல பிரிவினைச் சபைகளின் ஆரம்பம் பற்றிய தகவல்கள்**

| பெயர் | தோற்றுவித்தவர் | இடங்கள் | வருடங்கள் |
|---|---|---|---|
| ரோமன் கத்தோலிக்கம் | போனபைஸ் III | ரோம் | 606 |
| லுத்தரன் சபை | மார்டின் லூதர் | ஆக்ஸ்பெர்க், ஜெர்மனி | 1520 |
| பிரஸ்பைட்டேரியன் | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து | 1536 |
| ஆங்லிக்கன் சபை | எட்டாம் ஹென்றி மன்னர் | இங்கிலாந்து | 1535 |
| பாப்திஸ்து சபை | ஜான் ஸ்மித் | ஹாலந்து | 1607 |
| மெதடிஸ்ட் சபை | ஜான் வெஸ்லி | லண்டன், இங்கிலாந்து | 1729 |
| இவாஞ்சிலிக்கல் சபை | ஜேக்கப் ஆல்பிரைட் | பென்சில்வேனியா | 1803 |

| | | | |
|---|---|---|---|
| மார்மன் சபை | ஜோசப் ஸ்மித் Jr | நியூயார்க் USA | 1830 |
| ஏழாம் நாள் சபை | WM மில்லர் | மசாசூ சாட்ஸ் USA | 1830 |
| யெகோவா சாட்சிகள் | சார்லஸ் ரசல் | பென்சில்வேனியா | 1872 |
| அசெம்பளீஸ் ஆப் காட் | குழு | ஆர்கன்சார் | 1914 |
| கிறிஸ்தவ சபை | குழு | கான்சால் நகரம் | 1906 |
| ஆ ங் லி க் க ன் ஆர்த்தோடக்ஸ் | ஜேம்ஸ் பிதீஸ் | வடக்கு கரோலினா USA | 1963 |
| பிரதரன் சபை | பிட்டர் பெக்கர் | ஜெர்மனி | 1708 |
| சர்ச் ஆப் காட் | KH பர்ரூஸ் | ஜார்ஜியா | 1914 |
| நசரேய சபை | 3 குழுக்கள் இணைந்து | அமெரிக்கா | 1919 |
| இங்கிலாந்து சபை | எட்டாம் ஹென்றி | இங்கிலாந்து | 1531 |
| எபிஸ்கோபர் சபை | இங்கிலாந்து சபையின் | அமெரிக்கப் பதிப்பு | 1789 |
| மென்னோ நாட்ஸ் சபை | மென்னோ சைமன் | ஸ்விட்சர்லாந்து | 1525 |
| சால்வேசன் ஆர்மி | வில்லியம் பூத் | லண்டன் | 1878 |
| CSI சபை | குழு | | |

இப்படி ஆயிரக்கணக்கான சபைப் பிரிவுகள், இயேசு தம்முடைய *குடும்பமாகிய* சபையைத் தோற்றுவித்த பிறகு மனிதர்களாலே ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், கிறிஸ்துவின் சபை இயேசுவாலே மத்.16:18-ல் வாக்களிக்கப்பட்டு கி.பி.33 -ல் பெந்தெகொஸ்தே நாளில், இயேசு மரணத்திலிருந்து உயிர்தெழுந்த பிறகு தோற்றுவிக்கப்பட்டது. அந்த நாளில், யோவேல் தீர்க்கதரிசி சொன்னதின் நிறைவேறுதலாக பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டார். அந்த அப்போஸ்தலர்கள் அந்நாளில் அங்கே கூடியிருந்தவர்களில் 3000 பேர் கிறிஸ்துவில் தங்களுக்கிருக்கும் விசுவாசத்தை அறிக்கையிட்டு தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அப்போஸ்தலர் 2: 47 - ன் படி, இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.

## பாடம் - 35

# மகத்தான நியாயத்தீர்ப்பின் நாள்

# The Great Judgment Day

*நியாயத்தீர்ப்பின் நாள்* உண்டு என்று வேதாகமம் போதிக்கிறது. பல காரணங்களினிமித்தம் அது ஒரு மகத்தான நாளாயிருக்கப் போகிறது.

- *அந்த நாள் எந்த நாளென்று எந்த ஒரு மனிதனும் அறியான் - அந்த நாள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாள்.* வேதாகமத்தில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே என்று (எபி.9:27).
- *ஏற்கனவே வாழ்ந்த எல்லோரும் மற்றும் இனி வாழப்போகிற அனைவரும் அந்நாளில் அங்கே இருப்பார்கள்.* இது கற்பனை செய்து பார்க்கக் கடினமாக உள்ளது. ஆனால், இது தேவ வல்லமைக்கு அப்பாற்பட்டதல்ல. பவுலடியார் இவ்விதம் எழுதியுள்ளார். ஆதலால், நம்மில் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12).
- *இயேசுவின் மூலமும், அவருடைய வார்த்தையின் மூலமும் தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பார்.* எபிரெய ஆசிரியர், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் (எபி. 12:23) என்று சொல்லியுள்ளார். மேலும், பவுலடியார் இதுகுறித்து அத்தேனே பட்டணத்தாருக்கு விவரிக்கும் போது, *அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒருநாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்* (அப்.17:30,31). கிறிஸ்து வும் இவ்விதம் கூறியுள்ளார், *என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் என்று* (யோவான்12:48).

✪ *நாம் நம்முடைய வார்த்தைகளிலும், எண்ணங்களிலும், வாழ்க்கை யிலும் எப்படியிருந்தோமா அதனடிப்படையில் நியாயந்தீர்க்கப் படுவோம்.* கிறிஸ்துவானவர் இவ்விதமாக வெளிப்படுத்தி யுள்ளார். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத் திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாத வைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தை களினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார் (மத்.12:35-37). வெளி.21:12 யும் இங்கே வாசிக்கவும்.

✪ *அந்நாளில் கர்த்தர் பட்சபாதமுடையவராயிருக்கமாட்டார்.* தேவன் பற்றி இவ்விதம் சொல்லப்பட்டிருக்கிறது. *தேவனி டத்தில் பட்சபாதமில்லை* என்று (ரோமர் 2:11). கொலேச பட்டணத்து சபையாருக்குப் பவுல் இவ்விதம் விளக்கினார். அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை (கொலோ.3:25). கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் மனமாற்றமடைந்த அச் சமயத்தில், புறவினத்தைச் சார்ந்தவர்கள் முதன் முதலாக நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தபோது, வசனம் இப்படியாகச் சொல்லுகிறது. அப்பொழுது பேதுரு பேசத்தொடங்கி: தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்கு பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் (அப்.10:34,35).

✪ *நியாயத்தீர்ப்பு இறுதியானது* ஒருவன் மரித்துவிட்டால், அவன் நிலையை கர்த்தரின் சமூகத்தில் மாற்ற முடியாது. அவனுடைய உறவுகள் தங்கள் ஜெபத்தாலோ அல்லது மற்றவர்களுக்குப் பணம் கொடுத்து அவன் இரட்சிப்படையும் படியாய் ஜெபிக்கச் சொல்வதாலோ எவ்விதப் பயனும் இல்லை. அவனுக்கு மறுபடியுமான ஒரு வாய்ப்பு என்பது இல்லை. *பாவக்கடன் நிவிர்த்தி* என்னும் கொள்கை மனிதர் களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று. இப்போதனையை நாம் வேதாகமத்தில் எங்கும் காணமுடியாது. ஆகவேதான்,

இப்பூமியில் நாம் *வாழ அனுமதிக்கப்படுகிற காலத்திலேயே,* தேவச் சித்தத்திற்கு கிறிஸ்துவின் உபதேசத்தின்படி கீழ்ப்ப டிந்து மரணபரியந்தம் உண்மையாயிருந்தது (மாற்கு 16:16; வெளி. 2:10) தேவனைச் சந்திக்க ஆயத்தமாக வேண்டும்.

- *கர்த்தர் துன்மார்க்கரை நித்திய ஆக்கினைக்கும் நீதிமான் களையும் நித்திய ஜீவனுக்கும் நியாயந்தீர்ப்பார்* ( மத். 25:46). பரலோகம் எவ்வளவு காலத்துக்கோ, அதே கால அளவைக் கொண்டது தான் நரகமும். இதன் பொருள், இழந்து போனவர்கள், பாவிகள், தேவனை ஏற்காதவர்கள், உண்மையாய் பக்தி நிலையில் வாழாதவர்களாகிய இவர்கள் நரகத்தில் தள்ளப்பட்டு முடிவில்லாத காலத்துக்கு வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கும். இப்படிச் செய்வது சரியான ஒன்றா? ஓர் அன்புள்ள தேவன் இப்படிச் செய்வாரா? இங்கே நாம் தேவனைக் குற்றப்படுத்த முடியாது. தேவன் எல்லா மனிதர்களையும் நேசித்து எல்லாக் காலத்திலும் வாழ்ந்த, வாழும் மக்கள் அனைவரும் இரட்சிக்கப் படும் படியாய்த் தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பிக் கொடுத்தார். அந்த அன்பை, அந்தக் கிருபையை மற்றும் அந்த இரக்கத்தை நாம் அசட்டை செய்வோமானால், நம்முடைய செயலுக்கான விளைவை நாம் சந்தித்துத்தான் ஆக வேண்டும். அப்படியிராமல் யாரெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் பரலோக பாக்கியம் பெற்று என்றென்றும் கர்த்தரோடு வாசம் செய்வார்கள்.

நியாயத்தீர்ப்பு பற்றியும், அதற்கு நம்மை ஆயத்தமாக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், நீதிமான்களென்று நியாயந் தீர்க்கப்படுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்கள் பற்றியும் அறிவும், தெளிவும் உள்ளவர்களாய் நாம் ஒவ்வொருவரும் இருப்போமாக! +

## பாடம் - 36

# வேதாகமம் நரகம் பற்றி பேசுகிறது

## The Bible Speaks About Hell

நரகம் என்றால் என்ன? இக்கேள்வியும், அதற்கான பதிலும் ஒவ்வொருவருக்கும் சுவாரசியமாக இருக்கும். நான் இப்படிச் சொல்வது காரணத்தோடு தான். நரகம் எப்படிப்பட்டதென்றும், அங்கே செல்வதைத் தவிர்க்க எல்லாவித முயற்சியும் எடுக்க வேண்டுமென்பது பற்றியும் அறியாதபட்சத்தில், பிசாசினுடைய நரகத்தில் நம்முடைய நித்தியத்தைக் கழிக்க நேரிடும்.

அநேகர் நரகம் என்பது ஒரு புராணக்கதை சார்ந்த இடம் என்று எண்ணுகின்றனர். வேறுசிலர், அது பயத்தை ஏற்படுத்தும் என்பதால், நரகம் பற்றித் தெரிந்து கொள்ளவே விரும்புவதில்லை. இன்னும், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலர் கூட, *நரக அக்கினி* மற்றும் *ஆக்கினைத் தீர்ப்பு* பற்றி பேசும் பிரசங்கியார்களைக் குற்றம் சாட்டுகின்றனர். ஏனெனில், அப்படிப்பட்ட வேதனை மிகுந்த இடத்திற்கு ஒருவன் அனுப்பப்படுவான் என்பது தேவனை அநீதியுள்ளவராகக் காட்டிவிடும் என்று.

மத உலகில், தீமை செய்தவர்கள் நிர்மூலமாக்கப்படும் அல்லது அழிக்கப்படும் ஓர் இடம் என்று நரகத்திற்கு விளக்கம் கொடுக்கின்றனர். அதாவது நரகம் போனவுடன் அவர்கள் ஆத்துமாக்கள் அழிக்கப்படும், அதன் மூலம் அவர்கள் இல்லாமற் போவார்கள் என்று. ஆனால், இக்கூற்று உண்மையல்ல என்று நாம் பார்க்கப் போகிறோம்.

வேதவசனங்களின்படி நரகம் என்பது பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் உண்டாக்கப்பட்ட ஓர் இடம் என்றும், அதேவேளையில், துன்மார்க்கருக்கும், தேவனற்றவர்களுக்கும் அவர்களுடைய மரணத்திற்குப் பிறகு நித்திய தண்டனையைக் கொடுக்கும் இடமாக இருக்கிறதென்றும், இது என்றென்றும் நீடிக்கும் தாங்க முடியாத தண்டனைக்கான அக்கினிக் கடல் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

### நரகம் என்பது ஓர் நிஜமான இடம்

நரகம் என்பது ஓர் நிஜமான இடம் என்று வேதவசனங்களில் பேசப்பட்டுள்ளது. கிறிஸ்து *ஆத்துமாவைக்* கொல்ல

*வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்* (மத்.10:28) என்று சொல்லி யுள்ளார். தன்னைத் தள்ளிய ஒரு பட்டணத்தை குறித்து, கிறிஸ்து வானவர், வானபரியாந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே நீ பாதாள பரியாந்தம் தாழ்த்தப்படுவாய் என்று கூறியுள்ளார்(லூக்கா 10:15). பக்தி யாகவும், அதே நேரத்தில் பக்தியற்ற நிலையிலும் இருந்தவர் களை இயேசு கண்டித்து, இப்படிச் சொன்னார். *இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினாலும் கேளாமலும், இருதயத் தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கிய மாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத் திருக்கிறது. காதால் மந்தமாய்க் கேட்டு தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று* (மத். 13:15). அதாவது, அந்த மாய்மால மான மதத்தலைவர்கள் தவறான உபதேசங்களைப் போதித்தார் கள். அப்போதனை முடிவிலே அவர்களை நரகத்திலே கொண்டு போய்த் தள்ளத்தக்கதாக இருந்தாலும், ஒருமுறை ஜனங்கள் அதை ஏற்றுக்கொண்டுவிட்டால், மறுபடியும் அவர்களைச் சத்தியத்தில் நடத்துவதென்பது மிகவும் கடினமான ஒன்று.

அதே சுவிசேஷ புத்தகத்தில், இயேசு மேலுமாக இவ்விதம் கூறினார். *மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங் களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்ய வேண்டும்,* அவைகளையும் விடாதிருக்க வேண்டும் (மத்.23:23). சில சந்தர்ப்பங்களில் *நரகம்* என்ற வார்த்தை மரணத்தைக் குறிப்பதாக மொழிபெயர்க்கப் பட்டிருப்பது உண்மையே. தாம் வாக்குத்தத்தம் செய்யும் சபை யைக் கட்டுவது பாதாளத்தின் வாசல் - நரகம் - மேற்கொள்ள வில்லையென்று சொல்லப்பட்டுள்ளது (மத். 16:18). ஆனால், நாம் மேற்கோள்காட்டிய வசனங்களில் உள்ள நரகம் என்னும் வார்த்தை நித்திய ஆக்கினைக்கான ஓர் இடமாக இருக்கிறது. இது சொல்லர்த்த ரீதியில் நரகம் என்ற இடத்தையே குறிக்கிறது. அந்த இடத்தில் தான் துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள்.

நியாயத்தீர்ப்பின் நாளில், துன்மார்க்கர் அடையப்போகும் தண்டனை குறித்து கிறிஸ்து விவரமாகப் பேசியுள்ளார். *அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர் களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே*

*போங்கள்* (மத். 25:41). இந்த வேதபகுதி நீதிமான்களுக்கான பரலோகம் எப்படி உண்மையான, என்றென்றைக்குமான ஓர் இடமோ, அதுபோல், நரகமும் நிஜமான நித்தியான இடம் என்று தெளிவுபடுத்துகிறது. நரகத்திலே *உடனடியாக அழிக்கப்படுவார்கள்* என்ற பொய் போதனை துன்மார்க்கர்களுக்கு எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கக் கூடியதாக இருந்தாலும், வேத வசங்கள் இப்போதனைக்குத் துணை நிற்பதில்லை.

**நரகம் எதைப் போன்று இருக்கும்?**

நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும், நித்திய காலத்திற்கும் தண்டனை பெறும் ஓர் இடம். II தெச.1:7-9 வசனங்களில் பவுல் *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது* என்று கூறுகிறார். நரகம் இரண்டாம் மரணம் என்றழைக்கப்படுகிறது. அதன் பொருள், தேவனிடமிருந்து நித்திய காலத்திற்கும் பிரிக்கப்படக் கூடிய ஓர் இடம். *அக்கினியும், கந்தகமும் எரிகின்ற கடல்* என்று சொல்லப்பட்டுள்ளது (வெளி.21:8). அதுமாத்திரமல்ல, அழுகையும், பற்கடிப்பும் உள்ள ஓர் இடம் என்றும் விவரிக்கப்பட்டுள்ளது (மத்.25:30).

**யார் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள்?**

நரகத்திற்குப் போவோர் பற்றி யோவான் இவ்விதம் எழுதியுள்ளார். *பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். இன்னும் என்னுடனே பேசினவன் நரகத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான்* (வெளி. 21: 8,15).

இவர்களைப் போன்று நரகத்திற்கு அனுப்பப்படுவோர் பட்டியல் நீண்டதாக உள்ளது. மாம்சக் கிரியைக்காரர்கள், பாவிகள், தேவனற்றவர்கள், தேவனையும் கிறிஸ்துவையும் விசுவாசிக்காதவர்கள், தங்கள் நீதியின் கிரியை மூலம் இரட்சிப்படைய

விரும்புவார்கள், மாய்மாலக்காரர்கள், பக்தி வேஷம் தரித்துத் தவறு செய்பவர்கள் என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இவர்களெல்லாம் இழந்து போனவர்கள். அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனபடியால், தேவனைச் சந்திக்க ஆயத்தமாகாதவர்கள்.

**நீங்கள் நரகம் செல்ல விரும்புகிறீர்களா?**

நீங்கள் ஒருவேளை கிறிஸ்தவராக - ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவராக இல்லையானால், நீங்கள் நித்தியத்தை நரகத்திலே கழிக்க விரும்பாதவராயிருந்தால், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்படிய வேண்டும். நீங்கள் இழந்து போன நிலையில் மரிக்க வேண்டிய அவசியமில்லை. நிச்சயமான நரகாக்கினையிலிருந்து தப்பிக்க வேண்டுமானால், தேவனில் *விசுவாசம்* வைத்து பாவங்களிலிருந்து *மனந்திரும்பி* இயேசுவை தேவனுடைய குமாரனென்று *அறிக்கை செய்து* பாவமன்னிப்புக்கென்று *ஞானஸ்நானம்* பெற்றுக்கொள்ள வேண்டும் (மாற்கு 16:16; அப். 2:38). இப்படி நீங்கள் செய்யும்போது கர்த்தர் உங்களை இரட்சித்து, அவருடைய சபையில் சேர்த்துக்கொள்வார். அதன் பிறகு, ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவராக கர்த்தருடைய ஆவிக்குரிய குடும்பத்தின் அங்கமாக நீங்கள் ஆசீர்திக்கப்பட்டவர்களாய், பாதுகாக்கப்பட்டவர்களாய் வாழ்வீர்கள். பிறகு, ஒரு நாளில் தேவாதி தேவனோடு என்றென்றும் அவருடன் இருப்பீர்கள்.

முடிவுரை

காலமும், சமயமும் இருக்கும்போதே இந்த வாய்ப்புகளைப் படிக்கிற ஒவ்வொருவரும் கீழ்ப்படியும்படியாய் நான் ஜெபிக்கிறேன். கர்த்தரின் வார்த்தை சொல்லுவதை நினைத்துக் கொள்ளுங்கள். எபி.2:1-4-ம் வசனங்களில், *ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டும். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்?*

## பாடம் - 37

# வேதாகமம் பரலோகம் பற்றி பேசுகிறது

# The Bible Speaks About Heaven

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் மரித்துப் போவோம் அல்லது இந்த சரீரத்தைக் களைந்து போடுவோம் என்று வேதாகமம் போதிக்கிறது. (I தெச.4:16,17). இன்னும், அன்றியும் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறதென்று (எபி.4:27) சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலன் பவுல் இப்படியாக அறிவித்திருக்கிறார். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (IIகொரி.5:10) என்று.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு முக்கியமான கேள்வியென்னவெனில், ஒருவனுடைய மரணத்துக்கும், நியாயத்தீர்ப்பிற்கும் மத்தியில் என்ன நடக்கும்? என்பது. அதாவது, ஒருவனுடைய ஆத்துமா எங்கிருக்கும்? என்பது. அவன் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பானா? இன்னும் உணர்வுள்ளவனாக இருப்பானா? அல்லது கல்லறைக்குள்ளேயே தொடர்ந்து இருப்பானா? அல்லது சுயநினைவற்றவனாக மரித்தோருக்கான இடத்தில் இருப்பானா?

லாசரு - ஐசுவரியவான் பற்றிய உவமையை லூக்கா 16: 19-30 வசனப் பகுதியில் இயேசு சொல்கிறார். ஏழை மனிதனாகிய லாசருவின் ஆத்துமா தேவ தூதர்களாலே ஆபிரகாமின் மடியில் கொண்டுபோய் விடப்பட்டது. அந்த இடம் பரதீசு என்று விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஐசுவரியாவானின் ஆத்துமா அக்கினி ஜூவாலை நிறைந்த வேதனைப்படும் இடத்திற்குச் சென்றுள்ளது. அங்கே ஐசுவரியவான் சத்தமிட்டு *தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி லாசருவின் விரல் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என், நாவைக் குளிரபண்ணும் படி அனுப்ப வேண்டும் என்று அபயமிட்டான். அதற்கு ஆபிரகாம் மகனே, நீ பூமியில் உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசரும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான் நீயோ வேதனைப்படுகிறாய் என்றான்.*

அத்தோடு இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து வரவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்.

அங்கே அந்த ஐசுவரியவான், அப்படியானால் தகப்பனே என்னுடைய ஐந்து சகோதரர்களும் இந்த வேதனையுள்ள இடத்திற்கு வராதபடி லாசருவை அனுப்பும் என்று வேண்டிக் கொண்டான். அதற்குப் பதிலளித்த ஆபிரகாம், அங்கே மோசேயும், தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒருவன் செவிகொடுக்கவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் சென்றாலும் நம்பமாட்டார்கள் என்றார். இதில் அடங்கியுள்ள ஓர் உண்மையென்னவெனில், மரித்தவர்கள், மரணத்திற்குப் பிறகு தங்கள் நிலைகளை மாற்றவோ அல்லது பூமிக்குத் திரும்பி வந்து உயிரோடிருப்பவர்களுக்குக் காட்சியளிக்கவோ முடியாது என்பது.

**உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் எப்பொழுது நடக்கும்?**

இயேசு சொன்ன உவமையின்படி ஐசுவரியவான் வேதனையுள்ள இடத்திலும், லாசரு தேற்றப்படக்கூடிய இடத்திலும் ஏற்கனவே இருக்கிறார்கள். அப்படியானால், பொதுவான உயிர்த்தெழுதலும் (யோவான் 5:28,29) நியாயத்தீர்ப்பும் எதற்கு? அதினால் என்ன பயன் என்று சிலபேர் கேட்கலாம். ஆனால், இங்கே குழப்பம் ஒன்றுமில்லை. கவனியுங்கள், இப்பூமியில், ஒரு கொலைகாரன் பிடிக்கப்படும் பொழுது அவனுக்கான தீர்ப்பு வரும் வரைக்கும் காவலில் வைக்கப்படுகிறான் குற்றத்திற்கான தீர்ப்பு வந்த பிறகு தண்டனைக் கால முழுவதும் சிறையில் அடைக்கப்படுவான். அது போலத்தான் நீதிமானான ஒருவன், உண்மையுள்ள ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது அவன் உனடியாகப் பரதீசு செல்வான். துன்மார்க்கமான ஒருவன் மரிக்கும் போது உடனடியாக வேதனையுள்ள இடத்திற்குப் போவான்.

பிறகு இயேசு வரும் போது (I தெச.4:16) எல்லோரும் அவருடைய சத்தத்தைக் கேட்பார்கள். அப்பொழுது கல்லறைகளிலிருந்து சரீரம் உயிர்ப்பிக்கப்பட்டு பரத்திலோ அல்லது வேதனையுள்ள இடத்திலோ உள்ள ஆத்துமாக்களோடு ஒன்றிணைக்கப்பட்டு, அழியாத ஒரு மேனிக்கு மறுரூபமாக்கப்பட்டு நியாயத்தீர்ப்படையவும், தண்டனையைப் பெற்றுக்கொள்ளவும் கர்த்தருக்கு

முன்பாக வெளிப்படும் (அப்.17:31; மத். 25:31-46). இறுதியாக, இயேசு ஆண்டவரின் வார்த்தையின்படி, துன் மார்க்கரும், இரட்சிப்படையாதவர்களும் நித்திய ஆக்கினைக்கும், நீதிமான்கள் நித்திய ஜீவனுக்கும் போவார்கள் ( மத். 25:46).

**இது ஒரு உவமை தானா?**

சிலபேர், லாசரு ஐசுவரியவான் பற்றிய விவரிப்பு ஓர் உவமை தானே என்கிறார்கள். ஆனால், வேத வசனங்களில் அது அப்படியாகச் சொல்லப்படவில்லை. அது ஒரு உவமையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் சொல்லப்பட்டிருக்கும் உண்மையில் எந்தவொரு மாற்றமுமில்லை. அதன் பொருள் மரித்துப்போனவர்கள் யாரென்பது பற்றியும், அவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றியும், இப்பூமியில் அவர்கள் சம்பந்தப் பட்டவர்களைப் பற்றியும் உணர்வுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் அல்லது அழிந்து போனவர்கள் என்பதன் அடிப்படையில், அவர்களின் ஆவி அல்லது ஆத்துமா பரதீசுக்கோ அல்லது வேதனையுள்ள இடத்திற்கோ போகிறது. நியாயத்தீர்ப்பின் நாளில், அவர்கள் ஒரு திறந்த புத்தகமாக்கப்பட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக் காகவும் ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் நித்திய நரகத்திற்கோ அல்லது பரலோகத்தில் என்றென்றும் கர்த்தருடனிருக்கும் படியாகவோ அனுப்பப்படுவார்கள்.

மரணமும் நியாயதீர்ப்பும் இறுதியானதாக இருக்கும். அவர்கள் நரகம் போனாலும், பரலோகம் சென்றாலும் அது நித்திய மானது. மறுபடியும் ஒரு வாய்ப்போ அல்லது நரகம் முடிந்து போகும் என்பதோ இருக்காது. சம்பந்தப்பட்ட ஆத்துமா பரலோகத்திலோ, நரகத்திலோ என்றென்றுமாய் வாழும்.

**பரலோகம் பற்றி வேத வசனங்கள் எப்படி விவரிக்கிறது.**

- அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத் தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய பிள்ளை களுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத் தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்கு கீழ்ப் பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது ( ரோமர் 8:20-22).

❖ கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமக வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம் (II பேதுரு 3:10-13).

❖ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது ( வெளி.2:11).

கர்த்தரைச் சந்திக்க ஆயத்தப்படவும், புதிதும், பூரணமானதுமான இடத்தில் என்றென்றும் வாழ ஆசைப்படவும் இந்த நாள் நம்மிடத்தில் உள்ளது. ஒருவேளை நாம், நம்மை ஆயத்தமாக்கவில்லையென்றால், இழந்து போனவர்களாய் நித்தியத்தைக் கழிக்கும்படி என்னை விட்டு அகன்று போங்கள் என்று கர்த்தர் நம்மைப் பார்த்துச் சொல்வதைக் கேட்க நேரிடும்! ✝

## பாடம் - 38

# இயேசு யார்?

## Who Is Jesus Christ?

இன்றைக்கு, உலகத்தில் இருக்கும் கொஞ்சம் பேர் இயேசு கிறிஸ்து என்னும் பெயரை ஒருபோதும் கேட்காதவர்களாக இருக்கக்கூடும். பெரும்பாலானவர்கள் நிச்சயமாகக் கேட்டிருப் பார்கள். ஆனால், கேட்டவர்களில் அநேகர் உண்மையாகவே அவர் யார் என்பதில் குழப்பமுடையவர்களாகவும், தெளிவற்றவர் களாகவும் இருக்கிறார்கள். இலட்சக்கணக்கானவர்கள் அவரில் விசு வாசம் வைக்கிறார்கள், பல்லாயிரக்கணக்கானோர் அவரில் விசு வாசம் வைக்காலுமிருக்கிறார்கள். *இயேசு கிறிஸ்து யார்?*

இயேசு தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவரு டைய தன்மையின் சொரூபமாயிருக்கிறார் என்று எபி.1:3 -ல் விவரிக்கப்பட்டுள்ளது. யோவான் 1:1, அவரை *வார்த்தை* என்றழைத்து அந்த வார்த்தை ஆதியில் *தேவனோடிருந்தது* என்றும், அந்த வார்த்தை *தேவனாயிருந்தது* என்றும் கூறுகிறது. இதன் பொருள், அவர் தேவத்துவத்துள் ஒருவராக, தேவனோடும், பரி சுத்த ஆவியானவரோடும் இருக்கிறார் என்பதே. தேவன் நித்திய முள்ளவராக ஆதியும் அந்தமும் இல்லாதவராக விவரிக்கப்பட்டி ருக்கிறார். இதே தன்மை, மாம்சத்தில் பிறந்து இயேசு கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறவருக்கும் உண்மையாயிருக்கிறது (ஏசாயா 63:16). மேலும், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது (எபி. 13:8). தேவனுடைய படைப்பின் ஆரம்பமாகவும் (வெளி.13:8). தேவனுடைய படைப்பின் முடிவாகவும் ( வெளி.3:14) முந்தின வரும், பிந்தினவருமாயிருக்கிறார் ( வெளி.22:13).

### இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிறார்

ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித் தார் என்று ஆதி.1:1-ல் வாசிக்கிறோம். இங்கே தேவன் என்ற எபிரெய வார்த்தை *பன்மைத் தன்மை* கொண்டு பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவியானவரை உள்ளடக்கியதாக உள்ளது. ஆதியாகமம் 1:26- ல், தேவன் *நமது* சாயலாக மனுஷனை உண்டாக்குவோமாக என்றார். பவுலடியார் இயேசு கிறிஸ்து பற்றி மேலும் இவ்விதம் விவ ரிக்கிறார். *சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக் கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது* என்று (கொலோ.1:16,17).

**இயேசு பூமிக்குரிய தகப்பனில்லாமல், தேவ வல்லமையினால் கன்னி மரியாளிடத்தில் பிறந்தார்.**

தனித்துவம் கொண்ட இவருடைய பிறப்பு ஏசாயா தீர்க்க தரிசியைக் கொண்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது. ஆதலால், ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானு வேல் என்று பேரிடுவாயாக (ஏசாயா 7:14). மத்தேயு 1:20,21-ல், *அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமார னாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறு வாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாயக; ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என் றான் என்று* சொல்லப்பட்டுள்ளது. மேலும், வசனம் 23- ல், *அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாயாக. இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.* இந்த வசனங்களிலிருந்து இயேசுவின் பிறப்பு அற்புதமானது என்றும், அவர் ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானவர் என்றும் பார்க்க முடிகிறது.

**இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன்**

தேவத்துவத்தில் தான் சுதந்தரித்த வல்லமைகளையும், உரிமைகளையும் துறந்து, பிதாவாகிய தேவனுக்கு முன்பாகத் தம்மைத் தாழ்த்தி அவருக்குத் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக் கொடுத்து, தன்னுடைய சரீரப் பிறப்பின் மூலம் மனிதர்களுக்குச் சகோதராயிருக்கும்படி வந்தார் (பிலி.2:3-8). மனிதனைப் பாவங் களிலிருந்து இரட்சிக்கும்படியாகவும் இப்பூமிக்கு வந்தார். யோவான் 3:16,17-ம் வசனங்களில் இதை நாம் வாசிக்க முடியும். தேவன், *தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். இயேசு தாமே இவ்விதம்*

கூறியுள்ளார். *இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவும் மனுஷகுமாரன் வந்திருக்கிறார்* என்றார் (லூக்கா 19:10). இயேசு கிறிஸ்து தாம் தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க அற்புதங்கள் செய்தார்.

இயேசுவின் அற்புதங்கள் சம்பந்தமாக யோவான் இப்படி எழுதியுள்ளார். *இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது* ( யோவான் 20:30.31).

இயேசு கிறிஸ்து அவரில் விசுவாசம் வைப்பவர்கள் இரட்சிப்படைந்து நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் படி சிலுவையில் மரித்தார்.

இது பற்றிய பவுலடியாரின் வார்த்தைகளைப் பாருங்கள். *அன்றியும், சகோதரரே நான் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்* ( I கொரி.15:1-4 ). இயேசு கிறிஸ்து தமக்குக் கீழ்படிகிறவர்களை அவருடைய குடும்பத்தில் சேர்ப்பதாக வாக்களித்தார். அக்குடும்பத்தை என்னுடைய சபை என்றழைத்தார் ( மத்.16:18 ). அவர், இவர்களுக்காக மரித்தார். அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு இரட்சிப்படைந்தவர்கள் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள். இது அவருடைய சரீரம் என்றழைக்கப்படுகிறது. அச்சரீரத்திற்கு அவர் தலையாயிருக்கிறார். சபை அவருடைய மணவாட்டி என்றும் அழைக்கப்படுகிறது. அவருடைய பெயரைத் தரித்துக்கொண்டு, கிறிஸ்துவின் சபையாயிருக்கிறது ( ரோமர் 16:16; எபே.5:23,25; அப். 2:47; 4 ;12; எபே.3:15). இரட்சிக்கப்பட்ட அவருடைய சபையின் மக்களுக்காக ஒரு நாளில் மேகங்களின் மேல் திரும்ப வருவார்.

*இயேசு கிறிஸ்து தேவத்துவத்தில் இரண்டாவது நபராக உள்ளார் [பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். மத். 28:1,20].*

ஒரே தேவன், ஒரே கர்த்தர் (கிறிஸ்து) மற்றும் ஒரே ஆவி (பரிசுத்த ஆவியானவர்) உண்டு (எபே. 4:1-6). வானத்திலும், பூமியிலும் கிறிஸ்துவுக்கு சகல அதிகாரமும் உண்டு (மத்.28:18). அவர் இப்பொழுது தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருந்து ராஜாதிராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆளுகை செய்கிறார் (I தீமோ.6:15). சபையாகிய தம்முடைய மக்கள் பரலோகத்தில் என்றென்றும் தம்முடன் இருக்கும்படியாகக் கூட்டிச் செல்லும்படி ஒரு நாளில் மீண்டும் வருவார். *புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் [எபே.5:25-27].* இயேசுவும் இப்படியாக வாக்களித்தார். *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள், என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்* (யோவான் 14:1-3) என்றார்.

**நீங்கள் இயேசுவில் விசுவாசம் வைக்கிறீர்களா?**

யோவான் 8:24-ல் இயேசு இப்படியாக எச்சரித்தார். *நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்று.* அவரில் நாம் விசுவாசம் வைத்தால் அவருக்குக் கீழ்ப்படிந்து (மாற்கு 16:16) மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருப்போம் (வெளி.2:10) மேலும் இயேசு, யோவான் 12:48-ல் இப்படியாக எச்சரித்துள்ளார். *என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் என்று.*

ஆகையால், நம்முடைய ஆன்மீக வாழ்வை பயத்தோடும், பக்தியோடும் நடத்துவோம். ஆமென்!!